# பண்டைக் கிரேக்கம்

இரா. நெடுஞ்செழியன். M.A



694
N:-52
N54
169149

694
4-54

# பண்டைக் கிரேக்கம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 DEC 1954
MADRAS

இரா. நெடுஞ்செழியன். M.A.

★

திராவிடப்பண்ணை
தெப்பக்குளம்..... திருச்சி.

முதற் பதிப்பு—1954.

VI-51
N54

ARCHIVES LIBRARY
109149
EGMORE MADRAS

உரிமையுடையது.

விலை ரூ. 1—0—0.

சிட்டி பிரஸ், மதுரை ரோடு, திருச்சிராப்பள்ளி.

## நாட்டுப் பிரிவுகள்

கிரேக்க நாடு ஆரம்பத்தில் நமது சேர சோழ பாண்டிய மண்டலங்களைப்போல, தெசாலி, ஹெல்லாஸ், பெலபோனீஸஸ் என்று மூன்று பெரும் பிரிவுகளாக இருந்தது. சிறிது காலத்திற்குப் பிறகு மாசிடோனியா என்ற வடக்குப் பகுதியிலிருந்த ஒரு மண்டலமும் கிரேக்க நாட்டோடு இணைக்கப்பட்டது. பண்டைக் கிரேக்கம் என்று குறிப்பிடப்படுவது, இந்த நான்கு மண்டலங்களையும் உள்ளடக்கிய நிலப்பகுதிதான். பண்டைக் கால கிரேக்கர்கள் கிரேக்க நாட்டை அடுத்துள்ள தீவுகளையும், சிறிய ஆசியாவிலுள்ள சில பகுதிகளையும் குடியேற்ற நாடுகளாகக் கொண்டிருந்தனர். கிரேக்கம் நான்கு பெரிய மண்டலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தாலும், பல்வேறு தனித்தனி ஆட்சிகளைக் கொண்ட சிறுசிறு அரசுகளாகத்தான் பிரிந்து கிடந்தது. ஒரு பெரு நகரமும் அதனைச் சுற்றியுள்ள சிற்றூர்களும் பேரூர்களும் சேர்ந்து ஒரு தனி அரசாகக் காட்சியளித்தது. இதற்குக் காரணம், ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் எளிய—நெருங்கிய தொடர்பு ஏற்படாதவகையில், மலைகளின் தடுப்புகள் ஆங்காங்கு காணப்பட்டதேயாகும்.

## பழைய நிலைமை

கி. மு. பன்னிரண்டாம் நூற்றாண்டு கிரேக்கத்தை நாம் ஓரளவுக்கு அறிந்துகொள்ளும் வகையில் வசதிசெய்து தருவன, ஹோமர் என்ற பெருங்கவி எழுதிய இல்லியட், ஓடிஸி என்ற இருபெருங் காவியங்களே யாகும். அவைகள் கற்பனைக் கதைகளையும்—கருத்துக்களையும்—நிகழ்ச்சிகளையும் பெரும் அளவுக்குக் கொண்டிருந்தபோதிலும், ஆங்காங்கு காணப்படும் சிறுசிறு குறிப்புகள், அக்கால கிரேக்கர்களின் வாழ்க்கை முறையைச் சிறிதளவு தெளிவுபடுத்துகின்றன.

அந்தப் பழம்பெரும் நாட்களில் ஒவ்வொரு நகரமும், ஒவ்வொரு அரசாக இருந்து வந்திருக்கிறது. அரசன் ஆளும் ஆட்சியே எங்கும் நிலவிற்று. அரசப் பதவி பரம்பரைப் பதவியாகவே கொள்ளப்பட்டு வந்தது. வல்லமை வாய்ந்த பரம்

பரைப் பிரபுக்களிலிருந்து அரசன் ஆட்சிக்குழு ஒன்றையும், ஆலோசனைக்குழு ஒன்றையும் தேர்ந்தெடுத்துக் கொள்வான். ஆட்சிக்குழு, அரசன் இடும் கட்டளைகளை ஏற்றுப், பல்வேறு அரசியல் பணிகளையும் செய்யும். ஆலோசனைக்குழு, அரசனுக்கு அவ்வப்போது பல்வேறு துறைகள் பற்றிய ஆலோசனைகளைக் கூறும். இரண்டு குழுக்களுக்கும், அரசனைக் கட்டுப்படுத்தும் உரிமையில்லை. அடிமைகளை வைத்துக்கொள்ளுவது, ஒப்புக் கொள்ளப்பட்ட சமூக அமைப்பாகவே இருந்து வந்தது. பெண் களுக்கு மிக்க மரியாதை கொடுக்கப்பட்டது. இருதாரத் திரு மண முறை ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஒருவனும் ஒருத்தியு மாக வாழவேண்டும் என்ற முறைதான் வற்புறுத்தப்பட்டது. போர்த்திறம் கொண்டிருப்பதும், உடலுறுதி பூண்டிருப்பதும் சிரிய பண்புகளாகக் கொள்ளப்பட்டன. ஒரு பகுதியோடு மற் றொரு பகுதி சண்டையிட்டுக்கொள்வது என்பது, இடையீடில் லாத ஒரு நிகழ்ச்சியாக இருந்து வந்தது. கப்பல் கட்டுதல், கப்பலில் கடற்பயணம் போகுதல் முதலியன அங்குப் பழக்கப் பட்ட பண்புகளாகும். கடற்கொள்ளை யிடுவது, பண்டைக் கிரேக்கர்களுக்குப் பிடித்தமானவொரு பழக்கமாகவே இருந்து வந்தது. புரோகிதர்களைப் புனிதர்களாகவும், கோயில்களைப் புனிதமான இடங்களாகவும் கருதி மரியாதை செலுத்தி வந்தனர். பலவித விழாக்கள் கொண்டாடியும் மகிழ்ந்தனர். விருந்தினரை வரவேற்று ஓம்புதல், கிரேக்க நாட்டின் பண் பாகக் கொள்ளப்பட்டது. மதநம்பிக்கையில் ஆழ்ந்த பற்றுடைய வராக இருந்தனர். பல கடவுள்களை வழிபாடு செய்தல் அவர்க ளிடம் பரந்து நிலவிற்று.

அந்தக் காலத்தில், மதத்தொடர்பான செயல்களில் பொதுப் படையாக ஈடுபடப் பல்வேறு அரசுகளையும் சேர்ந்த புரோகி தர்கள், தங்களுக்குள் ஒரு குழுவை அமைத்துக்கொண்டனர். இப்படிப்பட்ட குழுவில் பத்து அல்லது பன்னிரண்டு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் உறுப்புப் பெற்றிருந்தார்கள். இந்த மதக்குழு வைப்போன்ற பல குழுக்கள் கிரேக்க நாட்டின் எல்லாப் பகுதி களிலும் ஆங்காங்கு அமைந்திருந்தன. 'குறிசொல்லும் கடவுள்'

அமர்ந்திருப்பதாகக் கருதப்பட்ட டெல்பி என்ற இடம், மதக் குழுகூடும் முக்கியமான ஒரு இடமாக இருந்துவந்தது. ஆண்டுக்கு இருமுறை அந்த மதக்குழு கூடி, கோயிலுக்குச் சொந்தமான கட்டிடங்கள், நிலங்கள் ஆகியவற்றைக் காப்பாற்றுவது, கோயிலைச் சேர்ந்தோரை ஆதரிப்பது, விழாக்கள் வழிபாட்டு முறைகள் ஆகியவற்றைச் சரிவர நடத்துவது போன்ற பணிகளில் அது பெரிதும் ஈடுபட்டது. மதத்துறைச் செயல்களுக்காகவே ஆரம்பத்தில் நிறுவப்பட்ட இத்தகைய குழுக்கள், நாளடைவில் அரசியல் செயல்களையும் உருவாக்கும் அளவுக்கு விரிந்து வளர்ந்தது.

## சட்ட திட்டம்

வரலாற்றுக்காலத்தில், முதன் முதல் கிரேக்க நாட்டுக்குச் சட்டதிட்டங்களை வகுத்து, அவற்றை உருவாக்கிக் கொடுப்பதில் முனைந்து நின்றவன், ஸ்பார்ட்டா பகுதியைச் சேர்ந்த லைகர்கஸ். ஏறத்தாழ கி. மு. 825-ல் லைகர்கஸின் சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டன என்னலாம். லைகர்கஸின் சட்ட திட்டங்களால், முதலில் ஸ்பார்ட்டாவிலும், பிறகு அதனை யொட்டிக் கிரேக்க நாடு முழுவதும், பல மாறுதல்கள் ஏற்பட்டன. அந்த நாட்களில் மக்களிடம் நிலவி வந்த அளவுக்கு மீறிய ஆடம்பரங்கள் ஒழிக்கப்பட்டு, எளிய வாழ்வும், கடும் உழைப்பும் மக்களிடையே புகுத்தப்பட்டன. வீரமுள்ளவர்களாகவும், நாட்டுப் பற்றுடையவர்களாகவும் விளங்கும் வகையில் இளைஞர்களுக்குக் கல்வி போதிக்கப்பட்டது. இந்த நிலைமையை அடைய மற்ற வசதிகளெல்லாம் காவு கொடுக்கப்பட்டன. பிள்ளைகள் ஏழாவது வயதிலிருந்து பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டு, அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டு, கல்வி கற்பிக்கப்பட்டார்கள். மிகவும் உடல் நலங்குன்றி நைந்துபோன குழந்தைகள் சாகும்படி கைவிடப்பட்டனர். கடும்பசிக்கும் கொடிய வறட்சிக்கும், கடும் வெய்யலுக்கும் கொடிய குளிருக்கும் தாங்கும்படி, அவ்விளைஞர்கள் பயிற்சி விக்கப்பட்டனர். உடலுக்கு ஏற்படும் எந்த வலியையும், தொல்லையையும், அவர்கள் முணு முணுக்காமல் தாங்கிக் கொள்ளும் பழக்கத்தைப் பெறவேண்டும் என்பது, அக்கால

கிரேக்கரின் கொள்கை. விளையாட்டு உடற்பயிற்சியும், போர் முறைக் கவாத்தும் இடைவிடாமல் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டன. அவர்களைச் சிறந்த போர்வீரர்களாக ஆக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். அவர்கள் எல்லோரும் பொதுப்பந்தியில் உட்கார வைக்கப்பட்டனர். சாதாரணவகைச் சாப்பாடுதான் அவர்களுக்குப் பரிமாறப் பட்டது. உடற்பயிற்சியோடு. மொழி, இலக்கியம், இசை பற்றிய பயிற்சிகளும் அவர்களுக்கு அளிக்கப்பட்டன. ஆண் களைப்போலவே பெண்களுக்கும் மேற்சொல்லிய எல்லாவகைப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

சிறு பையன்களைவிட வயதானவர்களுக்குச் சிலபல வசதி கள் தரப்பட்டன, அவர்கள் பொதுப் பந்தியில் மேசைகளில் உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டுப், பரந்த பாசறைக் கூடாரங்களில் உறங்கவேண்டும். சில இடையீடுகளில், அவர்கள் தங்கள் தங்கள் குடும்பங்களைச் சென்று பார்வையிட்டுவிட்டு வரலாம். நல்ல இளமைப் பருவமடைந்தவர்கள், வாணிபம், உழவு, கைத் தொழில் போன்றவைகளில் கவனஞ் செலுத்த முடியாத அள வுக்குப், பொதுப்படையான அரசாங்கக் கடமைகளில் ஈடுபடுத் தப்பட்டார்கள். லைகர்களின் சட்டத்தின் விளைவால், பொன் வெள்ளி நாணயங்கள் அகற்றப்பட்டு இரும்பு நாணயங்கள் புகுத்தப்பட்டன. இதன் விளைவாக ஏழை எளிய மக்களிடமும் போதுமான அளவு நாணயங்கள் புழங்க வழி ஏற்பட்டது. அந்த நாட்களில் பணக்காரர்களிடமும், வியாபாரிகளிடமும் மட்டுமே பொன், வெள்ளி நாணயங்கள் பழக்கத்தில் இருந்து வந்தன; ஏழைகள் வறிதே விடப்பட்டனர். ஆனால் புதிய முறை வந்தவுடன், எல்லோரிடமும் நாணயங்கள் புழங்க ஆரம் பித்தன. (முதன்முதலில் பொன், வெள்ளி நாணயங்களைத் திராவிடத்திலிருந்துதான் கிரேக்க வணிகர்கள் கொண்டு சென் றனர்.)

திருமணங்கள் அரசாங்கத்தாரால் ஒழுங்குபடுத்தப்பட்டன. ஒரு குறிப்பிட்ட வயதுக்குமேல்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

லைகர்கஸின் சட்டத்தால், அரசாங்கம், அரசர்கள் என்று அழைக்கப்படும் இரண்டு தலைமை நீதிபதிகளால் ஆளப்பட வேண்டும் என்ற நியதி ஏற்பட்டது. இந்தப் பதவிகள், பரம்பரைப் பதவிகளாகவும், ஆனால் கட்டுப்படுத்தப்பட்ட அதிகாரம் உள்ளவைகளாகவும் ஆக்கப்பட்டன. வயதானப் பெரியோர்கள் அடங்கிய சபையே பொதுச்சபை என்றும், அதிலிருந்து அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபை, செனட் அல்லது ஆட்சிக் குழு என்றும் விதிக்கப்பட்டன. அரசர்கள் ஆட்சிக் குழுவுக்குத் தலைமை வகிப்பதும், போர்ப்படைகளை நடத்திச் செல்வதும் ஆன பணிகளைச் செய்வர். அரசர்களைத் தவிர ஐந்துபேர்களடங்கிய பஞ்சாயத்துச் சபை ஒன்றும் இருந்தது. இந்தச் சபையின் முக்கிய பணி, லைகர்கஸால் வகுக்கப்பட்ட சட்டதிட்டங்களை ஒழுங்காக நிறைவேற்றிவருவதும், அவைகளை மீறி நடப்பவர்களை விசாரித்துத் தண்டிப்பதும் ஆகும். அந்தப் பஞ்சாயத்தார்க்கும் பெருமளவு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. அரசர்களையும் குழுக்களையும் தடுத்து நிறுத்தவும், கட்டுப்படுத்தவும் அதிகாரம் கொண்டிருந்ததோடல்லாமல், சண்டையைப் பிற நாட்டோடு துவக்கவும், சமாதானம் ஏற்படுத்திக்கொள்ளவும் அவர்கள் அதிகாரம் படைத்திருந்தார்கள்.

## டிராக்கோ சீர்திருத்தம்

லைகர்கஸின் சட்டதிட்டங்கள் ஸ்பார்ட்டா பகுதியில் கடுமையான முறையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. அந்தச் சட்டதிட்டங்கள் ஸ்பார்ட்டாவுக்கு உயர்வையும், ஆக்கத்தையும் கொடுப்பதைக் கண்டுகொண்ட பிறபகுதிகளும், மெல்ல, அவைகளைக் கடைபிடிக்கத்தொடங்கின. அவைகளில் மிக முக்கியமானது அட்டிகா என்ற பகுதியாகும். அதன் தலைநகரான ஏதென்ஸ் அரசியல் அமைப்பைச் சீர்திருத்திக்கொள்வதில், ஸ்பார்ட்டா அளவுக்கு வளர்ந்தது. லைகர்கஸ் அளித்த அரசியல் சட்டதிட்டங்களை ஏற்ற அளவுக்கு எடுத்துக்கொண்டதோடு, ஏதென்ஸ், தானும் அவ்வப்போது சிலபல அரசியல் சீர்திருத்தங்களைச் செய்துகொண்டு வந்தது. கி. மு. ஏழாவது நூற்றுண்டில், ஏறத்தாழ கி. மு. 624-ம் ஆண்டு வாக்கில்

டிராக்கோ என்பவனால், ஏதென்ஸ் நகருக்குக் கடுமையான சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டன. சிறிய குற்றத்திற்கும் கொலைத் தண்டனை விதிக்கும் வகையில் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சலான் சீர்திருத்தம்

டிராக்கோவுக்குப் பிறகு, சில ஆண்டுகள் கழித்து, ஆட்சிப் பீடத்துக்கு வந்த சோலன் கி. மு. 594-ம் ஆண்டு வாக்கில், புதிய சட்டதிட்டங்களை வகுத்து, அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவந்தான். புதிய சட்டதிட்டத்தின்படி, அரசாங்கம், ஒரு ஆட்சிக்கு—பொதுமக்கள் அடங்கிய ஒரு பொதுச்சபை—ஒரு தலைமை நீதிபதி ஆகியோர் வசத்தில் ஒப்படைக்கப்பட்டது. அரியோபாகஸ் என்று அழைக்கப்படும் நீதிமன்றம், கல்வியை வளர்த்தல், ஒழுக்கம் நிலைநாட்டல், நீதி வழங்குதல், சட்டங்களை நிர்வகித்தல் போன்ற பணிகளைச் செய்யவேண்டும் என்று வரையறுக்கப்பட்டது.

அரியோபாகஸ் என்பது, ஆரம்ப நிலையில் ஒரு மரத்தடியில் நிறுவப்பட்ட, சாதாரணமான ஒரு நீதி மன்றமாகும். மினர்வா என்ற கடவுள் அந்த மரத்தடியிலிருந்துகொண்டு, வழக்கினை விசாரித்து நீதி வழங்குவதாகப் பன்னெடுங் காலமாக மூடத் தனமாக நம்பப்பட்டு வந்தது. அதன் அறிகுறியாக மினர்வா கடவுளின் சிலையொன்று அந்த மரத்தடியில் வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சிலைக்கு முன்னால், இருபுறங்களிலும், இரண்டு பெருங் கற்கள் போடப்பட்டிருந்தன. வழக்கொன்று விசாரணைக்கு வந்தால், வாதி ஒரு கல்லிலும், பிரதிவாதி மற்றொரு கல்லிலும் உட்காருவார்கள். நீதிபதிகள் மினர்வா கடவுளின் பக்கத்தில் இரண்டு பக்கங்களிலும் உட்கார்ந்து கொள்வார்கள். நீதிபதிகள் வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவார்கள். அந்தத் தீர்ப்பு மினர்வா கடவுளே வெளியிடுவதாக ஐதீகம். தீர்ப்பு வழங்கும்போது, எப்பொழுதாவது, நீதிபதிகள் சமமாகப் பிரிந்து நிற்க நேரிட்டால், இரண்டு சீட்டுகளைக் குலுக்கிப் போட்டு, மினர்வா சார்பாக ஒரு சீட்டை எடுப்பார்கள். அந்தச்

சீட்டை மினர்வா கொடுத்த வாக்காகக் கருதி அந்தச் சீட்டு விழுந்த பக்கம் தீர்ப்பு வழங்குவார்கள். மிகப்பழங்காலங்களில் 'மரத்தடி நீதி மன்றமாக' இருந்தது, நாளடைவில், கட்டிடமாக எழும்பி, நிலையான நீதி மன்றமாக மாறியது. இந்த நீதி மன்றத்தைத்தான் வலிவுள்ளதாகவும், அதிகாரம் வாய்ந்ததாகவும் ஆக்கினான் சோலன். அவன் வகுத்துக் கொடுத்த சட்ட திட்டத்தால் ஏதென்ஸ் நகரின் பெருமை சிறப்புற்றோங்கியது.

கி. மு. 560-ல் ஆட்சிப் பீடத்துக்கு வந்த பிஸிஸ்ட்ராடஸ், ஆட்சிக்குழு - பொதுச்சபை எல்லாவற்றையும் அகற்றிவிட்டுத் தானே சர்வாதிகாரியானான். அவனை யடுத்து வேறு சிலரும் சர்வாதிகார ஆட்சிமுறையையே கடைப்பிடித்தனர்.

## கிளிஸ்தெனிஸ் சீர்திருத்தம்

பின்னர் கி. மு. 510 ஆம் ஆண்டு வாக்கில் ஆட்சிப் பீடம் ஏறிய கிளிஸ்தெனீஸ், ஏதென்ஸில் உண்மையான மக்களாட்சி மலர்வதற்கான சீர்திருத்தங்களைச் செய்தான். ஏழை - பணக்காரன் என்ற இரு சாரார்க்கும் சம உரிமை நிலவும்படியான ஒரு அரசியல் அமைப்பை வகுத்தான். குடிமக்களில் பேராசை கொண்டவர் யாரும், பிற்காலத்தில், தம்மைத் தாமே சர்வாதிகாரிகளாக ஆக்கிக்கொள்ள முடியாத வகையில், கிளிஸ்தெனீஸ் ஒரு ஏற்பாட்டைச் செய்தான். கொடுமையாகவோ, சர்வாதிகாரமாகவோ நடந்துகொள்ள விரும்பும் யாரையும், ஆட்சிப் பீடம் விட்டு அகற்ற வேண்டுமானால், விசாரணை யில்லாமலேயே அவரைப் பத்து ஆண்டுக்காலம் நாடு கடத்தி வைக்கும் உரிமையைக் குடிமக்கள், தங்கள் வாக்குரிமையின் மூலம் பெறக்கூடியதொரு சட்டத்தைத் கிளிஸ்தெனீஸ் நிறைவேற்றினான். அதன்படி, யாரை மக்கள் நாடு கடத்த வேண்டும் என்று கருதுகிறார்களோ, அவரின் பெயரைக் கிளிஞ்சலின்மேல் எழுதிப் போடவேண்டும்; அப்படி ஒரு மனிதருக்கு மாறுபாடாக ஆறாயிரம் வாக்குகளுக்குமேல் விழுந்தால், அந்த மனிதர் ஏதென்ஸ் நகரில் எந்தப் பதவியையும் வகிக்க உரிமையற்றவராவதோடு,

நாட்டை விட்டு அகல வேண்டியவருமாகிறார். இந்தச் சட்டம் ஒரு பெரும் போக்காகக் காணப்பட்டாலும், நல்லவர்கள் பலரைக் கொடியோரின் தூண்டுதலின்பேரில் வெளியேற்றும் படியான நிலைமை இதனால் ஏற்பட்டது. இச்சட்டம் நன்மையை விட தீங்கே அதிகம் பயத்தது என்று கூறலாம். ஏதென்ஸ் நகரில் தோன்றிய பொறாமைக்காரர்கள், தங்களுக்கு மாறுபட்ட ரைகளை ஊரைவிட்டுத் துரத்த இதனைப் பெரிதும் பயன் படுத்தினர்.

கி. மு 429-ம் ஆண்டு வரையில், முப்பது ஆண்டுக்காலம் ஏதென்ஸ் நகரில் ஆட்சிபுரிந்துவந்த பெரிக்கிளிஸ் தன் திறமை யான ஆட்சியால், நிலையான மக்களாட்சி அமைப்பு முறையைக் காத்து ஓம்பிவந்தான்.

## உலகிற்கு எடுத்துக்காட்டு

இந்தக்காலத்தில், தம் ஆட்சிமுறையில் கையாள, ஜனநா யக நாடுகள் எந்த எந்த உயர்ந்த முறைகளைக் கடைப்பிடிக்கின் றனவோ, அவற்றில் பலவற்றையும், பண்டைய கிரேக்க நாட்டு அரசுகளில் புகுத்தி உலகிற்கு என்றும் எடுத்துக்காட்டாக விளங்கும்படி செய்தவர்கள் லைகர்கஸ், சோலன், கிளிஸ் தெனீஸ், பெரிக்கிளிஸ், எஜின் போன்ற அரசியல் அறிஞர் களாவர்.

மக்களாட்சி முறையின் தன்மையைப்பற்றியும், கடமை களைப்பற்றியும் சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாடில் போன்ற தத்துவாசிரியர்கள் பரப்பிய கருத்துக்கள் இன்றும் உலகோ ரால் போற்றிப் புகழப்படுகின்றன. அரிஸ்டாடில் நூற்றி ஐம்பத்தெட்டு கிரேக்க அரசியல் முறைகளைப்பற்றி விளக்கங் கொடுத்துள்ளார். இதிலிருந்து அக்கால அரசியல் அறிவு எந்த அளவுக்கு மேம்பட்டு விளங்கியிருந்தது என்பதை ஒருவாறு உய்த்துணரலாம். அரசனாட்சி, பரம்பரைப் பிரபுவாட்சி, பணக்காரனாட்சி, கொடுங்கோலனாட்சி, மக்களாட்சி என்ற முக்கியமான ஐந்துவகை அரசியல் முறைகளைக் கிரேக்க நாடு படிப்படியாகக் கடந்து வந்தது என்று கூறலாம்.

பண்டைக் கிரேக்க நாட்டு ஆட்சியில் மதக்குருவோ, மதமோ ஆதிக்கம் செலுத்தியதில்லை. ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் அரசியல் காரணங்களுக்காகப் போர் நிகழ்ந்து வந்திருக்கின்றனவேயல்லாமல், மதக் காரணங்களுக்காகப் போர் மூண்டதில்லை. டெல்பி கோயிலின் புரோகிதனுக்கு அடிபணிய வேண்டிய அவசியம் ஆட்சித் தலைவனுக்கு அங்கு என்றும் ஏற்பட்டதில்லை ஆனால் டெல்பியின் குறிசொல்லுதலைக் கேட்டு அதன்படி நடக்கும் மூட நம்பிக்கை ஆட்சியாளரிடத்தில் நிரம்பி யிருந்தது.

பண்டை நாட்களில், விடுதலை வேட்கையுணர்ச்சியும்,— கருத்துக்களும். கிரேக்க நாட்டில் ஊற்றெடுத்ததைப்போல வேறு எங்கும் ஊற்றெடுத்ததில்லை. ஆழ்ந்த சிந்தனைக்கும், அமைதியான விவாதத்திற்கும் பிறகு, பெரும்பான்மையரின் வாக்கெடுப்பின்மூலம், அரசியல்—உலகியல் நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதுபோன்ற கிரேக்கநாட்டுப் பழக்கம், இந்தக் காலத்து ஜனநாயக முறைக்கு அடிப்படையாகும். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே, இத்தகைய சீரிய அரசியல் அமைப்பு முறை கிரேக்கத்தில் நிலவிற்று என்பதை எண்ணும்போதும், எண்ணும்போதும் வியப்புணர்ச்சிகொண்டு மகிழ்வுறாமல் இருக்கமுடியாது.

வீண்பெருமை, பொறாமை. ஆதிக்கம் செலுத்தும் ஆசை, செல்வம் திரட்டும் ஆவல், வெறுப்புணர்ச்சி, சுயநலத்துக்காகக் காட்டிக்கொடுத்தல் ஆகிய இவற்றின் காரணமாகக், கிரேக்க அரசுகள் ஒன்றோடொன்று ஓயாமல் போரிட்டுக்கொண்டிருந்ததாலும், சிறிய ஆசியா, பாரசீகம், மாகிடோனியா போன்ற நாடுகளின் படையெடுப்புகளை அடிக்கடி சமாளிக்கவேண்டியிருந்ததாலும் கிரேக்க நாட்டில் ஒரேசீரான—அமைதியான வளர்ச்சி ஏற்பட இடமில்லாமற்போயிற்று; இல்லையாயின், உலகிற்குத் தந்துள்ள அறிவொளி இன்னும் எவ்வளவோ சிறப்புடையதாகக் காணப்பட்டிருந்திருக்கும்!

# கடவுள்கள்

பண்டைய கிரேக்கநாடு, அறிவு ஆற்றல், வீரம் தீரம் ஆகிய இவற்றில் மிகச் சிறந்து விளங்கியபோதிலும், மதக் கருத்துக் களில், குருட்டு நம்பிக்கையிலும், மூடப் பழக்கவழக்கத்திலும் திளைத்துத்தானிருந்தது. ஆனால் பிற்காலங்களில் மதம் அரசியலை ஆட்டிப்படைத்ததுபோல், அந்த நாட்களில் அங்கு ஆணை செலுத்தவில்லை. அரசியல் நடவடிக்கைகளையும், மத நட வடிக்கைகளையும் பெரும் அளவுக்கு ஒதுக்கித்தான் வைத்திருந் தனர். இந்தக் காலத்து மதங்களைக் குறிப்பிட்டுச் சொல்வது போல், இன்ன மதம் என்று பண்டைய கிரேக்க மதத்தைக் குறிப்பிட்டுச் சொல்வதற்கில்லை. பழங் கிரேக்க மதம் என்று தான் அதனைக் குறிப்பிடவேண்டும்.

பழங்கால கிரேக்க மக்கள் கற்பனைக் கடவுள்களையும், கருத்துக்கொவ்வா புராணங்களையும், இட்டுக்கட்டின இதிகாசங் களையும், அறிவுக்கொத்துவராத மோட்சலோக—நரகலோகங் களையும், வியப்புக்குரிய தேவர் நரகர்களையும், பொய்யான பேய்—பூதம்—பிசாசுகளையும், அர்த்தமற்ற ஜோஸ்யம்-மந்தரம் —வந்தனை வழிபாடுகளையும், இந்தக் காலத்து நமது நாட்டு மதவாதிகளைப்போல நம்பத்தான் செய்தனர். அவர்களுடைய மதத்திற்கு, "வேதநூல்" என்று ஒன்று இருந்ததாகத் தெரிய வில்லை. இன்றைய நமது நாட்டைப் போலவே, கிரேக்க நாட் டில் அன்று, ஊருக்கு ஊர், காலத்திற்குக் காலம் மதக்கோட் பாடு, நம்பிக்கை, வழிபாட்டுமுறை ஆகியவற்றில் சிறிது சிறிது மாறுபாடுகள் இருந்து வந்தன.

கிரேக்க நாட்டில் நிலவிவந்த மதக் கருத்துக்களுக்கு மாறு பட்டவழியில் சில அறிவியல் அறிஞர்களும், சில தத்துவாசிரியர்

களும் தம் சிந்தனைக்குப்பட்ட பகுத்தறிவுக் கருத்துக்களை மக்களிடம் எடுத்துக் கூறவும் செய்தார்கள். ஆனால் அவர்களின் தொகை மிகச் சிறியது; 'பக்தகோடி'களின் தொகை எல்லாக் காலங்களையும் போலவே அங்கும் மிகப் பெரியது! ஆனால் பிற்காலங்களைப் போல, மதம் வெறிபிடித்து ஆடவில்லை; அரசியலை ஆட்டிப்படைக்கும் நிலை ஏற்படாததால், மதக் கருத்துக்கு மாறுபட்டோரை அழித்து ஒழித்துவிடும் செயலை மதம் தானே செய்ய முடிந்ததில்லை; ஆனால் சமயம் வாய்க்கும்போது விட்டதில்லை. குருட்டு மத நம்பிக்கை பெரும்பாலோரின் உள்ளத்தில் குடிகொண்டிருந்த காரணத்தால்தான், சீர்திருத்தம் பேசிய பேரறிஞர் சாக்ரடீஸ் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார் சாக்ரடீஸின் வழக்கை, விசாரிக்கக் கூடிய அறுநூற்றுக்கு மேற்பட்ட நீதிபதிகளில், பெரும்பாலோர், சாக்ரடீஸ் கடவுள் கொள்கையில் மாறுபட்டிருந்தார் என்ற காரணத்துக்காகவே, அவருக்கு எதிராகத் தீர்ப்பளித்தனர். ஆற்றோடு நீந்துபவர்களின் எண்ணிக்கையைவிட, எதிர்நீச்சில் நீந்தத் துணிபவர்களின் எண்ணிக்கை எப்பொழுதும் மிகக் குறைவாகத்தானே எங்கும் இருக்கும்! அதற்குப் பழங் கிரேக்கம் மட்டும் எப்படி விதிவிலக்காகிவிடும்?

பண்டைக் கிரேக்கர்கள் பல்வேறுவிதமான கடவுளர்களை வழிபட்டனர். கடவுளர்க்குப் பூசை செய்தல், படையல் போடுதல் பலியிடுதல், விழாக்களெடுத்தல் போன்ற மூட வழிபாட்டு முறைகள் கிரேக்கர்களிடம் அந்த நாட்களில் சிறந்து விளங்கின. வாழ்க்கையில் ஏற்படும் நல்ல நிகழ்ச்சிகளுக்கும்—வாய்ப்புகளுக்கும் கடவுள் வழிபாடே முக்கிய காரணம் என்றும், கடவுளை வழிபடாவிட்டால் துன்பங்களும் துயரங்களும் ஏற்படும் என்றும் நம்பும் குருட்டு நம்பிக்கையும் பெரும்பாலோரிடத்தில் நிலவி வந்தது. அப்படிப்பட்ட நம்பிக்கையின் காரணமாக, வழிபாடுகளில் இடையீடு ஏற்படாமல் பார்த்துக்கொள்வதில் கண்ணுங் கருத்துமாக இருந்து வந்தனர்.

அவர்களின் வழிபாட்டிற்கிருந்த கடவுள்கள் ஒன்று, இரண்டல்ல, எண்ணற்றவை! அந்த ஆண்டவர்களில் 'ஏழை'களு

மிருந்தனர்; 'பணக்காரர்'களும் இருந்தனர்! 'சாதாரணமானவர்'களும் இருந்தனர், 'முக்கியமானவர்'களும் இருந்தனர்! அவர்களில் ஆண் வடிவத்தினர், பெண் வடிவத்தினர் மட்டுமல்லாமல், விசித்திர மிருகம்—பறவை வடிவத்தினரும் இருந்து வந்தனர்! முக்கியமான கடவுளர்களிலேயும், பன்னிரண்டு பேர்களைத்தாம் மிக முக்கியமான கடவுள்களாகப் போற்றினர், மத நம்பிக்கையாளர்கள். நமது நாட்டில் பிர்மா, விஷ்ணு ருத்திரன், விநாயகர், சுப்பிரமணியர் போன்றவர்கள் எப்படி முக்கியமான கடவுளர்களாகப் போற்றப்படுகின்றனரோ, அது போலவே ஜீயஸ், பொஸிடன், அப்பலோ, அரீஸ், ஹெப்பாஸ்டஸ், ஹெர்மீஸ், ஹிரீ, அத்தினே, அர்டெமிஸ், அப்ரோடிடே, ஹேஸ்தியா, டெமிட்டர் முக்கியமான கடவுளர்களாகப் பண்டைக் கிரேக்கத்தில் போற்றப்பட்டார்கள். மற்ற கடவுள்களைக் காட்டிலும் இந்தக் கடவுள்களுக்கு மிக்க மரியாதைகளும், ஆடம்பரமான விழாக்களும் செய்யப்படும். இந்தக் கடவுள்கள் தாம் நாளடைவில் ரோம் நாட்டுக்கும் குடியேற்றப்பட்டிருந்தார்கள். அங்கே இவர்களுக்கு முறையே ஜுபிடர், நெப்டியூன், அப்பலோ, மார்ஸ், வல்கன், மர்க்குரி, ஜுனோ மினர்வா, டயானு, வீனஸ், வெஸ்டா, செரெஸ் என்று பெயரிட்டு அழைத்தனர்.

நமது நாட்டில் இன்று இருந்துவரும் கட்டுக் கதைப் புராணங்களைப் போலவே, கிரேக்க நாட்டுக் கடவுள்களுக்கும் இருந்தன. கடவுள்களது லீலைகளையும், அவர்களது அதியற்புத விளையாட்டுக்களையும், அவதார ஆற்றல்களையும்–நடவடிக்கைகளையும் போற்றிப் புகழ்ந்துகொண்டு, மதத்தைக் கட்டிக்காத்து வரும் நமது நாட்டு ஆஸ்திகர்களுக்குச் சற்றும் சளைத்தவர்களல்லர் என்ற நிலைமையில்தான் கிரேக்கர்களும் கடவுள் புராணங்களைக் கட்டி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால் இரு நாட்டுக்கும் ஒரே ஒரு வேறுபாடு! கிரேக்க நாட்டில் அந்தக் காலத்தில் அத்தகைய புராணங்களை நம்பினர்; ஆனால் இன்று யாரும் அங்கே அவற்றை நம்புவதில்லை! நமது நாட்டிலோ அன்றும் நம்பினர்; இன்றும் நம்புகின்றனர்! அவ்வளவுதான்!

அந்த நாட்டினர் தங்கள் தவறை உணர்ந்தனர், உணர்ந்த அளவுக்குத் திருந்தினர்! ஆனால் நமது நாட்டில் தவறை உணரவும் மறுக்கின்றனர், பிடிவாதக்காரர்கள்!

கிரேக்கர்கள் ஏராளமான கடவுள் புராணங்களைக் கொண்டிருந்தனர். தங்கள் கற்பனைகளை எந்த அளவுக்கு எட்டச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு எட்ட விட்டனர்! ஜீயஸ் என்ற கடவுள்தான் கடவுளர்க்கெல்லாம் அரசராகக் கொள்ளப் பட்டார். இவருடைய வேலை மற்றக் கடவுளர்கள் தங்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்து வருகிறார்களா என்று கவனித்துக் கொள்வதும், ஒலிம்பிக் விழா நடத்தும்போது, அதற்குத் தலைமை வகிப்பதுமாகும். இவர், குற்றஞ் செய்வோரையும் கொடுமை செய்வோரையும் தண்டிப்பவர் என்றும், நற்பண்புகளையும் வீரத்தையும் வழங்குபவர் என்றும் பண்டைக் கிரேக்க மக்களால் கருதப்பட்டார். நமது நாட்டு விஷ்ணு தொப்புழிலிருந்து எப்படி பிர்மாவைப் 'படைத்தாரோ' அப்படித் தான், ஜீயஸும் தம் மூளையிலிருந்து மினர்வா என்ற கடவுளை 'பிறப்பித்தார்'! ஹிரி அல்லது ஜூனே என்ற கடவுள் ஜீயஸின் மனைவியாவார். ஜீயஸ் யாரேனும் குற்றம் புரிபவரைக் கண்டு விட்டால், உடனே தம் கையிலுள்ள இடியை விட்டுக் கொன்று போட்டு விடுவார் என்பது அவர்களது ஐதிகம்.

பண்டை கிரேக்க மக்கள் தங்கள் கடவுளர்களை எப்படி யெல்லாம் கற்பனை செய்து வந்தனை வழிபாடு செய்து வந்தார் கள் என்பது வேடிக்கையையும், வியப்பையும் தருவதாகும்.

**ஜீயஸ் (ஜூபிடர்):—** இவர் மேகத்தைக் கூட்டுபவர், இடியை முழக்குபவர், எல்லோர்க்கும் மேலாக ஆட்சி செலுத்துபவர், கடவுளர்க்கும்—மனிதனுக்கும் தந்தை என்று கருதப் பட்டவர். இவர் எப்பொழுதும் அரியணையில் உட்கார்ந்து கொண்டு, வலது கையில் இடியையும், இடது கையில் செங் கோலையும், வைத்துக் கொண்டிருப்பார். கடவுளர்களிலே இவர் அரசர் என்பதைக் காட்டும் அறிகுறியாக இவர் தோளின் மீது கழுகு ஒன்று உட்கார்ந்திருக்கும். இந்தக் கடவுளின் உருவச்சிலை

நாற்பது அடி உயரத்தில் தங்கத்தாலும் தந்தத்தாலும் இழைக்கப்பட்டு, ஒலிம்பியா என்ற இடத்தில் நிலநாட்டப்பட்டது. இந்தச் சிலை 'ஏழு அதிசயங்களில்' ஒன்ருகும். கிரேக்க நாட்டின் சிறந்த சிற்பியான பிடியஸ் இந்தச் சிலையை சமைத்தான். அந்தச் சிலை இப்பொழுது 'வணங்கும் கடவுளாக' இல்லை; கண்டு களிக்கும் 'காட்சிப் பொருளாக' இருக்கிறது!

**பொஸிடன் (நெப்டியூன்):** இவர் ஜீயஸ் கடவுளின் உடன்பிறந்தவர், கடலில் ஆதிக்கம் செலுத்துபவர் என்று கருதப்பட்டவர். பூகம்பத்தை உண்டாக்கும் தன்மையும் இவருக்கு உண்டாதலால், இவரை 'உலகக் குலுக்குபவர்' என்று ஹோமர் தம் இலக்கியத்தில் வர்ணித்துள்ளார். இவர் திரிசூலம் ஏந்திக்கொண்டு, கடற் குதிரைகளால் பூட்டப்பட்ட தேரில் உட்கார்ந்து கொண்டு கடல்மேல் செல்பவராகக் கொள்ளப்பட்டவர். இவருடைய மனைவி அம்பிட்ரிடே கடற் நாச்சியாராகக் கருதப்பட்டார். இவர்களையே அன்றி வேறுபல சிறு கடவுள்களும் இவர்களுக்கு வேலைக்காரர்களாக இருந்துவந்தனர். இவர்கள் எல்லோரும் இப்பொழுது வழிபாட்டினின்றும் ஒதுக்கப்பட்டவர்களே!

**அப்பலோ:** இவர் ஜீயஸ் கடவுளின் பிள்ளையாகவும், ஞாயிற்றுக் கடவுளாகவும் போற்றப்பட்டவர். இவரை ஒளிக் கடவுள் என்றும் அழைத்தனர். ஞாயிற்ருலாகும் நன்மைகளைப் பெறவேண்டி, இவருக்கு ரோடீஸ் என்ற இடத்தில் பெருங் கோயில் கட்டிச் சிறப்பான முறையில் வழிபாடுகள் செய்து வந்தனர். இவரின் சிலை, வெண்கலத்தால் மிகப்பெரிய அளவில் அடிக்கப்பட்டு ரோடீஸில் நிறுவப்பட்டது. இவருக்கு அங்கு அமைத்த கோயில் மிகப் பெரிய தோற்றமுடையதாகும். இதுவும் "ஏழு அதிசயங்களில்" ஒன்று. ஆரம்பத்தில் கிரேக்க மக்கள் ஹெலியாஸ் என்பவரைத்தான் ஞாயிற்றுக் கடவுளாகக் கொண்டனர். நாளடைவில் அந்தக் கடவுளின் தன்மைகளையும், கடமைகளையும் அப்புலோமேல் ஏற்றிவிட்டு, அந்தக் கடவுளை வழிபடாமல் விட்டுவிட்டனர். அதற்குப் பிறகுதான் அப்பலோ புதிய பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டியவரானர்.

மக்கள் பார்த்துக் கடவுள்களுக்குப் பொறுப்புகளை ஒப்படைக்கும் அளவுக்கு நிலைமையிருந்தது. கடவுள்களே மக்களின் படைப்பாக இருக்கும்போது, பொறுப்புகளும் மக்களின் படைப்பாகத்தானே இருக்கமுடியும்!

அப்பலோவின் சிலையை சாரீஸ் என்ற சிற்பிதான் திட்டம் போட்டுக் கட்ட ஆரம்பித்தான். அதற்காக ஒதுக்கிவைக்கப் பட்ட பணமெல்லாம், பாதி வேலைகள் நடந்துகொண்டிருக்கும் போதே செலவழிந்து விட்டதாம். பணம் திரட்ட வேறு வழி காணமுடியாமல், வேதனையுற்று அந்தச் சிற்பி தற்கொலை செய்துகொண்டானும். பிறகு வேறொரு சிற்பி அதனைச் செய்து முடித்தானும். இது 105 அடி உயரமுள்ள சிலை. இது செய்து முடித்த 56 ஆண்டுகளுக்குப் பிறகு கி. மு. 224-ல் ஏற்பட்ட ஒரு பூகம்பத்தினால், இந்தச் சிலை கீழே தள்ளப்பட்டுப் படுத்த படுக்கையாக ஆக்கப்பட்டது. சுமார் ஒன்பது நூற்றாண்டு காலம் அப்படியே கிடந்தது. பிறகு சாராசின்ஸ் என்பவர்கள் ரோடீஸ் நகரத்தைக் கைப்பற்றியபொழுது, இந்தச் சிலையை ஒரு யூதனுக்கு விற்றார்கள். உரோம நாட்டு எழுத்தாளர் பிளினி என்பார், ரோடீஸில் இதைப்போன்று நூறுவிதமான சிலைகள் இருந்தன என்றும், அவற்றிலெல்லாவற்றிலும் அப்பலோவின் சிலைதான் மிகப் பெரியது என்றும் எழுதியுள்ளார்.

இசை, பாடல், கவிதை முதலியவைகளுக்கும் அப்பலோதான் கடவுள். மருந்து போன்ற உலக நலங்களுக்கும் அவரேதான் கடவுள். மனிதனின் அழகுக்கும் அவர்தான் எடுத்துக்காட்டு. குறி சொல்லும் கடவுளுக்குத் தலைமை யதிகாரியாக இருந்து, அந்தக் கடவுளை நடத்திச் சென்றவரும் இவர்தான். இவ்வளவு சக்திகளையெல்லாம் கொண்டிருந்தவராகப் பண்டைக் கிரேக்கத்தில் கருதப்பட்ட கடவுள், இன்று அங்கு சக்தி அற்றவராக மதிக்கப்பட்டுக், கண்காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருக்கிறார்!

**அரீஸ் (மார்ஸ்):** இவர் ஜீயஸ் - ஹிரீ கடவுளர்க்குப் பிறந்த பிள்ளையாவார். சண்டைகளுக்குத் தலைமைவகிப்பது

இவரது தொழில். முக்கியமான கடவுளர்களிலெல்லாம் இவர் தான் மிக்கக் கொடுமையும், கொடூரமும் வாய்ந்தவர். வெட்டித் தள்ளுவதிலும், அழித்துப் போடுவதிலும் இவருக்கு மிக்க மகிழ்ச்சி. இருப்புத்தலைக் கவசமும், ஈட்டியும், கேடயமும் தாங்கிய வீரரைப்போல் அவர் தோற்றமளிப்பார். ஏதென்ஸ் நகரில், மிகச் சிறப்பாகப் போற்றப்படும் அரியோபாகஸ் என்ற இடத்தைத்தான், அவர் தாம் வாழ்வதற்கான முக்கிய இடமாகக் கொண்டிருந்தார். இப்பொழுது மக்களின் வந்தனை வழிபாடுகளை இழந்துவிட்ட கடவுளாகக் காட்சியளிக்கிறார்.

ஹெபாஸ்டஸ் (வல்கன்): இவரும் ஜீயஸ்-ஹிரி ஆகியோருக்குப் பிறந்த பிள்ளைகளில் ஒருவராவர். இவர் நெருப்பின் கடவுளாகக் கருதப்பட்டார். இவர் நொண்டியாகவும் அழகற்ற தோற்றமுடையவராகவும் கொள்ளப்பட்டார். நெருப்பினைப் பயன்படுத்தும் எல்லாக் கலைகளுக்கும் தொழில்களுக்கும் இவர் தான் தலைமையேற்பார். இவர் வெஸுவியஸ் என்ற எரிமலையையே தம் கொல்லுலைக்கூடமாகக் கொண்டிருப்பார். ஜீயஸ் கடவுளின் இடிகளையும், அரிஸ் கடவுளின் ஈட்டி முதலிய போர்க் கருவிகளையும், பிற கடவுளர்களின் ஆயுதங்களையும் காய்ச்சி, உருக்கி, வடித்துக் கொடுத்துக்கொண்டிருப்பதுதான் இவரது பணி. இந்தப் பணியைச் செய்வதில் ஓயாமல் ஈடுபட்டிருப்பாராம். இவர் அப்ரோடிடே அல்லது வீனஸ் என்ற பெண் கடவுளை மணம் புரிந்துகொண்டார். அறிவு வளர வளர மேலை நாடுகளில் இந்தத் தம்பதிகளும் தங்கள் செல்வாக்கை இழந்து கொண்டே வந்து, இப்பொழுது வாழ்வற்றவர்களாக இருக்கிறார்கள்.

ஹெர்மீஸ் (மர்க்குரி): இவரும் ஜீயஸ் கடவுளின் பிள்ளையாவார். இவர் கடவுளர்க்குத் தூதுவராக இருந்து வந்தார். வியாபாரத்திற்கும், கடல் வாணிகத்திற்கும் இவர் தலைமை வகிப்பார். இந்தக் கடவுள் மிக்கத் தந்திரமும், திறமையும் படைத்தவர் என்று போற்றிக்கொள்ளப்பட்டார். நல்ல உடல் வலிவும், தாடியற்ற இளமையும், சிறிய தலைமயிரும், இறக்கை

யோடு கூடிய குல்லாயும், ஒரு கையில் இறக்கையோடு கூடிய பாம்பால் சுற்றப்பட்ட தடியும், மற்ருெரு கையில் பணப் பையும், கால்களில் இறக்கையோடு கூடிய செருப்புகளும் கொண்டவராக இந்தக் கடவுள் சித்தரிக்கப்பட்டார். இவரும் வாழாத கடவுளின் வரிசையிலேதான், இப்பொழுது வாளா நின்றுகொண்டிருக்கிருர்!

**ஹிரீ (ஜுனே):** ஜீயஸ் என்ற கடவுளின் மனைவியும், தங்கையும் ஆவார். கொரோனஸ் என்ற முழுமுதற் கடவுள் ஜீயஸையும், ஹிரீயையும் படைத்த தந்தையாதலால், இருவரும் அண்ணன், தங்கை என்ற முறையைப் பெற்றனர். இருவரும் மணம் செய்துகொண்டதால், கணவன் மனைவி என்ற முறை யைப் பெற்றனர். அவள் தலையில் அரச முடியும், கையில் செங்கோலும் ஏந்தியிருந்தாள் மேல் உலகத்தின் அரசி அவள் என்பதை உணர்த்தும் வகையில், நட்சத்திரங்கள் பொறிக்கப் பட்ட மெல்லிய துணி, அவள் முகத்தின் எதிரே தொங்கவிடப் பட்டிருக்கும். அவள் பெருமிதமும், உறுதியும், அழகும் வாய்ந்த வளாகச் சித்தரிக்கப்பட்டிருந்தாள். அவள் பொருமை, கர்வம், பழிக்குப்பழி வாங்கும் தன்மை ஆகிய பண்புகள் நிறைந்தவ ளாய், திருமணங்களுக்கு ஆதரவுகாட்டுபவளாகவும், அவற்றைக் காத்து ஓம்புபவளாகவும் இருந்து வந்தாள். இவள் இப்பொழுது 'கடவுளாக' இல்லை; வெறும் சிலையாகத்தானிருக்கிருள்!

**அத்தினே (மினர்வா):** இவள் ஜீயஸின் மகள். இவள் ஜீயஸின் மூளையிலிருந்து உதித்தவளாகக் கொள்ளப்பட்டாள். போர், புத்திசாலித்தனம் ஆகிய இரண்டுக்கும் இவள் கடவு ளாகப் போற்றப்பட்டாள். அவள் மிக்கத் தேர்ந்த அழகுடைய வளாகவும், கைகளில் ஈட்டியும் கேடயமும் ஏந்தியவளாகவும், தலையில் இருப்புக் கவசம் அணிந்தவளாகவும் சித்தரிக்கப்பட் டாள். ஏதென்ஸ் நகரின் கடவுளாக அத்தினேதான் கொண்டா டப்பட்டாள். ஏதென்ஸ் நகரைச் சேர்ந்த **பார்த்தினுன்** என்ற இடத்தில் இவளுக்குச் சிறந்த, பெரிய கோயில் ஒன்று எழுப்பி ஞர்கள். அங்கு தங்கத்திஞலும், தந்தத்திஞலும் இழைக்கப் பட்ட இவளுடைய சிலை வைக்கப்பட்டது. இதனைச் செய்தவன்

பீடியஸ் என்ற சிறந்த சிற்பியாவான். இந்தச் சிலையைக்கண்டு களிப்பவர்கள் இப்பொழுது இருக்கிறார்களே யொழிய, வாழ்த்துப்பா பாடி, வரங்கேட்டு, வணங்கி நிற்பார் யாரும் இல்லை!

**அர்டெமிஸ் (டயானா):** இவள் அப்பலோவோடு சேர்ந்து பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒருத்தி. இவளை நிலவுக் கடவுள் என்று போற்றினர். இரவுக் காலத்திற்கும், வேட்டையாடுதலுக்கும் இவள்தான் தலைமையாவாள். இவள் மிக்க அழகுடையவளாகவும், காலில் செருப்பு அணிந்தவளாகவும், அம்புகள் செறிந்த அம்புறாத்தூணியைக் கொண்டவளாகவும், கையில் வில் அல்லது ஈட்டி ஏந்தியவளாகவும் சித்தரிக்கப்பட்டாள். டயனாக் கடவுளின் வழிபாடு, கிரேக்கக் குடியேற்ற நாடுகளில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. எபிஸியஸ் என்ற இடத்தில் இவளுக்கு மிகப் பெரிய கோயில் ஒன்று கட்டப்பட்டது. அதனுடைய பெருமிதத் தோற்றத்துக்காக, அதனை "ஏழு அதிசயங்களில்" ஒன்றாகக் கொண்டாடினர். மாவீரன் அலெக்ஸாண்டர் பிறந்த அன்று இரவு, ஹெரோஸ்ட்ராடஸ் என்பவனால் இக்கோயில் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது என்றும், அதற்குப்பிறகு இக்கோயில் மிக்க அழகாகவும், பொலிவாகவும் கட்டப்பட்டது என்றும் கூறுவர். ஆனால் பின்னால் இதுவும் அழிக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது அர்டெமிஸின் சிலை கண்ணுக்குக் குளிர்ச்சி தருவதாக அமைந்திருந்தாலும், வழிபாட்டு உணர்வு மக்களுடைய உள்ளத்திலிருந்து அழிந்துபோய் விட்டது!

**அப்ரோடிடே (வீனஸ்):** இவள் காதலுக்கும் அழகுக்கும் கடவுளாகக் கருதப்பட்டாள். இவள் இரோஸ் அல்லது கூபிட் என்று அழைக்கப்படும் தன் மகனைக் கையிலேந்தியிருப்பது போல் சித்தரிக்கப்பட்டிருக்கிறாள். இவளுடைய கோயில்கள் கிரேக்க நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரவிக் கிடந்தன. வழிபாடும் மிக்கச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. செல்வாக்கு மிகுந்திருந்த இந்தக் கடவுளும், இப்பொழுது செல்வாக்கிழந்து, வாயடைத்துச் சிலை வடிவிலேதான் வீற்றிருக்கிறாள்!

இவள் அன்றும் பேசியதில்லை; இன்றும் பேசவில்லை! ஆனால் அன்று இவள் பேசுவதாக மக்கள் நம்பினர்; இப்பொழுது அந்த நம்பிக்கையை விட்டுவிட்டனர்!

**ஹேஸ்தியா (வெஸ்டா):** இவள் கொரோனஸ் என்ற முழுமுதற் கடவுளின் மகளாகக் கருதப்பட்டாள். இவள் வீட்டிலுள்ள கணையடுப்பு நெருக்கும், குடும்ப வாழ்க்கைக்கும் கடவுளாகக் கருதப்பட்டாள். இவள் மணமாகாத மங்கையாக, நின்றுகொண்டும், உட்கார்ந்துகொண்டும் இருப்பது போலவும், அழகாக ஆடையுடுத்திக் கொண்டிருப்பது போலவும், ஒரு கையில் விளக்கு ஒன்றும், மற்றொரு கையில் செங்கோல் ஒன்றும் ஏந்தியிருப்பது போலவும் சித்தரிக்கப்பட்டாள். இந்தக் கடவுளும், இப்பொழுது 'மாஜிக் கடவுளாக' ஆக்கப்பட்டு விட்டாள்!

**டெமிட்டர் (சொஸ்):** இவள் ஜீயஸ் கடவுளின் உடன் பிறந்த தங்கையாகக் கருதப்பட்டாள். இவள் உலகிலுள்ள பழங்களுக்கும், பயிர்மணிகளுக்கும் கடவுளாகப் போற்றப் பட்டு, வழிபடப்பட்டாள். இவள் நீண்ட இடைப்பட்டியை அணிந்திருப்பவள் போலவும், கதிரும் காம்புமுடைய கோதுமைத் தாளை வலதுகையில் ஏந்தியிருப்பவள் போலவும், இடதுகையில் ஒரு திவட்டியைப் பிடித்திருப்பவள் போலவும் சித்தரிக்கப்பட்டிருந்தாள். இவள் பிரோஸர்பைன் என்ற பெண் கடவுளைப் பெற்றெடுத்தாள். இந்தக் கடவுளும் இப்பொழுது கண்காட்சிப் பொருள்களிலே ஒன்ருக ஆக்கப்பட்டு, உலகோரால், இதன் சிற்பக் கலைத்திறம் கண்டு களிக்கப்படுகிறது!

இவர்களைப்பற்றி யெல்லாம் எழுதிவைக்கப்பட்ட கதைகளும், சடங்கு முறைகளும் ஏராளம். நமது நாட்டுக் கடவுள் புராணங்களும், சடங்குகளும் எப்படி அர்த்தமற்ற—அறிவுக்குப் பொருந்தாதனவாகக் காணப்படுகின்றனவோ, அப்படித்தான் அவைகளும் இருக்கின்றன. மேலைநாடுகளில் அந்தக் கடவுள் புராணங்களை யெல்லாம் வேடிக்கைக் கதைகளாகக் கொண்டு,

மற்ற நேரங்களில் மூட்டைகட்டி வைத்துவிடுகின்றனர். இங்கோ எனில் மதக்கர்த்தாக்கள் அவைகளை இன்னமும் 'வியாபாரமும்' செய்து வருகின்றனர்.

மேற்கூறிய பன்னிரண்டு கடவுள்களைத் தவிர உலகம், வானம், கடல், இடி, மின்னல், காற்று, மழை, இரவு, தூக்கம், கனவு போன்றவைகளும் கடவுள்களாகக் கருதப்பட்டு, அவற்றை உணர்த்தும் கடவுள்களும் தனித்தனியாகக் கொள்ளப் பட்டன. உலகை உணர்த்தும் கடவுள் கியா என்றும், வானத்தை உணர்த்தும் கடவுள் யுரேனஸ் என்றும் அழைக்கப் பட்டனர். கியா தனக்கு மகனாகப் பிறந்த யுரேனஸையே மணம் செய்துகொண்டு பிறகு கடவுளர்களையெல்லாம் பெற் றெடுத்தனர். அவர்கள் இருவரும் சேர்ந்து பெற்றெடுத்த பிள்ளைகள்தாம், இயற்கைச் சக்திகளெல்லாம். ஜீயஸ் கடவுளின் தந்தையான கொரினஸும், கடலையுணர்த்தும் கடவுளான ஓஷனஸும் யுரேனஸின் பிள்ளைகளாவார்கள். இரவை உணர்த்த நிக்ஸ் என்ற கடவுளும், உறக்கத்தை உணர்த்த ஹிப் னுஸ் என்ற கடவுளும், கனவை உணர்த்த ஓனிராஸ் என்ற கடவுளும் உண்டாக்கப்பட்டனர்.

கிரேக்க மக்கள் அறியாமையில் மூழ்கிக்கிடந்த காட்டு மிராண்டிக் காலத்தில், தங்கள் கற்பனைக்கேற்றவாறு கண்டு பிடித்த கடவுள்களையும், கட்டிய கட்டுக்கதைகளையும், பிற் காலத்துப் பண்டைக் கிரேக்கர்கள் ஆராய்ந்து பார்க்க இட மளிக்காமல், அப்படியே நம்பினர். நம்பிக்கை உண்மையறிவை மறைத்துவிடும் என்பது, உலக வரலாற்று ஏட்டுச் சுவடிகளில் காணக்கிடக்கும் உண்மையாகும். நமது நாட்டில் ரவிவர்மாவின் கலைத்திறமை, எப்படி பல கடவுள்களுக்கு உருவம் கொடுத்து அழகுபடுத்தியதோ அதுபோலவே, பண்டைக் கிரேக்கர்களின் கலைத்திறமை, நம்பிக்கையின் காரணமாக அர்த்தமற்ற கடவுள் துறைக்குப் பயன்பட்டுவிட்டது. கிரேக்க தத்துவப் பேராசிரி யர்கள், வீரர்கள், விளையாட்டில் வல்லவர்கள், கவிஞர்கள், சிற்பி கள் ஆகியோரின் உருவச்சிலைகளைச் சமைத்த அளவில் நாம் அவர்களைப் போற்றிப் புகழக் கடமைப்பட்டிருந்தாலும், அவர்

களுடைய கலையறிவு, பொருளற்ற கடவுள் துறைக்குப் பயன் பட்டுவிட்டது குறித்து வருந்தாமல் இருக்கமுடியாது. கிரேக்க நாட்டுக் கடவுட் சிலைகளைக் கடவுளர்கள் என்ற நிலைக்கு ஆளாக்கிப் 'பக்தி'க்குப் பயன்படுத்தாமல், கண்காட்சிப் பொருள்களாக்கி, 'அழகு'க்குப் பயன்படுத்தும் அளவில், நாம் அவற்றிலுள்ள கலையழகைப் போற்றவேண்டிய அளவுக்குப் போற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். கிரேக்க நாட்டுக் கடவுள்களுக்கு உலகில் ஏறத்தாழ அந்த நிலைமை வந்துவிட்டது. ஆனால் அதே நிலை நமது நாட்டுக் 'கடவுள்'களுக்கும் ஏற்படவேண்டும் என்பதுதான், காலத்திற்கேற்ற, பகுத்தறிவுக்கு ஒட்டிய ஆவலாக நமக்கு ஏற்படுகிறது. கிரேக்க நாட்டுக் கடவுள்கள் வரலாற்றை உணர்த்துவனவாய், அழகைக் காட்டுவனவாய் அமைந்திருக்கின்றன. அந்த அளவிலே அமைந்திருக்கட்டும்!

# மதக் கொள்கைகள்

பண்டைக் கிரேக்கர்கள் கலையறிவையும், அதனைச் செயற்படுத்தும் ஆற்றலையும், போற்றத்தக்க வகையில் கொண்டிருந்தனர் என்ற போதிலும், மதத்துறையில் மூடக்கொள்கைகளையும், குருட்டு நம்பிக்கைகளையும் பெரிதும் போற்றி வந்தனர்.

மனிதன் உலகியலிலுள்ள காரண காரியங்களைப் பகுத்தறிந்து கொள்ளமுடியாத காட்டுமிராண்டி நிலையில், தன் மனதிற்குப் பட்டவாறு பல்வேறு கடவுள்களையும், அவை பற்றிய பல்வேறு கதைகளையும் கற்பனை செய்துகொண்டான். மனிதனுக்குச் சிறிது சிறிதாகப் பகுத்தறிவு ஏற்பட ஏற்பட, அந்தக் கற்பனைகள் சிறிது சிறிதாகக் கரைய ஏது ஏற்பட்டது. கள்ளு குடிப்பவன் அதனை விடாமல் அதன் போதையிலேயே மகிழ்ந்திருக்க விரும்புவதுபோல், மதக் கற்பனைகளில் மூழ்கி மகிழ்ந்தவர்களில் பெரும்பாலோரும், அவற்றினின்றும் வெளியேற விருப்பங் காட்டுவதில்லை. அத்தகையோர், பகுத்தறிவுச் சுடரின்முன், மதக் கற்பனைகள் கரைந்துபோகாதவாறு பாதுகாக்க வேண்டி, நம்பிக்கை என்னும் அழுத்தமான உறையை அந்தக் கற்பனைகளுக்குப் போட்டனர். பின்னர் அவ்வப்போது ஏற்பட்ட கலையறிவின் துணைகொண்டு, அந்தக் கற்பனைகளுக்கு மெருகு ஊட்டி வரவும் செய்தனர். இந்த நிலைமை எல்லா நாடுகளிலும் இருந்து வருவதைக் காண்கிறோம். இதற்குப் பண்டைக் கிரேக்கமும் விதிவிலக்காக அமையவில்லை.

பண்டைக் கிரேக்கர்கள் பல்வேறு கடவுள்களை நம்பினர். காற்று அடித்தல் அலை எழும்புதல், இடிஇடித்தல் மின்னல் மின்னுதல், ஞாயிறு எரித்தல் நிலவு காய்தல், பகல் வருதல் இரவு போதல், அழகு தோன்றுதல் வீரம் ஏற்படுதல், இன்பம்

துய்த்தல் துன்பம் உறுதல், பிறத்தல் இறத்தல் போன்றல் பல வேறு நிகழ்ச்சிகளுக்கும், அவற்றின் தோற்றங்களுக்கும் காரணம் கடவுளர்கள் என்று எண்ணினர். அவர்களுடைய நம்பிக்கைகளுக்கு சிற்பம், ஓவியம், இசை, இலக்கியம் ஆகியவை அழகூட்டின. பண்டைக் கிரேக்கத்தின் மதக் கருத்துக்களுக்கு ஹோமர் நூல்கள் ஆதாரமாகக் கொள்ளப்பட்டன. அவர் எழுதிய இல்லியட், ஒடிஸி போன்ற இதிகாசங்களை வெறும் காவியங்கள் என்று மட்டும் கருதாமல் புனித நூல்களாகவும் கருதினர். நிலவியல், வரலாற்றியல், அறிவியல், வானவியல், வாழ்க்கையியல், ஆகியவற்றிற்கு அந்த நூல்களிலேயே ஆதாரம் தேடினர். மத நம்பிக்கையாளர்கள், பண்டுதொட்டுக் கையாளப் பட்டுவந்த கடவுள் புராணங்களையும், மூடச் சடங்குகளையும் பெரும் அளவில் வரவேற்றனர் என்றாலும், பகுத்தறிவு வழி நின்று ஆராய்பவர்கள் மின்னல்போல், ஆங்காங்கு அறிவொளி வீசினர். அத்தகையோர் புராணங்களில் சொல்லப்பட்ட உலிஸிஸ் என்பான் சுற்றியதாகக் கூறப்பட்ட இடங்களெல்லாம் உண்மையில் இல்லை என்பதைக் கண்டு கொண்டனர். உலகைச் சுற்றி ஆறுபோல் கடல் ஓடிக்கொண்டிருக்கிறது, உலகம் தட்டையாகப் பானை மூடிபோல் இருக்கிறது, டெல்பி என்ற இடம் உலகின் நடுமையத்திலே இருக்கிறது என்பதுபோன்ற மதக் கருத்துக்கள் அனைத்தும் பொய் என்று அறிந்து கொண்டார்கள்.

**செனோபானிஸ்:** என்ற பேரறிஞர் எழுதிய நாட்டுப் பழங் கடவுள்களையும் அவர்களைப் பற்றிய புராணங்களையும், அவை அறிவுக்கு ஒத்து வருவனவல்ல என்று கூறிக் கேலியும் கிண்டலும் செய்தார். கிரேக்க நாட்டுக் கடவுட் கொள்கைக்கு அடிப்படை பண்டை எகிப்தியநாட்டுக் கடவுள் கொள்கை என்னலாம். ஹோமர் பலகாலம் எகிப்திய நாட்டில் சுற்றிப் பழகி, அந்த நாட்டுக் கடவுள் கொள்கைகளைக் கேட்டறிந்தவர்; அதனால் தான், அவர் இலக்கியங்களில் எகிப்திய நாட்டுக் கடவுள்களின் சாயல் படிந்திருக்கிறது. செனோபானீஸ், ஒஸிரிஸ் என்ற கடவுளைப்பற்றிக் குறிப்பிடும்போது, "ஒஸிரிஸ் மனிதனாக இருந்

தால், மக்கள் அவனை வணங்கக்கூடாது. அவன் கடவுளாக இருந்தால், அவனுடைய துன்பங்களைக் கண்டு மக்கள் வருத்தப் படவேண்டிய அவசியமில்லை" என்று கூறுவார். செனோபானிஸை, கிரேக்க நாட்டு வால்டைர் என்று கூறலாம். அவருக்கு முன்பேயும் தனி சிந்தனையாளர் பலர் இருந்திருக்கிறார்கள் அவர்கள் பெரும்பான்மையினரின் எதிர்ப்புக்கு அஞ்சி, தங்கருத்துக்களைப் பொதுப்படையாகச் சொல்லாமல், தம் மாணாக்கர்களுக்கு மட்டுமே சொல்லி வந்துள்ளனர்.

கிரேக்கர்கள் மற்றொரு உலகத்தை நம்பினர். அதற்கு ஹடீஸ் என்று பெயரிட்டனர். அது உலகிற்குக் கீழே இருப்பதாக எண்ணினர். இந்த உலகத்தில் ஆன்மாக்கள் நிரம்பியிருக்கின்றன வென்றும், அவைகள் உலகில் புரிந்த நன்மை தீமைகளுக்கேற்ப, இன்பதுன்பங்களை அனுபவிக்கின்றன என்றும் கருதினர். ஹடீஸ் அல்லது புளுட்டோ என்று அழைக்கப்படும் சாவுக் கடவுள் இந்த உலகத்தைக் காத்து வருகின்றார் என்றும். இவர் ஜீயஸ் கடவுளின் உடன் பிறந்தவர் என்றும் கொண்டனர். பண்டைக் கிரேக்கர்கள், ஒருவன் இவ்வுலகில் செய்யும் புண்ணிய பாவங்களுக்கேற்ப, இறந்த பிறகு ஹடீஸ் உலகில், அவன் இன்பதுன்பங்களை ஏற்கிறான் என்று நம்பினர். பெருங் கடவுள் களுக்குப் பணி செய்ய சிறு சிறு கடவுள்கள் பல உண்டு என்றும் கொண்டனர். இரிஸ், ஹேபி போன்றவர்கள் பெருங் கடவுள்களுக்குத் தனிப்பணிகள் செய்பவர்கள்; மியூஸஸ் என்ற பெயருள்ள கடவுள்கள் இலக்கியம், இசை, கலை ஆகிய துறைகளுக்குத் தலைபூண்டு வந்தனர்; மக்களுக்கு நன்மை உண்டாக்கக் கூடிய ஹெர்குலீஸ், பெர்ஸியஸ், ஆங்குலாப்பியஸ் போன்ற வலிவும், வீரமும் கொண்ட கடவுள்களும் இருந்தனர்.

மக்கள் இப்படிப்பட்ட எல்லாக் கடவுள்களையும் வணங்கினர் என்றாலும், எல்லோரையும் ஒரே விதமாக வணங்கவில்லை. ஒவ்வொருவருக்கும் தரம் வகுத்தே வணங்கினர். சில குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட கடவுள்களுக்குப் பெருமையும், புகழும் அதிகம். அங்கெல்லாம் அந்தக் கடவுள்களுக்கு மிகச் சிறப்பாக விழாக்கள் எடுத்தனர். வாழ்த்துப்பா பாடுதல்,

குறைவேண்டி இரத்தல், வரங் கேட்டல், விலங்குகளை வெட்டுதல், காய்கறிச் சோறு படையல் போடுதல், ஆடுதல், பாடுதல், குடித்து மகிழ்தல், விளையாட்டுக்கள் விளையாடுதல், விழாக்கள் கொண்டாடுதல் போன்றவைகள் கடவுள் வழிபாடுகளாகக் கொள்ளப்பட்டன. கடவுளைத் துதித்தல் என்ற வழிபாட்டு முறை, கோயில்களிலும், பொது இடங்களிலும், பொது மன்றங்கள் கூடும்போதும், நீதிமன்றங்களிலும், வீட்டுக்குள்ளும், காலையிலும், மாலையிலும் சாப்பாட்டுக்கு முன்பும் கையாளப்பட்டது. கடவுளைத் துதித்தல் பெரும்பாலும் வாய்மொழியாக கொள்ளப்பட்டது. சில வேளைகளில் துதி மொழிகளை எழுதியும் படிப்பார்கள். ஒரு துதி மடலில், "எங்கள் இறைவனுகிய ஜீயஸே! எங்களுக்கு நல்லதுகளையெல்லாம் கொடுப்பாயாக! நாங்கள் உன்னைக் கேட்டாலும் கேட்காவிட்டாலும் கொடுப்பாயாக! எவை எவை கேடுகளோ அவைகளை எங்களினின்றும் அகற்றி வைப்பாயாக! நாங்கள் உன்னைக் கெடுதல்களையே கேட்டாலும் கூட, அவைகளை அகற்றி வைப்பாயாக!" என்று எழுதப்பட்டிருந்ததாம். பலியிடப் போகும் விலங்குகளுக்குப் பூமாலைசூட்டி, ஆடைகள் சுற்றி அவைகளை அழைத்துப் போவார்களாம். சமைத்த உணவு வகைகளையும், பழங்களையும் கடவுளர்க்குக் காணிக்கையாக வைப்பார்களாம். கடவுள் சிலைகளின் தலையில் திராட்சை ரசம், பால், தேன், எண்ணெய் முதலியவைகளை ஊற்றி மகிழ்வார்களாம். முதல் அறுவடை ஆகும்போதும், முதல்பழம் பழுக்கும்போதும் அவைகளைக் கடவுளுக்குக் காணிக்கையாக்குவார்களாம். இவைகளெல்லாம் அங்கு, ஒரு காலத்தில் இருந்தன; இப்பொழுது இல்லை! ஆனால் நமது நாட்டில் இன்னமும், இருந்துகொண்டுதானிருக்கின்றன!

கடவுளிடம் குறி கேட்டல் என்பது பண்டைக் கிரேக்கர்களின் பெரும் பழக்கமாக இருந்தது. டெல்பியில் அப்பலோ கூறும் குறி மிகச் சிறப்பாகக் கொள்ளப்பட்டது. குறி கேட்பதேயன்றி கனவுகளுக்குப் பொருள் சொல்லுதல், பறவைகள் பறத்தல்-பிராணிகள் பலியிடப்பட்டு விழுதல்-நெருப்புச் சுடர் பக்கம் சாய்தல்-சாம்பிராணிப்புகை சாய்ந்து போதல் ஆகிய

இவைகள் குறித்துக் குறி சொல்லுதல் போன்றன கிரேக்கர்களிடம் மிகப் பரவிக் கிடந்தன. சகுணம் பார்க்கும் பழக்கமும் அவர்களிடம் படிந்து கிடந்தது. பூகம்பம், கிரகணம், வால் நட்சத்திரம், பிராணிகள் நடமாடுதல், தும்முதல், போன்றவைகள் சகுணங்களாகக் கொள்ளப்பட்டு விளக்கம் சொல்லப்பட்டது.

பண்டைக் கிரேக்கத்தில் மதம் மூன்று வகையினரால் போற்றி வளர்த்துக் காப்பாற்றப்பட்டு வந்தது என்று கூறலாம். 1. புரோகிதர்கள் : இவர்கள் கோயில்களுக்காகத்தம்மை ஒப்படைக்கும் பண்புடையவர்களாகவும், கோயில் சொத்துக்களைப் பாதுகாத்து வருபவர்களாகவும் கருதப்பட்டார்கள், நகர சபைகளுக்குத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதைப் போல், பொது மக்கள் கூடி தேர்ந்தெடுப்பார்கள். அழகற்றதன்மை ஆண்டவனுக்கு மாறுபாடானது என்று அவர்கள் கருதியதால், அழகான தோற்றமுடையவர்களையே புரோகிதர்களாகத் தேர்ந்தெடுத்தனர். அவர்கள் குறிப்பிட்ட காலந்தான் பதவியிலிருப்பார்கள்; மீண்டும் தேர்தல் நடைபெறும் அவர்கள் தனி வாழ்க்கையின் சுகபோகங்களை விட்டுவிடுவதில்லை. 2. புலவர்கள்: இவர்கள் ஆண்டவர்களுடைய வரலாற்றையும். அவர்களுடைய பண்புகளைப்பற்றியும் காவியங்கள் இயற்றியும், பாட்டுக்கள் பாடியும் மதக்கொள்கையைப் பரப்புவார். 3. தத்துவ சிரியர்கள் : இவர்கள் மதம் கூறும் ஒழுக்கங்கள் பற்றியும், கொள்கைகளின் தத்துவங்களைப்பற்றியும் கூறுவார்கள். மதநம்பிக்கையில் ஆழ்ந்த தத்துவாசிரியர்களே இந்தப்பணி புரிவர். கிரேக்க மனிதன், ஆண்டவனுடைய ஆசிகளையோ, கட்டளைகளையோ பெறவேண்டினல், புரோகிதனிடம் செல்வான்; மனமகிழ்ச்சியோடு இருக்க விரும்பினல் கதை சொல்லும் புலவனிடம் செல்வான்; மதக்கருத்துக்களில் விளக்கமும், தெளிவும் பெற விரும்பினல், தத்துவாசிரியனிடம் செல்வான்.

விரதங்கள் மேற்கொள்ளுவது, வெறியாட்டம் ஆடுவது போன்ற மதநோன்புகளையும் பண்டைக் கிரேக்கர்கள் கொண்டிருந்தனர். மந்திரம், ஜோஸ்யம் முதலியவைகளிலும் நம்பிக்கை வைத்திருந்தனர்.

இப்படிப்பட்ட மூடக்கொள்கைகளையெல்லாம், செனு பானிஸ், சாக்ரடீஸ் போன்ற தத்துவாசிரியர்கள் வன்மை யாகக் கண்டித்தனர். செனோ பானிஸ், வால்டைரைப் போல நீண்ட காலம் உயிர்வாழ்ந்திருந்தார். அவர், தம் வாழ்நாட் களில் ஹோமரின் கொள்கைகளை எதிர்த்துக் கூறிவந்தார். கடவுள் எதிர்ப்பு மத எதிர்ப்பு நூல்கள் பலவற்றை எழுதிக்குவித் தார். ஹோமர், மனிதனுக்கிருக்கும் ஆசாபாசம் குற்றங் குறை எல்லாவற்றையும் அப்படியே கடவுளுக்காக்கி, ஆபாசப் புரா ணங்கள் இயற்றியதற்காக, அவரை, செனோ பானிஸ் வன்மை யாகக் கண்டித்தார். ஆண்டவர்கள் உலகில் நடமாடியதாகக் கூறப்படும் "பொன்னுன காலத்"தை அவர் மறுத்தார்; காலம் மாறமாற, மனிதனுடைய சொந்த உழைப்பு வளரவளர நாகரி கம் வளருகிறது என்ற கொள்கையை நிலநாட்டினர். அவரைச் சுற்றியிருந்த பாமர மதவெறியர்களுக்கு அவருடைய கருத்துக் கள் பிடிக்கவில்லை. கற்றறிந்த - சிந்தித்துப்பார்க்கும் திறம் படைத்தவர்கள் கூட பகுத்தறிவைவிட்டு, ஹோமரின் இலக்கிய அழகில் மயங்கி, உருவவழிபாடுகளில் அழுந்திக்கடந்தனர்; அவர்களும் சேனோபானிஸ் கொள்கையை எதிர்த்தனர். ஆனல் செனோபானிஸுக்கு, தம் கருத்தை வெளியிடுவதில் எவ்வித தடையும் ஏற்படவில்லை. அந்த நாட்களில் கிரேக்க நாட்டில், ஏதென்ஸ் நகரைத் தவிர மற்ற இடங்களிலெல்லாம், மதபாறு பாட்டுக் கருத்துக்காகத் தண்டிக்கும் வழக்கம் இருக்கவில்லை. ஒரு தத்துவ அறிஞர், பொதுச்சந்தைக்கூடத்தில் நின்று கொண்டு, உயிரோடு இருப்பதாக மக்கள் கருதிக்கொண்டிருக் கிற ஞாயிறு, பழுக்கக் காய்ச்சின இரும்பு போன்றவொரு பொருள்தான் என்று கூறும் போதும், தேவர்கள் என்று கரு திக்கொண்டிருக்கிற நட்சத்திரங்கள், வெறும் சுழலும் கற்கள் என்று குறிப்பிடும்போதும், ஜுபிடர், வீனஸ், அப்பலோ மார்ஸ், ஜுனோ, மினர்வா போன்ற கடவுள்கள், புலவர்களின் கற்பனையிலிருந்து தோன்றிய பொருள்கள் என்று சொல்லும் போதும், அந்தக் கடவுள்கள் உள்ளபடியே வாழ்ந்தால், அவர் களெல்லோரும் அழிக்கப்படவேண்டியவர்கள் என்று உரைக்

கும்போதும், எல்லோரையும் ஆட்சி செலுத்துவது குருட்டுவிதியல்ல, எதையும் தெரிந்துசெய்யும் மனந்தான் என்று மொழியும் போதும் பெரும்பாலான பாமர-படித்த மக்களிடையே பரபரப்பு உண்டாகும். இப்படிப்பட்ட கருத்துக்கள் பரவுவதைக் கண்ட மதக்குருக்கல் ஆங்காங்கு சென்று, மதத்தை மறுத்துக் கூறுபவர்களையும். கடவுளர்க்கு மாறுபாடாகத் தத்துவம் பேசுபவர்களையும் குற்றவாளிகள் என்று சொல்லித் தண்டிப்பதற்கான சட்டம் இயற்றவேண்டுமென்று தூண்டினார்கள். ஏதென்ஸ் நகரில் சட்டம் இயற்றப்பட்டது. டாமோன், அனெக்ஸாகோரஸ் போன்றவர்கள் நாடுகடத்தப்பட்டார்கள்; அஸ்பாஷியா என்ற கடவுள் நிந்தகி என்று குற்றஞ்சாட்டப்பட்டார்; ஆனால் பெரிக்கிள்ஸ் உதவியால் உயிர்பிழைத்தாள்; சாக்ரடீஸ் நஞ்சூட்டிக் கொள்ளப்பட்டார்; பிளேட்டோ ஒரு குறிப்பிட்ட சிலருக்குமட்டும் பகுத்தறிவுக் கொள்கைகளைச் சொல்லுவது, மற்றவர்களுக்கு அவர்களுக்கு ஏற்றார்போல் பொதுப்படையாகச் சொல்வது என்ற முறையைக் கையாளவேண்டியவரானார்; அரிஸ்டாடில் ஏதென்ஸ் நகரிலிருந்து ஓடவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

பகுத்தறிவுத் தத்துவாசிரியர்களேயன்றி வேறுசில தத்துவாசிரியர்களும் சிற்சில சீரிய கருத்துக்களைப் போதித்துவந்தனர். இப்படிப்பட்ட கிரேக்கநாட்டுத் தத்துவாசிரியர்கள் விதைத்த விதைகள், அறிவியலும், பகுத்தறிவும் பிற்காலங்களில் வளரப் பெரிதும் ஏதுவாக இருந்தன. கிருஸ்துவின் கருத்துக்கள் மதத்துறையில் புகத்துவங்கியவுடன், கிரேக்கநாட்டு மதக்கொள்கைகள், மறைந்து வேடிக்கைக் கதைகளாயின. அப்படியே கிருத்தவமதம், இஸ்லாம் மதம், ஹிந்துமதம், புத்தமதம் முதலிய மதங்கள் புகுத்திய கொள்கைகளில் பல பகுத்தறிவுக் கொள்கையின் முன்னால், பழங்கதைகளாக மாறிவந்துகொண்டிருக்கின்றன. பண்டைக் கிரேக்கநாட்டின் மதக்கொள்கைகளில் அர்த்தமற்றக் கொள்கைகளும், குருட்டு நம்பிக்கையும் ஏராளமாக இருந்ததால், அவைகள் போற்றுவதற்குரிய வகையில் அமையவில்லை!

# விழாக்கள்

பழங்கால கிரேக்கர்கள் பல்வேறுவிதமான விழாக்களைக் கொண்டாடி மகிழ்ந்தனர். சமூக வாழ்வில் மதக் கருத்துக்கள் முக்கியமான இடம் பெற்றிருந்ததால், விழாக்கள் எல்லாம், அவற்றோடு தொடர்பு கொண்டனவாகவே இருந்தன.

எவை பெருவாரியான மக்களைத் தம்பால் ஈர்க்கக்கூடியன வாக அமைகின்றனவோ, அவை, விழாக்கள் கொண்டாடுவ தற்கான மையப் பொருள்களாக ஆக, ஏதுவாகி விடுகின்றன. அந்த வகையில், கிரேக்க நாட்டில், கோயில்கள்தாம். பாமரரை யும் படித்தவரையும், ஏழைகளையும் பணக்காரர்களையும், சிறிய வரையும் பெரியவரையும், பெண்களையும் ஆண்களையும், அடி மைகளையும் ஆண்டைகளையும் ஒருசேர ஈர்க்கும் ஏதுப் பொருள் களாக இருந்தன. கோயில்கள், மக்களை ஆசைகாட்டியும் ஈர்த் தன ; அச்சமூட்டியும் ஈர்த்தன. சில முக்கியமான நாட்களில், கோயிலுக்குச் சென்று ஆண்டவனின் அருளைப் பெற வேண்டும் என்ற நம்பிக்கை, பெரும்பாலோரிடத்து இருந்தது. ஆண்ட வனை வழிபட வேண்டும் என்பது மட்டுமல்லாமல், கூடும் பெருந் திரளான மக்களைக் காணவும், ஆண்டவன் உருவச் சிலை அலங்கா ரத்தைப் பார்க்கவும், பாட்டு - கூத்து - விளையாட்டுக்களை வேடிக்கை பார்க்கவும், அவற்றில் கலந்துகொண்டு தாமும் மகி ழவும், புதிய புதிய பொருள்களையும் தேவையான பொருள்களை யும் வாங்கவும் ஆன செயல்களில் ஈடுபடுவதினுல் கிரேக்க மக்கள் தனி ஆர்வங் காட்டினர்.

சில ஆண்டவர்களுக்கு அடிக்கடி விழாக்கள் எடுப்பார்கள் ; வேறு சிலர்க்கு இடைவெளிவிட்டு விழாக்கள் எடுப்பார்கள் சில விழாக்கள் இரண்டு மூன்று நாட்கள் நீடித்திருக்கும். விழாக்

களில் பல்வேறு விதமான களியாட்டங்கள் இருந்ததால், அவற்றில் கலந்துகொள்வதில் பூரிப்பும், பெருமிதமும் கொண்டனர்.

முக்கியமான கோயில் ஒன்றில் விழாத் துவங்குகிறது என்றால், கிரேக்க நாட்டின் பல பகுதிகளிலும், குறிப்பாக அண்மையிலும் உள்ளவர்கள் வந்து கலந்துகொள்வர். விழாக்கொண்டாடும் நாள் வந்துவிட்டால், புரோகிதர்கள் கோயில்களைத் திறந்து வைத்து, சிலைகளை அழகுற ஒப்பனை செய்து வைப்பர். பொதுமக்கள் வருவதற்கும், தங்குவதற்கும், உண்பதற்கும், உறங்குவதற்கும் ஏதுவாக எல்லா வசதிகளும் செய்து வைக்கப்படும். மக்கள் நாலாபக்கங்களிலிருந்தும் கால் நடையாகவும், தேர்களின் மீதும், கப்பல்கள் மூலமும் வந்து சேர்வர். நகரம் இடம் பிடிக்காத அளவுக்குப் பெருந் திரளானவர்கள் வருவார்கள். எந்தக் கடவுளுக்காக விழா எடுக்கப்பட்டதோ, அந்தக் கடவுளைக் காண, கதிரவன் உதித்தவுடன், ஆடை அலங்காரத் தோற்றத்தோடு மக்கள் கோயிலுக்குள் புகுவார்கள் குடும்பத் தலைவன் நைவேத்தியத்திற்கான பொருள்களைக் கையிலேந்திக் கொண்டு முதலில் நுழைவான்; அவனை அடுத்து பலியிடப் போகும் பிராணியைப் பிடித்துக்கொண்டு பணியாளன் புகுவான்; அவனை அடுத்துக் குழந்தைகள் தாய்மார்களோடு வருவார்கள். ஒரு குடும்பத்தினர் பலியிட்டு வழிபாடு செய்து முடித்தபிறகு, அந்த இடத்தைவிட்டு அகல்வர். உடனே மற்றொரு குடும்பத்தினர் வழிபட வருவார்கள். இப்படிப் பல நாட்கள் தொடர்ந்து விழா நடைபெற்றுக்கொண்டேயிருக்கும். எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று கொண்டு, பாட்டுப் பாடி, ஆண்டவனைத் துதி செய்வார்கள். விழாவில் ஒருவரையொருவர் எதிர்ப்படும்போது நல்வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொள்வர். பாஸ்ஸஸ், டெமிட்டர் கடவுள்களுக்கும், ஏதென்ஸில் எத்தினே கடவுளுக்கும், தீபெஸில் அப்பலோ கடவுளுக்கும் பெரும் பெரும் விழாக்கள் எடுப்பார்கள்.

இவற்றைத்தவிர, கிரேக்க நாட்டு விழாக்கள் என்று சொல்லத்தக்க ஒலிம்பிக், பித்தியன், இஸ்த்மியான், நெமெ

யான் போன்ற விழாக்களும் கொண்டாடப்பட்டன. இவை களும் கடவுள்களோடு தொடர்புபடுத்தப்பட்ட விழாதாம் என்ற போதிலும், உடற்பயிற்சி, விளையாட்டுத் திறமை, இலக்கியப் புலமை, இசை இனிமை போன்ற திறன்களை வெளிப் படுத்தும் விழாக்களாக இருந்து வந்தன.

ஒலிம்பிக் என்ற விழா, எலிஸ் பகுதியைச் சேர்ந்த ஒலிம்பியா என்ற இடத்தில் கொண்டாடப்பட்டது. இது ஜீயஸ் கடவுளைப் பெருமைப்படுத்துவதற்காகக் கொண்டாடப்பட்ட தாகும். இந்த விழா நான்கு ஆண்டுக்கு ஒருமுறைதான் கொண் டாடப்பட்டது. கிரேக்கர்களின் கணக்குப்படி ஒவ்வொரு ஐந்தாவது ஆண்டிலும் கொண்டாடப்பட்டது. இந்த விழாவுக்கு கிரேக்க நாட்டிலிருந்து மட்டுமல்லாமல், கிரேக்க நாட்டைச் சுற்றியுள்ள எல்லா நாடுகளிலிருந்தும் விழாவில் கலந்து கொள் ளவும், விழாவை வேடிக்கை பார்க்கவும் வருவர். இங்கே பல வித விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். ஓட்டப்பந்தயம், மற்போர், குத்துச் சண்டை, தேர் ஓட்டப்பந்தயம், குதிரைப் பந்தயம், ஈட்டித்தூக்கி எறிதல், தட்டுத்தூக்கிஎறிதல், தாண்டிக் குதித்தல், எம்பிக் குதித்தல் போன்ற பல்வேறு போட்டிப் பந்தயங்களில் கலந்து கொள்ள, பலர், தங்களை நன்கு தயார் படுத்திக்கொண்டு வருவர். ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெறுபவனுக்கு **ஆலிவ் மாலை** எனப்படும் ஆலிவ் இலையினுல் தொடுக்கப்பட்ட மாலை அணிவிக்கப்படும். இந்த ஆலிவ் மாலை பெற்றவனுக்குக் கிரேக்க நாடு முழுவதும், சென்ற இட மெல்லாம் சிறப்பு செய்வார்கள். குதூகலத்தோடு ஆங்காங்கு வரவேற்பு அளிப்பார்கள் நாடாளும் தலைவனுக்குக் கிடைக்காத பெருமையும், புகழும் ஒலிம்பிக் பந்தயத்தில் வெற்றிபெற்ற வனுக்குக் கிடைக்கும். டெல்லியிலுள்ள பெரும் மண்டபத்தில் அவன் சிலை நாட்டப்படும். நான்கு ஆண்டு காலம் ஒலிம்பிக் பந்தயத்தில் வெற்றி பெற்றவர்களைப்பற்றியே, எங்கு பார்த் தாலும் பேசிக்கொள்வர். ஒலிம்பிக் பந்தயத்தைக் கண்டு விட்டுச் செல்லும் இலட்சக்கணக்கான மக்கள், தாமும் உடற்பயிற்சி பெற வேண்டும் என்ற உறுதியோடும், உள்ளக்கிளர்ச்சியோடும்

தத்தம் நாடு புகுவர். ஆங்காங்கு உடற்பயிற்சிக்கூடங்கள் அமைப்பர். ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொள்வதற்காகப், பயிற்சிபெறும் பொருட்டுப் பண்டை கிரேக்கர்கள் நகர் தோறும் உடற்பயிற்சிக் கூடங்கள் நிறுவியிருந்தனர்.

இந்த ஒலிம்பிக் விழா இன்னகாலத்தில் தோன்றியது என்று அறுதியிட்டுக் கூறமுடியாத வகையில், பன்னெடுங் காலமாக இருந்துவருகிறது. இடையில் சிலகாலம் விடுபட்டிருந்தது. ஸ்பார்ட்டா பகுதியில் ஆட்சிப்பீடம் ஏறிய லைகர்கஸ் கி. மு. 776-ம் ஆண்டில் மீண்டும் புதுப்பித்தான். அந்த ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் விழாவுக்கு முதல் ஒலிம்பியாட் என்று பெயர். அதிலிருந்து பல நூற்றுக்கணக்கான ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வந்தது. கி. பி. 394-ம் ஆண்டில் தியோடோஷியஸ் என்ற அரசன் ஒலிம்பிக் விழா நடைபெறக்கூடாமல் நிறுத்திவிட்டான். மீண்டும் பல நூற்றுண்டுகளுக்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்டு, இப்பொழுது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒலிம்பிக் விழா என்ற பெயரில் உலகின் ஒவ்வொரு பகுதியில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

**பித்தியன்** விழாவென்பது, அப்பலோ கடவுளைப் பெருமைப் படுத்த, **டெல்பியின்** அருகில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்பட்டது. **நெமியான்** என்பது ஜியஸ் கடவுளைப் பெருமைப் படுத்த **நெமியா** என்ற இடத்தில் கொண்டாடப் பட்ட விழாவாகும். **இஸ்த்மியான்** என்பது, **பொஸிடன்** கடவுளின் பெருமையை யுணர்த்த, **கோரின்த்** என்ற இடத்தில் எடுக்கப்பட்ட விழாவாகும். இந்த விழாக்களில் **கவிதைப் போட்டி, இசைப்போட்டி, வலிவுப்போட்டி** முதலிய பந்தயங் கள் நடைபெறும்.

**டெமிட்டர்** என்ற தேவிக்கு **எலூஸிஸ்** என்ற இடத்தில் பத்து நாட்கள் விழாக் கொண்டாடினார்கள். அந்த விழாவில் கலந்துகொள்ளாமல், எந்த ஏதென்ஸ்காரனும் வாழ்நாளைக் கடத்தக்கூடாது என்பது ஐதிகம். இந்த விழாவை மிக்க வருத்

தத்தோடு கொண்டாடவேண்டுமாம். காரணம், டெமிட்டரி னுடைய மகள் புரோசெர்பைனை, புளுட்டோ என்ற கடவுள் தூக்கிச் சென்றுவிட்டானும்; மகளை இழந்த டெமிட்டர் மிக்கத் துக்கமும் வருத்தமும் அடைந்தாளாம்; அவளை வணங்கப் போகிற ஒவ்வொருவரும் அந்தத் துக்கத்தில் கலந்துகொள்ள வேண்டும்; யாரும் மகிழ்ச்சியை வெளிக்காட்டிக்கொள்ளக் கூடாதாம்! மதக் கருத்து இது என்றாலும், மக்கள் இதற்கு மாறாகத்தான் விழாவினைக் கொண்டாடியிருக்கிறார்கள். "துக்க விழாவில் யாரும் வருந்துவதில்லை" என்பது, ஏதென்ஸ் நகரில் எல்லோராலும் பேசப்பட்ட பழமொழியாம். அந்த அளவுக்கு அப்பொழுதே விழா கேலியாக்கப்பட்டுவிட்டது என்பது புலனாகிறது.

கிரேக்க நாட்டில் பல கடவுள்கள் குறிசொல்லும் கடவுள்களாகக் கருதப்பட்டன. ஆனால் டெல்பியிலுள்ள அப்பலோ கடவுளின் குறி மிகச் சிறப்பாக போற்றப்பட்டது. வேறு இடங்களிலுள்ள அப்பலோ கடவுள்களும், ஒலிம்பியாவிலுள்ள ஜீயஸ் கடவுளும், லிபியாவிலுள்ள டாடோனா கடவுளும், வேறு பல கடவுள்களும் குறிசொல்வனவாகக் கொள்ளப்பட்டாலும், டெல்பியிலே சொல்லப்படும் குறிதான் மிகவும் போற்றப்பட்டது. குறிகேட்க, டெல்பிக்கு, மக்கள் விழாப்போல் அன்றாடம் திரளுவார்கள். டெல்பியில் மட்டும் ஓயாமல் குறிசொல்லும் விழா நடந்துகொண்டேயிருக்கும். டெல்பி கோயிலில், மண்டபத்தின் நடுவில், தரையில், அறையொன்று தோண்டப்பட்டு, அதன் மேல்பாகம் மூடப்பட்டிருக்கும். அந்த மூடியில் ஒரு இருக்கை போட்டுக்கொண்டு ஒரு மணமாகாத பெண்பூசாரி உட்கார்ந்திருப்பாள். குறி கேட்பவர்கள் அவள் எதிரே வந்து நிற்பார்கள். கீழுள்ள அறையில் கந்தகப்புகை எரிக்கப்பட்டு, அது அந்தப் பெண்பூசாரியைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்யப்படும். அந்தப் புகையை உறுஞ்சியதும், அவள் சாமி வந்தவள் போல் ஆடுவாள். அப்பொழுது குறி கேட்பவர்களுக்குப், பாட்டு மொழியில் பதில் கூறுவாள். அவள் கூறுவது, ஆண்டவனே கூறுவதாகப் பொருள். நமது நாட்டில் இன்னும் நிலவிவரும் குறிசொல்லும் பைத்தியக்காரத்தனம், கிரேக்க நாட்டில்

அந்நாட்களிலேயே இருந்திருக்கிறது. நல்ல வாய்ப்பாக இப்பொழுது குறிசொல்லும் வழக்கம் அங்கு அழிந்துவிட்டது; குறி சொல்லப்பட்டுவந்த கோயில்கள் காட்சிப் பொருளாக இருந்துவருகிறது!

குறி சொல்லுவதை, அவள், இரட்டைப் பொருள்படும்படியாகத்தான் கூறுவாளாம். கிரேக்கநாட்டுப்படை ரோம்மீது படையெடுக்க எண்ணி, போரில் கிரேக்கநாடு வெற்றிபெறுமா என்று, குறிகேட்டதாம். "கிரேக்கர்கள், ரோமானியர்கள் ஒருவரையொருவர் வெல்லுவர்" என்று குறி சொல்லிற்றும். முடிவு எப்படியானாலும் இந்தக் குறி பொருந்தி வருவதைக் காணலாம். லிடியாவின் அரசனை கிரேஸஸ், சைரஸ்மீது படையெடுக்க எண்ணி, படையெடுத்தால் வெற்றியேற்படுமா என்று டெல்பி குறியைக் கேட்க, அதற்கு அது, "அவன் ஆற்றைக் கடந்தால், ஒரு சாம்ராஜ்யத்தை அழித்தவனாகிறான்" என்று பதில் கூறிற்றும். அழிக்கப்போவது பாரசிகப் பேரரசை என்று அவன் எண்ணிக்கொண்டானும்; நிலைமை முடிவில் வேறு விதமாக மாறினால் அவன் அழிக்கப்போவது லிடியாவை என்று பொருள்படும்படியும் கூறப்பட்டதாம். அரசன் போருக்குச் சேன்றான்; ஆற்றைக் கடந்தான்; தோற்றான்; லிடியா மாற்றால் கைப்பற்றப்பட்டது; அழிக்கப்பட்டது. இந்த நிலையிலும் குறி பொருந்திவருவதைப் பார்க்கலாம். இப்படியான ஒரு குருட்டுப் பழக்கமும் கிரேக்கர்களிடம் இருந்துவந்தது.

பண்டைக் கிரேக்கத்தின் விழாக்களிலிருந்து கடவுள் கொள்கையையும், மதக்கொள்கையையும் கழித்துவிட்டுப் பார்க்கும்போது தோன்றுகிற விளையாட்டுப்போட்டி, கவிதைப் போட்டி, இசைப்போட்டி, வலிவுப்போட்டி போன்றவைகள், கிரேக்க நாட்டுக்கு மட்டுமல்லாமல், குறிப்பாக ஐரோப்பாக் கண்டத்திற்கும், பொதுவாக உலகத்திற்கும் நல்ல ஆக்கத்தையும் ஊக்கத்தையும், வனப்பையும் வளர்ச்சியையும் அளித்தனவாகும்!

# இலக்கியம்

## முதற் காலம்

பண்டைக் காலந்தொட்டே, கிரேக்க நாட்டில், மொழி வளமும் இலக்கிய வளமும் மிகச் சிறந்தமுறையில் செறிந்து விளங்கின. பண்டைக் கிரேக்க இலக்கியங்களின் அருமை பெருமைகள் இன்றும் உலகெங்கும் புகழப்படுகின்றன. ஐரோப்பா நாடுகளின் ஆரம்பகால இலக்கிய வளர்ச்சிக்குக் கிரேக்க இலக்கியங்கள்தாம் அடிப்படையாக இருந்தன. கிரேக்க இலக்கியங்களைக் கற்ற அறிஞர்கள், கான்ஸ்டாண்டி நோபிள் வீழ்ச்சிக்குப்பிறகு ஐரோப்பாக் கண்டம் முழுவதும் பரவியதால்தான், பதினைந்தாம் நூற்றாண்டில், ஐரோப்பாவில் இலக்கிய மறுமலர்ச்சி ஏற்பட ஏது உண்டாயிற்று.

கிரேக்க இலக்கியங்கள் பல்சுவையுங் கொண்ட சுவடிகளாக மிளிர்ந்தன. கிரேக்க நாட்டவரின் அறிவும் ஆற்றலும், புகழும் பெருமையும் அவர்களது இலக்கியங்களில் மண்டிக் கிடக்கின்றன. கி. மு. பன்னிரண்டாம் நூற்றாண்டையொட்டி வாழ்ந்த ஹோமர் என்ற பெரும் புலவர் எழுதிய இலக்கியங்களைத்தாம், காலத்தால் பழமையானதாகவும், அளவில் பெரியதாகவும், சிறப்பில் மிக்கதாகவும் கருதுகிறார்கள் அவர் எழுதிய இல்லியட், ஒடிஸி என்ற இதிகாசங்கள், பகுத்தறிவுக் கொவ்வாத கதைகளையும், கருத்துக்களையும் பொழிந்தாலும், அவற்றின் இலக்கியச்சுவை மிகவும் பாராட்டத்தக்கன என்று கூறுவர். அவர் இயற்றிய செய்யுட்களை யெல்லாம், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகுதான், ஒன்றுதிரட்டி ஹோமர் என்று அவருடைய பெயரையே இட்டனர். ஹோமரைப்பற்றிய வரலாறு ஒன்றும் மிகவாகத் தெரியவில்லை. அவர் சிறிய ஆசியாவில், கிரேக்க நாட்டின் குடியேற்றப் பகுதியாக விளங்கிய அயோனி

யாவில் வாழ்ந்திருக்கக்கூடும் என்று கருதுகின்றனர். ஹோமருக்கு இலக்கிய அறிவையூட்டியது பழம் எகிப்து என்றும் கூறுவர்.

ஹோமர் காலத்திலேயே பயோடியா என்ற பகுதியில் வாழ்ந்த ஹேஸியட் என்பார் சில இலக்கியங்கள் இயற்றினர். அவைகள் கடவுள் புராணங்களைப் பற்றியனவாகும். இவைகளெல்லாம் கதைக்காகக் கருத்துக்காகப் படிக்காவிட்டாலும், கலைக்காகப் படிக்கவேண்டிய இலக்கியங்களாகும்.

கி. மு. ஏழாவது நூற்றுண்டில், இசை நல்ல முறையில் வளர்ந்து காணப்பட்டதால், இசையோடு கூடிய உணர்ச்சிக் கவிதைகளும், உருக்கக் கவிதைகளும் மலர்ந்தன. ஏறத்தாழ கி. மு. 700-ம் ஆண்டு வாக்கில் வாழ்ந்த அர்ச்சிலோசச் கையறுநிலைப் பாடல்களை உருக்கமாக இயற்றும் முறையை புகுத்தினர். போர்ப்படை வீரர்களுக்கு ஊக்கம் கொடுக்க, உணர்ச்சியும் உருக்கமும் அமைந்த பாட்டுக்கள் பாடப்பட்டன. பிறகு சிலகாலம் கழித்து அரியான், அல்காயஸ் போன்ற புலவர்கள் தோன்றினர். கி. மு. 600-ம் ஆண்டு வாக்கில் வாழ்ந்த சாப்போ என்ற பெண்பாற் புலவர், கிரேக்கநாட்டுப் பெண்பாற் புலவர்களிலேயே மிகச் சிறந்தவர். அவர் இயற்றிய செய்யுட்களில் ஒருசிலவே இப்பொழுது கிடைத்துள்ளன. அனுக்கிரியான் என்பவர், பாடுவதற்கு எளிதான, பொருள் செறிந்த பாட்டுக்கள் பல இயற்றினர்.

இந்த முதற்காலம் என்று சொல்லக்கூடிய காலத்தில், "ஏழு பெரியோர்" என்று சிறப்பித்து அழைக்கப்படும் எழுவர் வாழ்ந்தனர். அவர்கள் ஒழுக்க நெறிகள் பலவற்றையும் மக்களிடம் போதனை புரிந்து வந்தனர். பையாஸ், சிலோ, செலியோபுலஸ், பிட்டாகஸ், பெரியாண்டர், சோலன், தாலீஸ் என்ற இந்த எழுவர்தாம் பெரியோர்கள் என்று போற்றப்பட்டனர். "நீயே அறி", "முடிவை ஆராய்ந்து பார்", "அடையவேண்டிய பேறுகளில் பெரும்பேறு, நல்லது செய்ய பெறும்பேறு தான்", "தண்டனை கொடுப்பதைவிட, மன்னித்து விடுவதே

குற்றங்களைத் தடுக்கும்" என்பன போன்ற நீதிமொழிகள், அவர்கள் கூறியவற்றில் சிலவாகும்.

**தாலீஸ், செனோபானீஸ், பித்தகாரஸ்** இந்தக்காலத்தில் வாழ்ந்த சிறந்த தத்துவப் பேராசிரியர்கள் ஆவார்கள். **தாலீஸ் மிலீடஸ்** என்ற இடத்தில் கி. மு. 640-ல் பிறந்தார். இவர் **அயோனிக் கல்விக்கூடம்** என்ற தத்துவப்பயிற்சி சாலை நிறுவி, பல மாணக்கர்களை உருவாக்கினார். வான இயலைப்பற்றியும், நில அளவை இயலைப்பற்றியும் பல ஆராய்ச்சிக் கருத்துக்களைப் பரப்பினார். **எலியா** என்ற இடத்தில் தோன்றிய **செனோபானீஸ், எலியாட்டிக் கல்விக்கூடம்** என்ற நிறுவனத்தை ஏற்படுத்தினார். இவர் கற்பனைக்கடவுள்கள், புராணங்கள் ஆகியவற்றைக் கண்டித்துப் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பினார். இவருடைய கல்விக்கூடத்தைத் தொடர்ந்து, **பார்மெனிடீஸ், செனோ** இருவரும் நல்ல முறையில் வளர்த்து வந்தார்கள். **சாமாஸ்** என்ற பகுதியில் கி. மு. 580-ல் பிறந்த **பித்தகாரஸ், பித்தகாரியன் கல்விக்கூடம்** ஒன்றை இத்தாலியில், **க்ரோட்டன்** என்ற இடத்தில் நிறுவினார். கிரேக்க நாட்டுத் தத்துவப் பேராசிரியர்களில், பித்தகாரஸ் மிகச் சிறந்த ஒருவராவார். அவர் உலகம் சுழல்வதையும், ஞாயிறு, ஞாயிறு மண்டலத்தின் நடுவே இருப்பதையும் கண்டறிந்து கூறினார்.

## இடைக்காலம்

ஏறத்தாழ கி. மு. 500-ம் ஆண்டிலிருந்து இடைக்காலம் இலக்கிய உலகில் மலர்ந்தது என்னலாம். உணர்ச்சியும், உருக்கமும் ஊட்டும் கவிதைகள் மிக உயர்ந்த நிலையை எய்தின. **சிமோனிடீஸ், பிண்டர்** போன்ற புலவர்கள் அத்தகைய கவிதைகள் இயற்றினர். **மாரத்தன்** என்ற இடத்தில் நடந்த போரில் மாண்டொழிந்த வீரர்களைப்பற்றி, சிமோனிடீஸ் பாடிய கையறு நிலைப் பாட்டு, அவருக்குச் சிறந்த பிரிசை வாங்கித் தந்தது. **தெர்மோபைல்யா, சாலமீஸ், பலேஷியா** போன்ற போர்க்களங்களில் உயிர் நீத்த வீரர்களைப் போற்றிப் பல கவிதைகள் அவர் இயற்றினார். அவர் கி. மு. 477-ல் மறைந்தார். **பிண்டர்** எழுதிய கவிதைகள் மிக உயர்ந்த நோக்கும், பண்பும் வாய்ந்தவை.

தீபிஸ், துன்பியல் கதைகளை எழுதத் துவங்கியவர். அஷ்ஸிலஸ் துன்பியல் கதைகள் எழுதும் பண்பை வளப்பப் படுத்தினர்; யூரிபிடீஸ், சொபாக்கிளீஸ் போன்றவர்கள் அதனை அழகுபடுத்தி வளர்த்தார்கள்.

இந்த இடைக்காலத்தில் கிரேக்க நாட்டில் உரைநடை நூல்கள் எழுதும் பண்பும் சிறந்து விளங்கியது. ஹெரோடாடஸ் சிறந்த உரைநடை ஆசிரியர். அவர் வரலாற்றுக் குறிப்புகள் பல எழுதினர். இவரை "வரலாற்றுத் தந்தை" என்று அழைப்பர். இவர் எகிப்திலும், கிழக்கு நாடுகளிலும் சுற்றி விட்டுவந்து பல வரலாறுகள் எழுதினர். இவர் தாம் எழுதிய ஒன்பது நூல்களை எடுத்துக்கொண்டுபோய், ஒலிம்பிக் விழாவின் போது, அங்கு கூடியிருந்த மக்களிடம் படித்துக் காண்பித்தார். அறிஞர் இப்படித் தாம் எழுதியவைகளைப் படிப்பதும், தாம் கற்ற கலையை மெய்ப்பிப்பதும், தம்முடைய திறமையைக் காட்டுவதும் ஒலிம்பிக் விழாவின்போது, எப்பொழுதும், நடைபெறும் நிகழ்ச்சிகளாகும். ஹெரோடாடஸின் நூல்களைப் படித்துக் கேட்ட மக்கள் பெரிதும் போற்றி வரவேற்றார்கள். அங்கு விளையாட்டுக்களில் வெற்றிபெறுவோர்க்கு அளிக்கும் சிறப்பை விட, மிக்கச் சிறப்பை, ஹெரோடாடஸுக்கு அளித்தனர். தூசிடைட்ஸ் என்ற, பிற்காலத்தில் வரலாற்றாசிரியனைப் போற்றப்பட்டவன், அப்பொழுது இளைஞனக இருந்தானும். அவன் தன் தந்தையோடு ஒலிம்பிக் விழாவுக்கு வந்திருந்தான். ஹெரோடாடஸ் படிப்பதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த அந்த இளைஞன், சில உருக்கமான கட்டங்களில் அழுது விட்டானும். அதனைக்கண்ட ஹெரோடாடஸ், அவ்வளவு இளம் வயதிலேயே, அந்த இளைஞன் அறிவுவேட்கைக்கொண்டிருந்ததைப் பாராட்டி, அவ்விளைஞனைப் பெற்றெடுத்த தந்தையைப் போற்றினராம். ஹெரோடாடஸ் கி. மு. 484-ம் ஆண்டு பிறந்து, அந்த நூற்றுண்டு முடியும் காலம் வரையிலும் உயிர் வாழ்ந்தார்.

தூசிடைட்ஸ் தத்துவ அறிவுபூண்ட வரலாற்று அறிஞராக இருந்தார். பெலோபொனீஷியன் சண்டையைப்பற்றி, அவர்,

தெளிந்த அழகு நடையில் எழுதி, சண்டைக்கான காரணங்களை யும், அதில் தொடர்பு கொண்டவர்களின் உள்ளக்கிடக்கையும் நன்கு புலப்படுத்தினர். அவர் கி. மு 471-ம் ஆண்டு பிறந்தார். கி. மு நான்காவது நூற்றுண்டின் இடையில் வாழ்ந்த செனே பன் சிறந்த வரலாற்ருசிரியராகவும், தத்துவாசிரியராகவும் விளங்கினர். அவர் எழுதிய நூல்களில் மிகவும் குறிப்பிடத் தக்கது சாக்ரடீஸ்பற்றிய நினைவுக்குறிப்புகளாகும், பாரசீக மன்னனுன மாவீரன் சைரஸ் பற்றி ஒரு வரலாறு எழுதி, அதில் பாரசீக அரண்மனை நடவடிக்கைகளையெல்லாம் சித்தரித்தார், சைரஸ் மன்னன் கிரேக்க நாட்டின்மீது எடுத்த படையெடுப் புப்பற்றி ஒரு அழகான வரலாறு எழுதினர். தூசிடைட்ஸ் எழுதிய வரலாற்று நூலை, அவர் விட்ட இடத்திலிருந்து தொடங்கி, எழுதி முடித்தார். அவருடைய நடை இயற்கையா கவும். இனிமையாகவும், அழகாகவும் அமைந்ததாகும், அதனுல் தான் அவரை "அட்டிக் நாட்டின் தேனீ" என்று கிரேக்க மக்கள் அழைத்தனர்.

கி. மு. நான்காவது நூற்றுண்டில் வாழ்ந்த சாக்ரடீஸ் சிறந்த பேராசிரியராகத் திகழ்ந்தாரே யொழிய, நூல் எதுவும் எழுதியதாகத் தெரியவில்லை.

தத்துவாசிரியர்களிலும், எழுத்தாளர்களிலும் மிகவும் உயர்ந்து காணப்பட்டவர், சாக்ரடீஸின் மாணுக்கரான பிளேட்டோ ஆவார். அவர் கி. மு. 429-லிருந்து 347 வரையில் வாழ்ந்தவர். அவருடைய எழுத்து நடை அழகும் எளிமையும், தெளிவும் தூய்மையும், கவர்ச்சியும் நேர்த்தியும் வாய்ந்ததாகும். அவர் ஏதென்ஸ் நகரின் அருகில் அக்டமிக் கல்விக்கூடம் என்ற ஒரு நிறுவனத்தை நிறுவி, அங்கிருந்துகொண்டு சொற்பொழிவு கள் ஆற்றி வந்தார்.

சாக்ரடீஸ், பிளேட்டோ காலத்தில் வாழ்ந்த தத்துவாசிரியர் களிலே, அனக்ஸாகோரஸ், செனேக் ராபீஸ், டயோஜெனீஸ், அரிஸ்டிப்பஸ், டெமாக்ரிடஸ், போன்றவர்கள் முக்கியமான வர்கள். அனக்ஸாகோரஸ், பெரிக்கின்ஸ்க்கு நெருங்கிய நண்ப

ராகவும், கணிதம், வானியல் ஆகியவைகளில் வல்லவராகவும் இருந்தார். செனோக்ராபீஸ் பிளேட்டோக்குச் சிறந்த மாணாக்கராக இருந்து, பிளேட்டோவின் கருத்துக்களை எங்கணும் பரப்பினார். டயோஜெனீஸ் சிறந்த பேரறிஞராக இருந்தும் பித்து பிடித்தவர்போல் காணப்படுவார்; வாழ்க்கை வசதிகள் அத்தனையையும் உதறித்தள்ளுவார்; வெய்யலில் குளிர்காய்வார்; தண்ணீர்த் தொட்டியில் படுத்துக்கொள்வார். அரிஸ்டிப்பஸ் சாக்ரடீஸின் மாணாக்கரிலே ஒருவர்; இவர் சிரனெய்க் கல்விக் கூடம் என்ற நிறுவனத்தை நிறுவி, பகுத்தறிவுக் கொள்கையினால் தான், நல்ல வாழ்வு வாழ முடியும் என்பதைப் போதித்து வந்தார். டெமாக்ரிடஸ், "சிரிக்கும் தத்துவாசிரியர்" என்று அவர்காலத்தில் அழைக்கப்பட்டார். சமுதாய வாழ்வில் காணப்பட்ட குருட்டு நம்பிக்கைகளையும், மூடவழக்கங்களையும் கெட்ட பழக்கங்களையும் கேலியும் கிண்டலும் செய்வார். அவருடைய பேச்சும், எழுத்தும், நகைச்சுவை பட இருந்ததால் அவரைச் "சிரிக்கும் தத்துவாசிரியர்" என்றனர். அவர், இந்த அண்டம் அணுக்களால் ஆனது என்றும், இடமும் அணுக்களின் இயக்கமும் எல்லையற்ற நிலையானவை என்று கண்டறிந்து கூறினார்.

எபிக்யூரஸ் கி. மு. 342-லிருந்து 270 வரையில் வாழ்ந்த தத்துவாசிரியர். அவர் எபிக்யூரியன் கல்விக்கூடம் என்ற பெயரோடு பயிற்சிக்கூடம் நிறுவி, அதில் அரிஸ்டிப்பஸ் கொள்கைகளை விரிவாக்கிப் போதித்தார். நல்ல செய்கைகளைப் பகுத்தறிவின் அடிப்படையில் நின்று செய்தால், மகிழ்ச்சியும், இன்பமும் அடையலாம் என்று போதனை புரிந்தார். அவர் காலத்திலேயே செனோ என்ற தத்துவாசிரியரும் வாழ்ந்து வந்தார். அவர் ஸ்டாயிக் கல்விக்கூடம் ஒன்று நிறுவினார். அவர் எளிய வாழ்வையும், கட்டுப்பாடான ஒழுக்க முறைகளையும் வற்புறுத்தினார். அப்பொழுதுதான் வாழ்க்கை தொல்லையில்லாமல் ஈடேறும் என்று கூறினார். மக்களுக்கு நடைமுறை ஒழுக்கங்களைக் கற்பித்த கல்விக்கூடங்களில் இது மிகவும் போற்றுதற்குரியதாக விளங்கிற்று, இந்த ஸ்டாயிக் கல்விக் கூடத் தத்துவங்களை விளக்கி சிறிய நூல்களை எழுதியவர்கள்

எபிக்டெடஸ் என்ற தத்துவாசிரியரும், மார்க்கஸ் அவ்ரிலியஸ் என்ற ரோமப் பேரரசனும் ஆவார்கள்.

பிளேட்டோவின் மாணுக்கரும் தத்துவாசிரியருமான அரிஸ்டாடில், பெரிப்படெடிக் கல்விக்கூடத்தை நிறுவினர். இவர் கி. மு. 384லிருந்து 322 வரையில் வாழ்ந்தவர். இவர் இயற்கையியல், அறிவியல், அரசியல், வரலாறு, பேச்சாற்றல், குறைநிறை காணல் போன்ற பல்வேறு துறைபற்றிய கருத்துக்களைப் போதித்தார். இவர் போதித்த கருத்துக்கள், மறுமலர்ச்சி இயக்கக்காலம் வரையில், மக்களிடையே முழு ஆதிக்கம் செலுத்தி வந்தன. எதையும் பகுத்தறிந்து ஆராய்வதற்கு இவர் வகுத்துத் தந்த தர்க்கமுறை இன்னும் போற்றிக் கொள்ளத்தக்க வகையில் சிறப்புடையதாகும். அரிஸ்டாடில் ஏதென்ஸ் நகரில் லைஸியம் என்ற இடத்தில்தான், தம் சொற்பொழிவுகளை நிகழ்த்துவாராம்; இவர் விரிவுரைகள் நிகழ்த்தும்போது மேலும் கீழுமாக நடந்துகொண்டேதான் நிகழ்த்துவாராம். அதனுல்தான் அந்தப் பொருளைத் தரக்கூடிய 'பெரிப்படெடிக்' என்ற அடைமொழி, இவரது கல்விக்கூடத்துக்கு இடப்பட்டதாம். இவர், மாவீரன் அலெக்ஸாண்டருக்குக் கல்வி கற்பிக்கும் பணியில், அவனது தந்தை பிலிப் மன்னனுல் நியமிக்கப்பட்டார். இவர் தம் ஆராய்ச்சிக் கருத்துக்களை வெளியிடுவதற்கான எல்லா வசதிகளையும், பாதுகாப்பையும் மாவீரன் அலெக்ஸாண்டர் பிற்பாடு இவருக்குச் செய்துகொடுத்தான்.

இன்பியல், துன்பியல் என்ற இருவகை நாடகங்களும் பண்டைக் கிரேக்கத்தில் நடமாடின. துன்பியல் நாடகங்கள் இயற்றுவதில் சொபாக்ளீஸ், யூரிபிடீஸ் ஆகிய இருவரும் மிக வல்லவர்களாக இருந்தனர். இவர்கள் மனித வாழ்வின் பல்வேறு கோணங்களையும், அவற்றின் உணர்ச்சிகளையும் தங்கள் நாடகங்களில் விளக்கிக் காட்டியதோடு, கற்பனைக் கடவுளர்க்கும் மனித வாழ்வுக்கும் தொடர்பு இல்லை என்பதையும் விளக்கிக் காட்டினர். இன்பியல் நாடகங்கள் எழுதுவதில், அரிஸ்டோபானஸ், மினைண்டர் இருவரும் சிறந்து விளங்கினர். அரிஸ்டோபானஸ்

கி. மு. 450-ல் பிறந்தவர், அவர் தம்முடைய நாடகத்தில் சாக்ர டீஸை மிகவும் கேலிசெய்து எழுதியிருந்தார். மீனண்டர் கி மு. 342-ல் பிறந்தார். அவர் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட இன்பியல் நாடகங்கள் இயற்றினர்.

இலக்கியத்தோடு நெருங்கிய தொடர்புகொண்ட பேச்சுக் கலை மிக அழகாகவும், வியப்புக்குரிய வகையிலும் பண்டைக் கிரேக்கர்களால் போற்றப்பட்டது. பேச்சுக்கலை ஏதென்ஸ் மக்களிடம் வெற்றிகண்டதைப்போல், வேறு எங்கும் வெற்றி காணவில்லை. பேச்சுக்கலை மன்றங்கள் பல ஏதென்ஸில் நிறுவப் பட்டிருந்தன. ஏதென்ஸை ஆண்ட பெரிக்கிளீஸ் சிறந்த பேச்சா ளராகப் போற்றப்பட்டார். சாக்ரடீஸ் தெளிவாகப் பேசும் பேச்சாளராகத்தான் கருதப்பட்டார். கவர்ச்சிகரமாகப் பேசக் கூடிய குறிப்பிடத்தகுந்த பேச்சாளர்கள் லைசியாஸ், ஐசோக் ராடீஸ், அஷ்ஸினீஸ், டெமாஸ்தெனீஸ் ஆவார்கள். டெமாஸ் தெனீஸ் மற்ற எல்லோரைக்காட்டிலும் சிறந்த பேச்சாளர் என்று பேர்பெற்றவர் என்பது மட்டுமல்லாமல், உலகிலேயே மிகச் சிறந்த பேச்சாளர் என்று எப்பொழுதும் பேசப்பட்டு வருபவர். கிரேக்க நாட்டில் இலக்கியம் புகழும், பொலிவும் பெறும் வகையில் வளர்ந்ததற்குப் பேச்சாற்றல் நன்கு வளர்ந் திருந்ததும் முக்கிய காரணமாகும்.

### கடைக்காலம்

கி. மு. மூன்ருவது நூற்ருண்டிலிருந்து, கி. பி. முதல் நூற்ருண்டு வரையில், பண்டைக் கிரேக்க இலக்கியத்தைப் பொறுத்துக் கடைக்காலமாக வகுக்கலாம். அந்தக் காலத்தில் கிரேக்க இலக்கியத்தின் இருப்பிடமாக அலெக்ஸாண்டிரியா நகரம் சிறப்புற்றுத் திகழ்ந்தது. டாலமி அரசர்களின் ஆட்சி யின்கீழ் அங்கே இலக்கியமும், கலையும் செழித்தோங்கின.

தியோக்ரடஸ், மோஸ்சஸ், காலிம்யாச்சஸ், அப்பலோ னியஸ் ரோடியஸ், ஆகியோர் இனிமையும் கவர்ச்சியும் மிக்க கவிதைகள் இயற்றினர். அலெக்ஸாண்டிரியா நகரில் இவர் களின் கவிதைகளுக்குப் பெருமதிப்பு அளிக்கப்பட்டது.

அலெக்ஸாண்டிரியாவில் இலக்கண இலக்கிய புலவர்கள் ஏராளமாக வந்து இருந்தனர். அலெக்ஸாண்டிரியாவில் டாலமியால் பெரிய நூல் நிலையம் ஒன்று திறக்கப்பட்டது. அதன் நிர்வாகியாக **அரிஸ்டோபானிஸ்** என்ற பேரறிஞர் இருந்து வந்தார். **அரிஸ்டார்ச்சஸ்** என்ற இலகிய அறிஞரும் அங்கு தான் வாழ்ந்தார்.

கணிதப் பேராசிரியரான **ஈக்லிட்** இந்தக் காலத்தில் தான் நில அளவையியலின் அடிப்படைகளை விளக்கி நூல்கள் வெளியிட்டார். அவர் நூல்கள் அலெக்ஸாண்டிரியா நூல் நிலையத்தில் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. அவருக்குப் பின்னால் வந்த **அப்பலோணியஸைம்** மற்றும் பல கணிதப் பேரறிஞர்களும் கணிதயியலை வளர்த்தார்கள். **ஈக்லிட்** எழுதிய நூல் தான் இன்றும் எல்லாப் பள்ளிக்கூடங்களில் பாடத் திட்டமாக வைக்கப்பட்டிருக்கிறது.

வானியல் அறிஞரும், நிலவியல் அறிஞருமான **டாலமி** கி. பி. இரண்டாவது நூற்றுண்டில், அலெக்ஸாண்டிரியாவில் இருந்துதான் நூல்கள் பல வெளியிட்டார். அவர் இயற்றியவான நூல் பலகாலம் வரையில் உலக மக்களால் போற்றிப் புகழப்பட்டு வந்தது.

உரை நடை ஆசிரியர்களில், கி. மு. 204-லிருந்து 122 வரையில் வாழ்ந்த **போலிபியஸ்** சிறந்தவராவார். இவர் உரோமக் குடியரசு வரலாற்றைச் சீரிய முறையில் எழுதினர். உரோமர்களின் வரலாற்றை **டயோனிஸியஸ்** நன்கு எழுதி வெளியிட்டார். **டயோடோரஸ்** எழுதிய பொது வரலாறும் எல்லோராலும் பெரிதும் வரவேற்கப்பட்டது. **புளூடார்ச்** எழுதிய '**வாழ்க்கை வரலாறுகள்**' என்ற நூல் இன்றும் எல்லோராலும் விரும்பிப் படிக்கப்படுகின்றது. **ஜோஸப்பஸ்** என்ற யூத வரலாற்று அறிஞர், யூதர் வரலாற்றைக் கிரேக்க மொழியில் எழுதினர். அவர் ஜெருசலத்தில் கி. பி. 37-ம் ஆண்டு பிறந்தார். **ஸ்ட்ராபோ** என்ற நிலவியல் அறிஞர் பல குறிப்புகள் எழுதினர்.

லூசியன் கிரேக்கப் புராணங்களைப் பற்றிக் கேலியும் கிண்டலும் செய்து பல நூல்கள் எழுதினர். கலீன் என்ற மருத்துவக்கலை அறிஞர், மருந்துக்களைப் பற்றிய நூலொன்று எழுதினர். இவர் எகிப்து, கிரேக்கம், ரோம் முதலிய இடங்களைச் சுற்றியவர்.

பைபிள் முதன் முதல் ஹிப்ரு மொழியிலிருந்து கிரேக்க மொழியில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. கி. பி. முதல் நூற்ருண்டுக்குப் பிறகும் கிரேக்க இலக்கியங்கள் பல எழுந்தன என்ருலும், பண்டைக் கிரேக்கம் அடைந்த அளவு பெயரையும் புகழையும் அவை பெறவில்லை.

பண்டைக் கிரேக்கத்தில் பூத்த மலர்கள் இன்னமும் கமழத்தான் செய்கின்றன. கடவுள்பற்றிய புராணங்கள் கலையளவுக்குத்தான் எடுத்துக்கொள்ள இயலும் என்ருலும், கணிதம், வரலாறு, வானியல், அரசியல், அறிவியல், சிற்பம், தத்துவம், தர்க்கம், விலங்கியல், மரவியல், உடற்கூறு, மருந்து, நாடகம், இசை பற்றி எழுதப்பட்ட நூல்களில் வரும் கருத்துக்களில் பலவும் சிலவும் புதிய காலத்துக்குப் பெரும் வகையில் பொருந்தி வருகின்றன. பண்டைக் கிரேக்கத்தில் ஊற்றெடுத்த இலக்கிய ஊற்று, உலகெங்கும், இன்னமும், கருத்துநீர் பாய்ச்சிய வண்ணம்தானிருக்கின்றது! உலகோரும் அதனை அள்ளிப்பருகி இன்புற்றவண்ணம் இருக்கின்றனர்!

# கவின் கலைகள்

பண்டைக் கிரேக்கர்களின் கவின் கலையறிவு ஹோமர் காலத்துக்கு முன் பின்பிருந்தே செழித்தோங்கி வளர்ந்து வந்தது. அவர்களின் கலைத்திறம், அவனியிலுள்ளோர் அனைவர் கண்ணை யும், கருத்தையும் ஈர்க்கும் தன்மையது. பண்டைக் கிரேக்கத்தின் கலைச் செல்வங்கள், காலத்தோடு பலகாலம் போராடி வந்தி ருக்கும் இன்றைய நிலையிலும், அவை யூட்டும் கவர்ச்சியும், களிப்பும் மட்டற்றன.

கிரேக்க நாட்டில் மைசினி என்ற இடத்திலும், வேறு பல இடங்களிலும் அகழ்ந்து காணப்பட்ட பொருள்களிலிருந்து, சிற்பம் செதுக்குதல், படம் வரைதல், ஓவியம் தீட்டுதல், கட்டிடம் கட்டுதல் போன்ற கலைகளில் கி. மு. பன்னிரண்டாவது நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தேர்ந்த அறிவு பெற்று வாழ்ந் தனர் என்று தெரிய வருகிறது. கி. மு. ஆருவது நூற்றாண் டுக்குப் பிறகு, அதாவது பாரசீகப் போருக்குப்பிறகு கிரேக்கம் கவின் கலையை வளர்ப்பதில் மிக உச்ச நிலையை அடைந்தது என்னலாம்

கிரேக்க நாட்டில் அன்று வளர்க்கப்பட்ட கட்டிடக் கலை யையும். சிற்பக் கலையையும் இன்றுள்ள பெரிய பெரிய கவின் கலை நிபுணர்களெல்லாம் வாயார, மனமாரப் போற்றிப் பெரிதும் புகழ்கிருர்கள். அந்த இரண்டிலும் அவர்கள் உலகி லேயே மிக உயர்ந்த நிலையை அடைந்திருந்தார்கள்.

கிரேக்கத்தில் டோரிஸ், ஐயோனியா, கோரிந்த் என்ற பகுதிகளில் தாம் முதன் முதலில் கட்டிடக்கலை வளர்க்கப் பட்டது. மூன்று பகுதிகளும் மூன்று விதமான முறையில் கட்டிடக் கலையில் அழகைச் சேர்த்தன. அவை வேலைப்பாடு

களில் ஒன்றிற்கொன்று சிறிது வேறுபடும். அவற்றை டோரிக் தோற்றம், ஐயோனிக் தோற்றம், கோரிந்த் தோற்றம் என்று மூவகையாகப் பிரித்து, இன்றுகூட அந்தப் பெயர்களைக் கட்டிடக் கலையில் பயன்படுத்தி வருகின்றனர். ஏதென்ஸ் நகரிலுள்ள எத்தினே என்ற கடவுளின் கோயிலான பார்த்தினன், டெல்பி என்ற இடத்திலுள்ள அப்பல்லோவின் கோயில், சாமஸ் என்ற இடத்திலுள்ள ஜூனோவின் கோயில், எபிஸஸ் என்ற இடத்திலுள்ள டையானாவின் கோயில் முதலியவைகள் கட்டிடக் கலையின் உயர்வுக்குச் சிறிய எடுத்துக் காட்டுகளாகும். இவைகள் மதத்துறைக்குப் பயன் படுத்தப்பட்டு விட்டனவே என்பதைத் தவிர, மற்றக் கலைத்துறை வகையில் போற்றிப் புகழ்வதற்குரியனவாகும். ஜூனோவின் கோயில் 350 அடி நீளமும் 190 அடி அகலமும் கொண்டது. டயானாவின் கோயில் நீளத்தில் 420 அடியும், அகலத்தில் 220 அடியும் அமைந்தது. ஏதென்ஸி லுள்ள எத்தினே கோயிலை மிக அழகுபடக் கட்டி முடித்தவன் பீடியஸ் என்ற சிறந்த சிற்பி. இவையெல்லாம் எகிப்து நாட்டுக் கட்டிடக் கலையைப் போன்று அளவிலும், அமைப்பிலும் மிகப் பெரியவையாக இல்லாவிட்டாலும், நேர்த்தியிலும் வேலைப்பாடு களிலும் மிகச் சிறந்தனவாகும்.

கட்டிடக் கலையைப்போன்றே சிற்பக்கலையும், பண்டைக் கிரேக்கத்தில், மதத்தோடுதான் பெரிதும் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. முதன்முதல் செதுக்கப்பட்ட சிலைகள் கடவுளின் சிலைகளாகத்தாம் இருந்தன. கோயில் கட்டிடங்களை அழகு படுத்துவதற்காக அவற்றில் சிலைகள் செதுக்கப்படத் தொடங்கிப், பின் நாளடைவில், அவைகளைத் தனித்தனியாகச் செதுக்கி வைக்க முற்பட்டனர். முதலில் கரடுமுரடாக இருந்த இந்தக் கலை, ஏதென்ஸ் புகழோடு சிறப்புற்று விளங்கத் தொடங்கிய காலத்தில், கவர்ச்சியும் வனப்பும் பெறத் தொடங்கிற்று. பீடியஸ், போலிகிளீடஸ், மைரான், ப்ராக்ஸிடிலீஸ், கால்லிமாச்ஸஸ் ஆகியோர் பண்டைக் கிரேக்கத்தில் சிற்பக்கலையை

வளர்த்த சிறந்த சிற்பிகளாவர். பீடியஸ் அழகுவாய்ந்த எத்தினே கோயிலைக் கட்டியதோடு, எத்தினே சிலையையும், ஒலிம்பியன் ஜீயஸ் சிலையையும் வடித்தெடுத்தான்.

வண்ண ஓவியம் தீட்டும் கலை, சிற்பக்கலைக்குப் பிறகே புகுந்ததாகத் தெரிகிறது. வண்ண ஓவியம் தீட்டும் கலை சிற்பக் கலையைப்போல ,அவ்வளவு ஓங்குபுகழ் எய்தவில்லை. பண்டைக் கிரேக்கர்கள் நீர்வண்ணத்தாலும், மெழுகாலும் மட்டுமே ஓவியம் தீட்டத் தெரிந்திருந்தனர் ; எண்ணெய்வண்ண ஓவியம் அவர்களுக்குத் தெரியாது. ஏறத்தாழ பீடியஸ் வாழ்ந்த காலத்திலேயே, போல்யிக்னேடஸ் என்ற சிறந்த ஓவியன் வாழ்ந்தான். அவன் ஏதென்ஸ் நகரிலிருந்த பல பொதுக் கட்டிடங்களையும், ஓவியங்களால் அழகுபடுத்துவதைத் தனது பணியாகக் கொண்டிருந்தான். பிற்காலத்தில் செனோ என்ற தத்துவாசிரியர் இருந்து, விரிவுரைகள் நிகழ்த்திய இடமெனக் கருதப்படும் 'ஓவியந் தீட்டப்பட்ட மண்டபம்' அவனால் அழகுபடுத்தப் பட்டதுதான். ஸூக்ஸிஸ், பார்ராஸியஸ் இருவரும் போற்றப் பட்ட ஓவியக் கலைஞர்களாகத் திகழ்ந்தார்கள். இவர்கள் இருவருக்குள் யார் சிறந்த ஓவியந் தீட்டுபவர் என்ற போட்டி ஏற்பட்டதாம். ஸூக்ஸிஸ் திராட்சைப் பழக்கொத்து ஒன்றை ஓவியமாகத் தீட்டினன். அதை வெளியே வைக்கும்போது, அதனை உண்மையான திராட்சை எனக் கருதிப், பறவைகள் வந்து அதன்மேல் உட்கார்ந்தனவாம். தன்னுடைய ஓவியம் வெற்றி பெற்றுவிட்டது என்ற பெருமிதத்தோடு, ஸூக்ஸிஸ் ' எங்கே உன்னுடைய ஓவியம், காட்டுப்பார்க்கலாம்'' என்று பார்ராஸியஸைக் கேட்டான். உடனே பார்ராஸியஸ், "சுற்றிலுள்ள படுதாவை நீக்கிவிட்டுப் பார், தெரியும்" என்று கூறினன். ஸூக்ஸியஸ் அந்தப் படுதாவை நீக்கப்போனன் ; ஆனல் படுதா கையில் அகப்படவில்லை. சற்று உற்றுப்பார்த்தான் அதுவே தான் ஓவியம் என்று கண்டுகொண்டான் ; பார்ராஸியஸ் சிறந்த ஓவியன் என்பதைப் பிறகு ஸூக்ஸியஸ் ஒப்புக்கொண்

டான் பண்டைக் கிரேக்க ஓவியச் சிறப்புக்கு இந்நிகழ்ச்சி சிறிய எடுத்துக்காட்டாகும்.

அலெக்ஸாண்டர் காலத்தில் வாழ்ந்த ஓவியர்களில் எபெல்லிஸ் என்பவன் ஓங்குபுகழ் எய்தியவன். மாவீரன் அலெக்ஸாண்டரின் உருவத்தை அவன் எழிலோவியமாகத் தீட்டிக் காட்டினுன். வீஸஸ் கடவுள் கடலிலிருந்து மேலெழுவதுபோல் அவன் தீட்டிய ஓவியம், கடவுள் கொள்கையைப் பொறுத்து ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல வென்றாலும், கலைத்திறனைப் பொறுத்துப் போற்றப்படவேண்டிய சிறந்த ஓவியமாகும். எபெல்லீஸ் ஓவியங்களைத் தீட்டிப் பொதுமக்களின் பார்வைக்காகத் தெருவில் வைத்துவிட்டு, வீட்டுக்குள் மறைந்திருந்து, அவற்றைப் பார்க்கும் பொதுமக்கள் என்ன பேசிக்கொள்கிருர்கள் என்று உற்றுக் கேட்பானும். ஒருமுறை ஒரு செருப்பு தைக்கும் தொழிலாளி, படம் ஒன்றைப் பார்த்துவிட்டு அதில் வரைந்திருக்கும் செருப்பின் அமைப்பு சரியல்ல என்று கூறினுனும், எபெல்லீஸ், அவன் கூறுவது சரிதான் என்று ஏற்றுக்கொண்டு, அந்தப்படிக்கு அந்தப் படத்தைத் திருத்தினுனும். அந்தத் தொழிலாளி, வேருரொருபொழுது, ஒரு படத்திலுள்ள வேருர் குறையைப்பற்றிக் குறிப்பிட்டானும். எபெல்லீஸ் உடனே உள்ளேயிருந்து வெளியே வந்து, "ஏ, செருப்பு தைக்கும் தொழிலாளி! நீ செருப்பு அளவோடு நில்; அதற்குமேல் போகாதே!" என்று கூறினுனும். அதுவே பிற்பாடு பழமொழி ஆகிவிட்டது என்றும் கூறுவர்.

பல்வேறு வகையான, ஓவிய வேலைப்பாடுகளில், பண்டைக் கிரேக்கர்கள் தங்கள் முழுத் திறமையையும் காட்டி, அவற்றை முழுமைப்படுத்தினுர்கள். நுணுக்கமும், நேர்த்தியும், அழகும் அவைகளில் கொஞ்சி விளையாடின. வீட்டின் உட்புறங்கள், சுவர்கள், விதானங்கள், முகடுகள், கூரைகள் ஆகியவைகளை அமைப்பாலும் பிறவற்ருலும் அழகுபடக் காட்டினுர்கள். மரச்

109149

சாமான்கள், பளிங்கு-இரும்பு-செம்பு-வெண்கலச் சாமான்கள், ஆகியவைகளை, அழகுரு அமைந்தனவாக ஆக்கிக்கொண்டதோடு, ஓவிய வேலைப்பாடுகளையும் அவற்றில் புலப்படுத்தினர். பளிங்கு, உலோகம் இவைகளால் ஆன கிண்ணங்கள், கோப்பைகள், குவளைகள், சட்டிகள், தட்டுகள் ஆகியவற்றின் மீது கண்கவர் ஓவியங்கள் வரைந்திருந்தனர். அணிகலங்களிலும், ஆடைவகைகளிலும் ஓவிய வேலைப்பாடுகளை மிகத்திறம்படப் புகுத்தியிருந்தனர்.

பண்டைக் கிரேக்கர்கள் இசையில் மிக விருப்பமுடையவராக இருந்தனர். ஆனால் இசையை ஒரு அறிவியலாகவோ, அல்லது கலையாகவோ கருதி அவர்கள் வளர்க்கவில்லை. நரம்புகளால் செய்யப்பட்ட யாழ் போன்ற நரம்புக் கருவிகளையும், ஒற்றைக்குழல், இரட்டைக்குழல் போன்ற துளைக்கருவிகளையும் இசைக்கருவிகளாகக் கொண்டிருந்தனர். ஏதென்ஸ் மக்களிடையே, யார் சிறந்த இசை தேர்ச்சியுடையவராகக் காணப்படுகிறார்களோ, அவர்களுக்குள் போட்டி நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர்.

சுமார் 50,000 அல்லது 60,000 பேர்கள் அமரக்கூடிய திறந்த வெளி நாடக அரங்குகளை அமைத்து, நாடகக் கலையை வளர்த்தனர். திறந்த வெளி நாடக அரங்கு, வட்ட வடிவமாக அமைந்து, எதிர்ப்பக்கம் நடிக்கும் மேடையைக் கொண்டிருக்கும். வட்டவடிவமான அமைப்பு, மக்கள் உட்கார்ந்து பார்ப்பதற்கு ஏற்றவண்ணம் படிக்கட்டுகளாக மேலுயர்ந்து செல்லும். இன்பியல், துன்பியல் என்ற இருவகை நாடகங்களையும் நடித்து வந்தனர். ஏதென்ஸ் நகரில் மலையடிவாரத்தில், இப்படிப்பட்ட திறந்த வெளி நாடக அரங்கு எழிலுற அமைக்கப்பட்டிருந்தது. நாடகங்களைப் பார்க்க வேண்டியது, அரசியல் சட்டப்படி ஒவ்வொரு மனிதனின் நீங்காக் கடமையாகும். நாடகத்தைப் பற்றிய கருத்துக்களை மக்கள் அங்கேயே பரிமாறிக் கொள்வார்கள். பெரும் பாலோரால் போற்றப்படும் நாடகமே, சிறப்

பானது என்று அறிவிக்கப்படும். நாடகக் கலையை அகில உலகிற்கும் எடுத்துக்காட்டாக, ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே அமைத்துக் காட்டிய நாடு கிரேக்கமாகும். எழுச்சியுற்றிருந்த நாடகக்கலையுணர்வு, பல நாடகாசிரியர்களையும், நாடகங்களையும் உற்பத்தியாக்க ஏதுவாக இருந்தது. அரிஸ்டோபானிஸ், மீனண்டர் போன்றவர்கள் சிறந்த நாடகாசிரியர்களாகத் திகழ்ந்தனர்.

பண்டைக் கிரேக்கத்தில் குறிப்பாக ஏதென்ஸ் நகரில், பேச்சுக்கலை முக்கியமானவொரு கவின் கலையாகப் போற்றப்பட்டுவந்தது. பொதுமன்றங்களில் நின்று பேசும் முறையைப் பண்டைக் கிரேக்கர்கள்தாம் முதன் முதலில் வளர்த்தனர். அவையின் எழுந்து நின்று பேசுதல், அந்தக்கால, அந்நாட்டு அரசியல் முறைக்கு மிகவும் தேவைப்பட்டது. பேச்சுக்கலை வல்லவர்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக நின்றவர்கள் பெரிக்ளீஸ், லைஸியாஸ், ஐசோக்ரடீஸ், அஷ்ஷினிஸ், டெமாஸ்தெனிஸ்போன்றவர்கள்.

கிரேக்க நாட்டில் புத்தகங்கள் எழுதுவதும் ஒரு கவின்கலையாகவே இருந்தது. இந்தக்காலத்துப் புத்தகத்துக்கும், அவற்றிற்கும் நிரம்ப வேறுபாடு இருந்தது. பாப்பிரஸ் என்ற எகிப்திய நாட்டுச் செடியிலிருந்து உரிக்கப்பட்ட பட்டையில் எழுதி, அதனை ஒன்றன்பின் ஒன்றாக நீட்டமாக ஒட்டிப், பின் அதனை, ஒரு சிறு உருண்டைக் கழியில் சுற்றுவார்கள். அது ஒரு புத்தகம் எனப்படும். அந்தப் புத்தகத்தின் பெயரை, ஒரு சிறிய சீட்டில் எழுதி, அந்தக் கழியில் கட்டித் தொங்கவிடுவார்கள். சில சமயங்களில் மரப்பட்டைகளில் எழுதி, ஒன்றன்மேல் ஒன்று அடுக்கிவைத்துக்கொள்வார்கள். நுனி கூர்மையாக ஆக்கப்பட்டுள்ள ஒரு கம்பு அல்லது கம்பியினால், மையைத் தொட்டு எழுதினர். சிவப்பு, கறுப்பு என்ற இரண்டு நிற மைகளையும் பயன்படுத்தினர். மையைப் பல்வேறு வகையான புட்டிகளில்

ஊற்றி வைத்துக்கொண்டனர். முக்கியமான அறிக்கைகள் மெழுகு தடவப்பட்ட பலகையில், இரும்பு ஆணிகொண்டு எழுதப்பட்டன. பிஸிஸ்ட்ராடஸ், பெரியாண்டர் போன்றவர்கள் ஏதென்ஸில் நூல்நிலையங்கள் திறந்து, பாதுகாத்துவந்தனர். அலெக்ஸாண்டிரியா நகரில் பிற்பாடு, டாலமி அரசன் காலத்தில், மாபெரும் நூல்நிலையம் திறக்கப்பட்டது.

பார்க்கும் இடம் எங்கணும், செய்யும் செயல் யாவற்றிலும் அழகு தோற்றுவிக்கவேண்டும் என்பதிலே, பண்டைக் கிரேக்கர்கள் கண்ணுங் கருத்துமாக இருந்தனர். எனவேதான் கவின்கலை ஆர்வம் அவர்களிடத்தில் பொங்கி எழுந்து விளிம்பு முட்டி வழிந்தோடிற்று!

# தொழில்கள்

உழவுத் தொழில், பண்டைக் கிரேக்கர்களின், முதன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்த தொழிலாகும். உழவுத் தொழில் செய்தல்லாது, வேறு வகையில் உணவுப் பொருளைப் பெற முடியாத நிலையில், ஆரம்பகாலத்தில், கிரேக்கம் இருந்துவந்தது. இயற்கையில், கிரேக்க நாட்டின் பகுதிகள் ஒவ்வொன்றும் மலையாலும், கடலாலும் வளைக்கப்பட்டிருந்ததால், ஒவ்வொன்றும் வெறும் கோட்டையாகமட்டும் காட்சியளிக்காமல், சில சமயங்களில் சிறைக் கூடமாகவும் இருந்துவந்தது. ஆரம்பக் காலத்தில் வெளிநாட்டோடு வாணிகம் புரியவோ, வெளிநாட்டு உணவுப் பொருள்களை பண்டமாற்றுகவோ வரவழைக்க வசதி ஏற்படாமலிருந்ததால், கிரேக்கர் தங்களுக்குக் கிடைத்த ஒவ்வொரு அங்குல நிலத்தையும் உழுது பயிரிட்டனர். பெரும்பாலும் கோதுமையையே அவர்கள் உணவுப் பொருளாகப் பயிரிட்டனர் உழவுத் தொழிலில் கிரேக்கர்கள் அடிமைகளைப் பெரிதும் பயன்படுத்திக்கொண்டனர்.

உணவுப்பொருள் பற்றாத நிலையில், எகிப்து, சிறிய ஆசியா போன்ற வளமிக்கப் பகுதிகளுக்குச் சென்று உணவுப் பொருளையும், பிறவற்றையும் கொள்ளையடித்துக்கொண்டுவரத் தலைப்பட்டனர். இந்த முறையில் நல்ல வருவாய் இருந்ததைக்கண்டு, கடற்கரையோரத்தில் வசித்த கிரேக்கர்கள் கடற்கொள்ளையடிப்பதைத் தொழிலாகவும், பிழைப்பாகவும் வைத்துக்கொள்ளத் துவங்கினர்.

கொள்ளையடிப்பதில் பெற்ற திறமையையும், வலிவையும் வைத்துக்கொண்டு, கருங்கடல் ஓரம், வால்கா நதிப்பகுதி, சிறிய ஆசியா, எகிப்தின் வடபகுதி ஆகியவற்றைக் குடியேற்ற நாடுகளாக ஆக்கிக்கொண்டு, பல கிரேக்கர்களை அங்குபோய்க் குடியேற்றினர். குடியேற்ற நாட்டினரும் நாளடைவில் சிறு சிறு குடியேற்றப் பகுதிகளைப் படிப்படியாக ஏற்படுத்திக் கொண்டனர். கிரேக்கர்கள் நாலாபக்கங்களிலும் பரவினர். பெரும் பெரும் ஆறுகளின் வண்டல் பகுதிகளில் குடியேறி, அங்குள்ள வளப்பமான நிலத்தில் கோதுமை பயிரிட்டு அதனைத் தாயகத்திற்கும் அனுப்பிவைத்தனர். கோதுமையோடு, பொன், மீன், கருவாடு போன்ற பொருள்களையும் தாய்நாடாகிய கிரேக்கத்திற்கு ஏற்றுமதி செய்தனர். இதனால் வாணிகத்தொழில் வளர ஆரம்பித்தது.

குடியேற்ற நாடுகளில் குடியேறிய கிரேக்கர்கள், அங்குள்ள நாட்டு மக்களை அடக்கி, அடிமைப்படுத்தித், தங்களுக்கு உதவியாக வைத்துக்கொண்டதோடு, தாயகத்திற்கும் ஏற்றுமதி செய்தனர். அடிமை வாணிகம் அவர்களுக்கு வருவாய் வரும் வழியாக மட்டுமின்றி, அவர்களுக்குப் பயன்படக்கூடியதாகவும் இருந்தது. ஆசியாவின் பகுதிகளிலிருந்து பிடித்துக்கொண்டு வரப்பட்ட அடிமைகள், ஒலிம்பிக் விழாவின்போது ஏலத்தில் விடப்படுவர். அவர்களை ஏலத்தில் எடுத்துச் செல்பவர்கள், கிழக்குப் பகுதி நாடுகளைப்பற்றிய அருமை பெருமைகளைச் சொல்லச் சொல்லி, அவ்வடிமைகளிடத்திலிருந்து கேட்டறிவார்கள். கிழக்கு ஆசியா நாடுகளின் வளப்பத்தை அறிந்த கிரேக்கர்கள் தங்கள் வாணிகத்தை அரேபியா, இந்தியாவின்வடபகுதி, திராவிடம், சீனம் வரையில் நீட்டினார்கள். கிரேக்க வாணிகம் சீரும் சிறப்பும் பெற்றுச், செல்வச்செழிப்போடு வளர்ந்தோங்கியது. திராவிடத்திலிருந்து சரக்குகள் அரபிக்கடல் வழியாக ஏரல் கடலுக்குச் சென்று, பின்பு அங்கிருந்து தரைவழியாகக் காஸ்பியன் கடலுக்கும், காஸ்பியன் கடலிலிருந்து வால்கா, டான் நதிகளின் வழியாக கருங்கடலுக்கும், பின்பு அங்கிருந்து கிரேக்கப் பகுதிகளுக்கும் சென்று சேர்ந்தன. பிற நாடுகளோடு

கொண்டிருந்த வாணிகத் தொடர்பு, கிரேக்கம் அறிவு, ஆற்றல், கலை, காவியத்தில் பன்மடங்கு சிறந்து விளங்க ஏதுவாக இருந்தது.

பண்டைக் கிரேக்க நாட்டில் போர்வீரனாக இருப்பது, கடமையாக மட்டுமல்லாமல், தொழிலாகவும் இருந்துவந்தது. போர்ப்படையைக் கொண்டு தங்கள் அரசைப் பாதுகாத்துக் கொள்ளவும் செய்தனர். பிற நாடுகளின்மீது படையெடுத்துக் கொள்ளையடித்துப் பெரும் பொருள் திரட்டிக்கொள்ளவும் செய்தனர்.

வாணிகத்தொழில் நடத்தவும், போர்த்தொழில் புரியவும், கொள்ளைத்தொழில் செய்யவும் கப்பல்கள் தேவைப்பட்டதால், கடற்கரையோரப் பட்டினங்களிலுள்ள சிலர் கப்பற்கட்டும் தொழிலிலும், கப்பலை இயக்கும் தொழிலிலும் ஈடுபட்டனர். கிரேக்கர்கள் பல துறைமுகங்களை ஆங்காங்கு ஏற்படுத்தியிருந்தனர்.

கடற்கரை யோரங்களில் மீன் பிடித்தலும், கருவாடு செய்தலும் ஆன தொழில்கள் நடைபெற்றன. உப்பளத் தொழிலையும் கற்றிருந்து, உள்நாடுகளோடு உப்பு வாணிகமும் நடத்தினர். ஒட்டகங்களின்மீது கூட்டங் கூட்டமாகச் செல்லும் 'காரவான்' மூலம் தரைவாணிகம் புரிந்தனர்.

பண்டைக் கிரேக்கத்தில் சிற்பத் தொழிலும், ஓவியத் தொழிலும், கட்டிடத் தொழிலும், சிறந்து விளங்கியதை உலகம் நன்கு அறியும்.

பண்டைக் கிரேக்கர்கள் சுரங்கத் தொழிலையும் அறியாமலில்லை. வெள்ளி, செம்பு, இரும்பு ஆகிய உலோகங்களையும் பளிங்கு, கருங்கல் போன்ற பாறைகளையும் வெட்டி எடுத்தனர்.

அவர்கள் ஏராளமான கைத்தொழில்களையும் செய்து வந்தனர். நூல் நூற்றல், நெசவு நெய்தல், மட்பாண்டம் வனைதல்,

ஆயுதங்களையும் கவசங்களையும் செய்தல், பொன்–வெள்ளி நகைகளைப் பண்ணுதல், பல்வேறுவிதமான உலோகப் பாத்திரங்கள் செய்தல், மரச் சாமான்கள் செய்தல் போன்ற பல தொழில்களையும் திறம்படவும், அழகுபடவும் செய்துவந்தனர் இந்தத் தொழிலெல்லாவற்றிலும் ஏராளமான மக்கள் ஈடுபட்டிருந்தனர். இவர்களைத் தவிர்த்த பிறர் கடைக்காரர்களாகவும், வாணிகம் செய்வோராகவும், பொருள் விற்போராகவும் உழவர்களாகவும், போர்வீரர்களாகவும், அரசியல் அலுவலர்களாகவும் இருந்தனர்.

சாமான்களின் மொத்த வியாபாரம் துறைமுகங்களிலும், சில்லரை வியாபாரம் சந்தைக் கூடங்களிலும் நடைபெறும்.

பண்டைக் கிரேக்கர்கள் கையாண்ட தொழில்கள் அவர்களுக்கு வாழ்வையும், வளத்தையும் மட்டுமன்றி, புகழையும் பொலிவையும் உலகில் பெற்றுத்தந்தன !

# பண்புகள்

பண்டைக்கால கிரேக்கர்கள் வாழ்க்கையை அழகாகவும், ஆடம்பரமாகவும் நடத்துவதில் விருப்பங்காட்டி வந்தனர். இயற்கையாலும், செயற்கையாலும் அவற்றில் எழிலைக் காண துடித்தனர்; அவற்றின் இன்பத்தில் திளைத்தனர்.

கிரேக்க நாடே நானிலத்தில் இயற்கை எழில் கொஞ்சும் பூஞ்சோலையாக இருந்துவந்தது. குளிரும், வெய்யலும் அளவுக்கு மீருமல், சம அளவில் இருந்துவந்தன. காலையில் பனி மழை பெய்து, எங்கணும் வெள்ளிய நிறம் காணப்படும்; அலைகடலும் மலைக்குன்றும், மாடமாளிகைகளும் மரச்சோலைகளும், பனியில் முழ்கிக்கிடக்கும். எந்த வேளைகளிலும் கிரேக்கம் ஒரு குளிர் நாடுபோல் காட்சியளிக்கும். நண்பகலில் பார்த்தால் நல்ல வெய்யல் எரிக்கும்; எங்கணும் வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும்; மரகத மலையில் தங்கம் பூப்பதுபோல் ஆரஞ்சுகள் பளபளக்கும்; நீலக்கடலில் வெள்ளிய அலைகள் துள்ளி விளையாடும்; மலைச்சரிவுகள் பச்சைப்படலம் விரித்தாற்போன்று காட்சியளிக்கும்; கிரேக்கமே ஒரு வெம்மை நாடுபோல் தோற்றங் கொடுக்கும். இப்படிப்பட்ட இயற்கை அழகோடு செயற்கை அழகைக் கூட்டவேண்டும் என்ற ஆர்வம் அவர்கள் உள்ளத்தில் எப்பொழுதும் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டேயிருந்தது.

எழிலும், கட்டுக்கோப்பும், கம்பீரமும் கொண்ட தோற்றத்தைப் பெறுவதிலே, ஆண், பெண் இருபாலாரும் பெருமை

காட்டினர். கட்டுக்கோப்பான-உறுதியான உடலைப்பெற உடற்பயிற்சிக்கூடங்களை ஆங்காங்கு நிறுவியிருந்தனர். ஏறு போல் பீடு நடை நடந்து, கவர்ச்சிகரமான தோற்றப்பொலிவைக்கொண்டிருந்தவன், மக்களின் செல்வாக்கை எளிதில் பெற்றனர். ஏதாவது பொதுப்பணிக்குத் தலைமைவகிக்கத் தேர்ந்தெடுக்கும்போதும், கோவில்களுக்குப் பூசாரியாகத் தேர்ந்தெடுக்கும்போதும் ஆணழகர்களையே தேர்ந்தெடுத்தனர். அழகற்ற தோற்றமுடையவர்களை வெறுத்தொதுக்குவது பண்டைக் கிரேக்கர்களின் பண்பாகும். தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் நல்ல அழகான தோற்றத்தோடு பிறக்கவேண்டும் என்பதற்காகப் பெண்கள் தங்கள் படுக்கை அறைகளில் அப்பலோ போன்ற அழகான கடவுள்களின் சிலைகளையும், படங்களையும் வைத்துக்கொண்டிருப்பார்களாம். அவற்றைப் பார்த்து எண்ணமிட்டுக்கொண்டேயிருந்தால், அவற்றைப்போன்ற பிள்ளைகள் பிறக்கும் என்பது அவர்களது நம்பிக்கை.

போர்ப்படையில் சேர்ந்து பணியாற்றுவதும், நாட்டுக்காகக் களத்தில் உயிர்துறப்பதும் பெருமைக்குரிய பண்புகளாகப் போற்றப்பட்டன. ஆண்களேயன்றிப் பெண்களும் உடற்பயிற்சியும், போர்ப்பயிற்சியும் பெற்றனர். பெண்கள் களம் நோக்கிப் போரிடச் செல்வதில்லையேயொழிய, மாற்றூர் படையினர் ஊருக்குள் நுழைந்து தாக்கத் தலைப்பட்டால், அந்தத் தாக்குதலைச் சமாளிக்கும் திறம்பூண்டிருந்தனர். கிரேக்கத் தாய், தன் மகன் போர்க்களத்தில் இறந்துபட்டான் என்பதைத் தான் கேட்க விரும்புவாளேயல்லாது, தாய்நாட்டைக் காட்டிக் கொடுத்தான்—கோழையாக நடந்துகொண்டான் என்பதைக் கேட்க ஒருபோதும் விரும்பினதில்லை. மகனைப் போர்க்களத்துக்கு அனுப்பும்போதே "வெற்றிக் கேடயத்தோடு திரும்பி வா ; இல்லையேல் பிணமாகக் கேடயத்தின்மேல் வா" என்று சொல்லி அனுப்புவாளாம். தாய்நாட்டுப் பற்றும், போர்வீரமும் கிரேக்கர்களிடமிருந்து பிரிந்து காணமுடியாத பண்புகளாகும்,

'முண்ணை'த் தொட்டாலும் 'பொன்'னுக்கிக் காட்டிடும் தன்மை, கிரேக்க இனப் பண்பாக இருந்து வந்தது. பல்வேறு துறைபற்றிய அறிவையெல்லாம், கிரேக்கர்கள் தாங்களாகவே கண்டறிந்து, வளர்த்தார்கள் என்று கூறமுடியாது. கிழக்கு ஆசியா நாடுகளிலிருந்தும், எகிப்திலிருந்தும் அவர்கள் பெற்ற மூலக்கருத்துக்கள் பலப்பல அந்த மூலக்கருத்துக்களை வைத்துக்கொண்டு, அவைகளிலிருந்து கிளைகளையும், பூக்களையும் காய்களையும், கனிகளையும் அழகுற, அறிவுபெற வளர்த்தார்கள். கடவுட்கதைகள், கோயில் முறைகள், சிற்பம், ஓவியம், கணிதவியல், வானியல் ஆகியவற்றிற்கான அடிப்படைகளை எகிப்து நாட்டிலிருந்து தான் கிரேக்கர்கள் பெற்றனர்; அப்படிப்பெற்ற அவைகளை இனிமையாகவும் அழகாகவும், உயர்வாகவும் நேர்த்தியாகவும் ஆக்கிக் கொண்டனர். ஆரம்பக் காலத்திலிருந்தே எகிப்து, கிரேக்கர்களின் பல்கலைக்கழகமாகக் காட்சியளித்து வந்தது. ஆர்பியஸ், ஹோமர் எகிப்தைச்சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பியவர்கள். சோலன் சட்டதிட்ட முறைகளில் அங்குதான் பயிற்சி பெற்றார்; பித்தகாரஸ் தம் தத்துவக் கருத்துக்களை அங்குதான் உருவாக்கினார். தாலீஸ் அங்குதான் நிலக்கோணவியலைப்பற்றிய பாடங்களைத் தெரிந்து கொண்டார். டெமாக்ரிடஸ், செனோபானீஸ் ஆகியோர் உளவி மதக்கருத்துக்களை வெறுக்கக் கற்றுக்கொண்டதும் எகிப்தில் தான். கிரேக்க நாட்டுக் கற்றறிவாளன் ஒவ்வொருவனும், எகிப்து நாட்டுக்குச் சென்று வருவதைத் தன் கல்வியில் ஒரு முக்கிய கட்டம் என்றே எண்ணினான். நமக்கு இன்றைய நிலையில், எகிப்து, அழிந்து போன மாளிகைகள் - கரிந்துபோன கட்டிடங்கள் - சிதைந்த சிற்பங்கள் - சிதறிக்கிடக்கும் எலும்புக் கூடுகள் ஆகியவை சேர்ந்த ஒரு கண்காட்சி சாலை போலக் காட்சியளிக்கின்றன. ஆனால் பண்டைக் கிரேக்கர்கள் அவற்றை, அவை வாழ்ந்த நிலையிலேயே பார்த்திருந்திருக்கிறார்கள். அவர்கள் பண்டை எகிப்தியர்களின் முட்டாள்தனமான ஆனால் பக்தியோடு செய்யப்பட்ட மதச் சடங்குகளைப் பார்த்திருப்பர் - பூனை வைத்து வணங்கு

வதையும், பழக்கப்பட்ட முதலைகளுக்கு உணவு அளிப்பதையும், ஜாடிகளில் பிணங்களை அடுக்குவதையும், பிரமிட் கோபுரத்திற்குள் அரசன் அரசியர்களை அடக்கம் செய்வதையும் அவர்கள் பார்த்திருப்பர். ஹெரோடாடஸ் வரலாற்றுக் குறிப்புகள் பல சேர்த்தார்; பிளேட்டோ நாட்டைச் சுற்றிப்பார்த்து மகிழ்ந்தார். கிரேக்கம் காகிதத்தில் எழுதுவதை எகிப்திடமிருந்துதான் கற்றுக்கொண்டது. எகிப்திலிருந்துதான் கிரேக்கத்திற்குத் தேவையான காகிதத்தாள்கள் வந்துசேர்ந்தன. அவைகள் இல்லாவிட்டால், கிரேக்கம் பல நூல்களை வெளிக் கொண்டு வந்திருக்காது. உலகமும் பலவற்றை இழந்திருக்கும். உள்ளதை—கிடைத்ததைப் பெருக்கி, உயர்வாழ்வு வாழவேண்டும் என்ற உணர்ச்சி, ஒவ்வொரு கிரேக்க நாட்டு ஆண், பெண் உடலின் குருதியோட்டத்திலும் இரண்டறக் கலந்திருந்தது.

'வாழ்வு வாழ்வதற்கே', 'கலைவாழ்வுக்கே' என்ற உணர்வோடுதான் அவர்கள் வாழ்ந்துவந்தனர். பண்டைக் கிரேக்கம் தன் சிந்தனைக்கு நிரம்ப இடம் அளித்திருந்தது; விடுதலை வேட்கையுணர்வு கிரேக்கர்களிடத்தே பொங்கி எழுந்து, எப்பொழுதும் ததும்பிக்கொண்டேயிருந்தது. கற்றறிஞர்கள் பகுத்தறிவு ஆராய்ச்சிக்கு உயர்ந்த மதிப்பு அளித்தனர். அறிவியல் கருத்துக்கள் தங்குதடையின்றி வளர்ந்தன; அரசியல் பற்றிய உரிமைக் கருத்துக்கள் தாராளமாக நடமாடின; தத்துவக் கருத்துக்கள் தண்ணீர்பட்ட பாடாய்ப் பரவின; கலையும் காவியமும் அவரவர் விருப்பப்படி வளர்க்கப்பட்டன. அந்தக் காலத்தில் திராவிடம், வடநாடு, சுமேரியா, அரேபியா, பாரசீகம், எகிப்து போன்ற நாடுகளைத்தவிர, பிறபகுதிகளால் நினைத்துப்பார்க்கவும், எட்டிப்பிடிக்கவும் முடியாதவகையில், கிரேக்கம் அறிவொளி வீசும் நாடாகத் திகழ்ந்தது.

கிரேக்கநாடு பெண்களுக்கு நல்ல மதிப்பும் உயர்வும் கொடுத்து வாழ்ந்து வந்தது; ஆனல் அவர்கள் உரிமைகளோடு உலாவமுடியாதவாறு கட்டுப்பாடுகள் பல இருந்தன. தத்துவாசிரியர்கள், சொற்பொழிவாளர்கள், போர்ப்படை வீரர், ஒலிம்

பிக் வீரர் ஆகியோரைப் போற்றிப் பாராட்டிப் புகழும் பண்பு பண்டைக் கிரேக்கர்களிடம் மண்டிக்கிடந்தது.

பண்டைக் கிரேக்கம், அறிவு, ஆற்றல் துறைகளில் இவ்வளவு மேம்பாடுகள் உற்றிருந்தபோதிலும், பல குறைபாடுகளையும் அது கொண்டிருந்தது. கிரேக்கர்கள் அழுக்காறும், பொருமையும் கொண்டவர்களாக இருந்தார்கள். ஒரு பகுதி சிறந்து வளர்வது மற்றொரு பகுதிக்குப் பிடிக்காது. மாற்று நாட்டானோடு சேர்ந்துகொண்டு, தன் நாட்டின் மற்றொரு பகுதியை அழிக்கத் தயங்குவதில்லை. இதனால்தான் கிரேக்கம் பெறவேண்டிய முழு வளர்ச்சியையும், பெருமையையும் பெறமுடியாமல், பின்னால் சிதைந்து சீரழிந்துபோயிற்று.

கிரேக்கர்கள் ஒருவரையொருவர் நம்புவதில்லை; ஒருவரையொருவர் காட்டிக்கொடுக்கச் சிறிதும் பின்வாங்குவதில்லை. ஆட்சித்தலைவர்கள், சொற்பொழிவாளர்கள், தத்துவாசிரியர்கள் இவர்களில் பலர் ஊழல்கள் மலிந்தவர்களாகவும், பண்பு கெட்டவர்களாகவும், தாய்நாட்டைக் காட்டிக்கொடுப்பவர்களாகவும் இருந்துவிட்டனர். செர்செஸ் என்ற பாரசீக மன்னர் கிரேக்க நாட்டின்மீது படையெடுக்க எண்ணியபோது, ஒரு கிரேக்கன், கிரேக்க நாட்டைப் பிடிக்க அம்மன்னன் படையெடுத்துச் செல்ல வேண்டிய அவசியமில்லை, கிரேக்கநாட்டுச் சொற்பொழிவாளர்க்கு இலஞ்சம் கொடுத்துவிட்டால் போதும், கிரேக்க நாடு தானாகவே சரண்புகும் என்று கூறினானும். அவ்வளவு கேடான பண்பு நிலவிற்று.

சில கெட்ட பொருமைக்காரர்களின் நடவடிக்கைகளால், சில நல்லவர்கள்கூட நாட்டைவிட்டு ஓடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

பண்டைக் கிரேக்கர்கள் மிக்க ஆடம்பரமான வாழ்வை நடத்தினர். ஆடம்பரத்தில் அவர்களுக்கு நிரம்ப விருப்பம், ஆடம்பரம் செருக்கினைத்தந்தது; அந்த இரண்டும் சேர்ந்து அவர்களை நாளடைவில் சீரழிய வைத்துவிட்டன.

அடிமை வாணிகம் நடத்தும் கேடான முறை பண்டைக் கிரேக்கர்களிடை இருந்துவந்தது. வேற்று நாட்டவர்களை அடிமைகளாக்குவதும், அவர்களை விற்பதும் வாங்குவதும், அவர்களைக் கொடுமைப்படுத்துவதும், அவர்களிடத்தில் கடுமையான வேலை வாங்குவதும், அடிமைப் பெண்களை ஆசைநாயகிகளாக ஆக்கிக்கொள்வதும் பண்டைக் கிரேக்கர்களின் தகாத நடத்தைகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும். பலதார மணத்தை அவர்கள் ஆதரிக்கவில்லை என்றாலும், பொதுப் பெண்டிர்களைக் கொண்டு மகிழ்ந்திருக்கும் பண்பு அவர்களிடம் இருந்தேவந்தது.

பலராகக் குடித்துக் கூத்தாடி மகிழும் தன்மை அவர்களிடம் பெருவாரியாகக் குடிகொண்டிருந்தது.

இவ்வளவு கெட்ட பண்புகளுக்கிடையே விருந்தோம்பும் சீரிய பண்பு அவர்களிடத்துச் சிறந்தே திகழ்ந்தது.

பொறாமை, பொச்செரிப்பு, நாணயமின்மை, நம்பிக்கையின்மை, பணப்பேராசை, வாக்குறுதிமீறுதல், கொள்ளையடித்தல், திருடுதல், இலஞ்சம் வாங்குதல் முதலிய இழிபண்புகள் எல்லாத் தரத்தினரிடத்தும் காணப்பட்டன. ஆனால் பொதுப் படையாகப் பார்க்கும்போது, பண்டைக் கிரேக்கர்களின் அறிவு, ஆற்றல், பேர் புகழ் இவை எல்லாவற்றையும் மறைத்துவிட்டன.

அழகிலும், புகழிலும் அவர்கள் வைத்திருந்த ஆர்வந்தான், கிரேக்கநாட்டைப் பொலிவும் பூரிப்பும் மிக்கதொரு நாடாக ஆக்கிற்று!

# பழக்கவழக்கங்கள்

பண்டைக் கிரேக்கர்களின் சமுதாய வாழ்வைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டுமானால், ஏத்தென்ஸ் நகர மக்களின் பழக்கவழக்கங்களைத்தாம் எடுத்துக்காட்டுகளாகக் காணவேண்டும். மற்றப் பகுதிகள் சிறுசிறு வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதிலும், கிரேக்க நாகரிகம் என்று குறிப்பிடும்போதெல்லாம், ஏதென்ஸ் நாகரிகம்தான் முன்வந்து நிற்கும்.

பண்டைக் கிரேக்க சமுதாயத்தில் பரம்பரை பிரபுக்கள், பணக்காரர்கள், ஏழைகள், அடிமைகள் என்ற பல பிரிவினரும் இருந்தனர். ஏழைகளும், அடிமைகளும் முன்னவர்க்கான தொண்டுகளைச் செய்வர். நிலம் உழுது பயிரிடுதல் போன்ற பணிகளைப் பின்னவர்கள்தாம் செய்வார்கள்; முன்னவர்கள் அதனால் வரும் வருவாயை வைத்துக்கொண்டு, ஆடம்பர வாழ்வு வாழ்வர்.

நல்ல பணம் படைத்தோரின் வீடுகளில், ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் தனித்தனிப் பகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பகுதியும் நல்ல சதுர வடிவில் அமைந்து, நடுவே வாசலைக் கொண்டிருந்தது. வாசல் திறந்தவெளியாக இருக்கும்; வாசலின் தளம் பெரும்பாலும் அழகான கற்களால் பரப்பப்பட்டிருக்கும்; சில இடங்களில் வாசலின் நடுவே நீர்பீச்சுங் குழாய்கள் பொருத்தப்பட்டிருக்கும். அறைகள்முன் பந்தல்-மண்டபத்திலிருந்து சதுர அமைப்பைச் சுற்றியிருக்கும். தெருக்கதவை யடுத்து ஒரு பெரிய நடையிருக்கும்; அந்த நடை

நேரே ஆண்கள் பகுதியோடு போய்ச் சேரும். ஆண்கள் பகுதிக்குப் போய்ச் சேரும் வழியில் ஒரு குறுக்கு வழி பிரிந்து பெண்கள் பகுதியை அடையும். பெண்கள் பகுதியில் பெண்கள் உட்கார்ந்திருக்கும் அறையை அடுத்து, நூல் நூற்பதற்கும், நெசவு நெய்வதற்கும், சமையல் முதலிய வீட்டுவேலைகள் பார்ப்பதற்கும் தனித்தனி சிறுசிறு மண்டபங்கள் இருக்கும். பண்டைக் கிரேக்கர்கள் விறகுகளை எரித்து அடுப்பு மூட்டிக்கொண்டனர். ஆண்கள் பெண்கள் அமர்ந்திருந்த அறைகளில், கணப்பு காய்வதற்காகக் கணப்புச் சட்டிகள் கட்டப்பட்டிருந்தன. கணப்புச் சட்டியை அடுத்து வீட்டுக் கடவுள்கள் வைக்கப்பட்டிருந்தன. குடும்பத்துக்கு யார் ஆதிமூல மனிதராக இருந்தாரோ, அவர் வீட்டுக் கடவுளாகக் கருதப்பட்டு, அவர் சிலை கணப்புச் சட்டியை அடுத்து வைக்கப்பட்டிருந்தது. குடும்பத்தினர் மிக்க அன்போடு அதனை வழிபட்டு வந்தனர். மணமான பெண் கணவன் வீட்டில் நுழைந்தவுடன், அவள் செய்யவேண்டிய முதல் பணி, இந்தக் குடும்பக் கடவுளை வழிபடுவதுதான். இப்படிப்பட்ட மூடவழக்கங்கள் பல கிரேக்கர் வாழ்க்கையில் மண்டிக்கிடந்தன.

சோபாக்களையும், சாய்வு நாற்காலிகளையுமே உட்காரும் சாதனங்களாகப் பயன்படுத்தினர். பணக்காரர் இல்லங்களில், சாப்பாட்டுக்கு மேசைகள் போடப்பட்டிருந்தன. கண்ணாடிச் சாமான்களைக் கிரேக்கர்கள் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. சாப்பிடும் தட்டுகளும், பிற பாத்திரங்களும் மண், உலோகம், மரம் இவற்றால் செய்யப்பட்டிருந்தன. நன்றாகப் பளபளப்பாக்கப்பட்ட வெண்கலத்தையே முகம் பார்க்கும் கண்ணாடியாகப் பயன்படுத்தினர். எண்ணெய்விட்டு எரியவைக்கும் பல்வேறு விதமான விளக்குகளை வைத்திருந்தனர். விளக்குத் தண்டுகள் வேலைப்பாடுடையனவாய், கண்கவரும் அழகினவாய் விளங்கின.

பண்டைக் கிரேக்கர்கள் ஒரு நாளைக்கு இரு வேளை உணவு கொண்டு வந்தனர். காலையில் ஒரு உணவும், மாலை முடிவில் ஒரு

உணவும் உட்கொண்டனர். மாலை உணவே முக்கியமானதாகவும், சிறப்பானதாகவும் கருதப்பட்டது. அவர்கள் ஆடம்பரச் சாப்பாட்டுக்காரர்கள் என்று சொல்லுவதற்கில்லை. கோதுமையினாலான ரொட்டி, மாவு-பார்லி இவைகளாலான களி அல்லது கஞ்சி ஆகியவற்றோடு மீன், இறைச்சி, காய்கனிகள் இவற்றாலான கறிவகைகளையும் கொண்டு உணவருந்தினர். விருந்துகளில் பல்வேறுவிதமான மீன்வகைகள், கோழி-காடை முதலியவற்றின் இறைச்சி, இனிப்புப் பண்டங்கள், பழங்கள், முந்திரி போன்ற கொட்டைகள், அந்தந்தக் காலத்தில் மட்டுமே அகப்படும் அருமையான காய்கனிகள் ஆகிய இவைகள் பரிமாறப்படும். விருந்துக்குப்பின் எல்லோரும் உட்கார்ந்து, அரசாங்க நடவடிக்கைகளிலிருந்து, சந்தைக் கூடத்திலுள்ள பொருள்களின் விலைவிவரம் வரையில், பல்வேறு பிரச்சினைக் குறித்து உரையாடல் நடத்துவர். உரையாடலோடு, இசை நிகழ்ச்சியும், விளையாட்டுக்களும் மகிழ்ச்சியைப் பெருக்கக் கொள்ளப்படும். திராட்சை ரஸமும் விருந்துக்குப்பின் பரிமாறப்படும். திராட்சை ரஸத்தை ஜாடிகளிலிருந்து அப்படியே ஊற்றிக் குடிக்காமல், பெரிய பாத்திரத்தில் தண்ணீர்விட்டு அதோடு கலக்கி, சிறிய மொடாவினால் எடுத்து எடுத்துப் பருகுவர். குடியை அளவோடு கொடுக்கவும், மிதமிஞ்சிப் போகும்போது தடுத்து நிறுத்தவும் ஒருவர் அந்தக் கூட்டத்தினரால் முன்கூட்டியே தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார். அவருக்கு சிம்போஸியார்ச் என்று பெயர். குடிப்பவர்களைக் கண்காணித்துக் கொண்டிருப்பது அவரது வேலை. அவர்கள் உணவுவகைகளை எடுக்கக் கரண்டியையோ, முள்ளையோ பயன்படுத்தவில்லை; கையினால் தான் எடுத்துச் சாப்பிட்டனர். மகிழ்ச்சியோடு இருக்க, வசதியுடையோர், அடிக்கடி விருந்துகள் ஏற்பாடு செய்வர்; அவற்றில் உரையாடுதல், ஆடல் பாடல், குடித்து மகிழ்தல் ஆகியவை முக்கியமான இடம்பெறும். இப்படிப்பட்ட மகிழ்ச்சி விருந்துகளிலும், குடிவிருந்துகளிலும் நல்ல குடிமகளிர்கள் கலந்து கொள்வார்கள். விலைமகளிர்கள்தாம் விருந்து விழாக்களின்

போது ஆடல் பாடல் நிகழ்த்துவார்கள். விருந்தினர் எல்லோரும் அழகான ஆடை அணிகளால் தங்களை அழகுபடுத்திக் கொண்டு வருவார்கள். விருந்து உண்ணும்போது, அவர்கள் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருப்பர்; எதிரில் மேஜைகள் போடப்பட்டிருக்கும்.

ஆடைகள் அணிவதில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அதிக வேறுபாடு தென்படுவதில்லை. உள்ளே உடலை மறைப்பதற்கு உள் துணியொன்றும், வெளியே போர்த்திக்கொள்வதற்கு வெளித்துணி ஒன்றும் பயன்படுத்திவந்தனர். உள் துணி பருத்தியினுலோ, கம்பளியினுலோ ஆன நேர்த்தியான-மென்மையான துணியாக இருக்கும்; ஆண்கள் அணியும் துணி குட்டையாக இருக்கும், பெண்கள் அணிவது கழுத்திலிருந்து கணுக்கால் வரையில் நீண்டிருக்கும். பெண்கள் அணியும் வெளித்துணி உடம்பு முழுவதும் மூடிவிடுவதாக இருக்காது; மார்பை மறைத்துத் தோள்களின்மேல் கிடக்கும்; இந்தத் துணி சிறந்த பூவேலைப் பாடுகளுடையதாகவும், பலநிறக் கற்கள் பதித்ததாகவும், பொன்-வெள்ளி சரிகை பின்னப்பட்டதாகவும் இருக்கும். ஆண்களால் அணியப்படும் வெளித்துணி நீண்டு அகன்று நல்ல மடிப்புகள் போடப்பட்டதாக இருக்கும். வலது கை தாராளமாக அசைவதற்கு ஏற்றுர்போல், அந்தத் துணி தோள்களைச் சுற்றிப் போடப்பட்டிருக்கும். அந்தத் துணியிலும் அழகான பூவேலைப் பாடுகள் காணப்படும். பெரும்பாலும் அந்தத் துணியின் ஒரு முனையை இடது தோள்மேல் முன்பக்கமாகப் போட்டு, மற்றொரு முனையைப் பின்பக்கமாகக் கொண்டுவந்து, வலதுகையின் கீழே புகவிட்டு, மீண்டும் இடது தோளின்மேல் ஏறிச்சென்று பின்னுல் விழும்படி போடுவார்கள். சிலவேளைகளில் அந்தத் துணியை இடது தோளின்மேல் சுற்றிவரச் செய்து, இரண்டு முனைகளையும் இழுத்து, வலது தோளுக்குமேல் அவைகள் பொருந்தியிருக்கும்படி முடிபோடுவார்கள் அல்லது ஊசியால் பொருத்திவைப்பார்கள்.

பெண்கள் தங்கள் தலைமயிரைப் பலவித பின்னல்களால் முடிபோட்டுக்கொள்வார்கள். அதனை விதவிதமாகக் காட்சியளிக்கும்படி செய்வார்கள். ஆண்கள் தங்கள் தலைமயிரைச் சிறியதாகக் கத்தரித்துக்கொள்வதோடு, அடர்ந்த தாடியையும் வளர்த்துக்கொள்வார்கள். பெண்கள் தங்கள் கொண்டையிலும், கழுத்திலும் மலர்மாலைகளை அணிந்துகொள்வார்கள்; ஆண்கள் தலையைச்சுற்றி மாலையைக் கட்டித் தொங்கவிட்டுக்கொள்வார்கள். வீட்டைவிட்டு வெளியேறும்போது ஆண்கள்-பெண்கள் இருபாலரும் சாதாரண செருப்பிலிருந்து, அடி முழுவதையும் மூடும் பூட்ஸ் வரையில், பலவிதமான மிதியடிகளைக் கொண்டிருந்தனர். வெளியே புறப்படும்போது கையுறைகளை மாட்டிக்கொண்டு, வெய்யல்-மழையினைத் தடுக்கக் குடைகளை ஏந்திச் செல்வர்.

பெண்கள் அழகுமிக்க—பலவேறு வடிவங்களைத் தாங்கிய பொன்-வெள்ளி அணிகலன்களைப் பூண்டனர். கொண்டை ஊசி, தலையணி, குஞ்சம், தோடு, தோட்டுமாட்டல், கடயம், காப்பு, கொலுசு, கழுத்துச்சங்கிலி, விரல்மோதிரம், காற்சதங்கை, முதலிய பல்வகையான அணிகலன்களை, மீன், பாம்பு, பெண், சிங்கம், மான், குதிரை, காய், பழம், கொட்டை, பூ, மனிதன்தலை போன்ற பல வடிவங்களில் செய்துகொண்டனர்.

பண்டைக் கிரேக்கத்தில் பெண்களுக்கு நல்ல மதிப்பு கொடுக்கப்பட்டது; ஆனால் அவர்கள் உரிமையுடையவர்கள் போலும் அல்லாமல், அடிமைகள்போலும் அல்லாமல் நடுத்தரமாக நடத்தப்பட்டனர். பெண்களுக்கு வீடுகளிலேயே சிறிதளவு கல்வி சொல்லிக்கொடுக்கப்பட்டது. அவர்கள் நூற்றல், நெய்தல், சமையல் முதலிய வீட்டுவேலைகளைப் பார்த்தல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். செல்வவான்கள் குடும்பங்களில் அடிமைகள் வேலைசெய்ய அமர்த்தப்பட்டிருந்தனர். பெண்கள் வீட்டில் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பகுதியில் வாழ்ந்தனர். கோவிலுக்குச் செல்லுதல்,

விழாக்களுக்குப் போதல், நாடகம் பார்க்கப் போதல் போன்ற முக்கியமான நிகழ்ச்சிகளைத் தவிர, பிற நேரங்களில் அவர்கள் வீட்டைவிட்டு அகலுவதில்லை.

கிரேக்கர்கள் விலைமகளிரை அனுமதித்திருந்தனர். அவர்கள் பெரும்பாலும் வேறுநாட்டவராகவும் அடிமைகளாகவும் இருந்தனர். அவர்கள் சொந்த வீடுகள் அமைத்துக்கொண்டு ஆண் பெண் இருபாலரையும் விருந்தினராக அழைப்பர். அவர்கள் அழகிலும், கவர்ச்சிகரமான பண்புகளிலும் மட்டும் சிறந்தவர்களாக அமைந்திருக்கவில்லை; கலையறிவு, இலக்கிய அறிவு ஆகியவற்றிலும் தேர்ந்தவர்களாக இருந்தனர். ஏதென்ஸ் நகரில் அத்தகையோர், "அழகாகவும் நகைச்சுவை படவும் பேசுவோர்" என்ற பெயரைப் பெற்றிருந்தனர். இவர்களில் அஸ்பாஷியா என்ற ஒருத்திதான் பெரிக்ளீஸுக்கு முதலில் காதலியாகவும், பிறகு மனைவியாகவும் ஆனாள்.

அடிமைகளை விற்பதும், வாங்குவதும், வேலைக்கு வைத்துக் கொள்ளுவதும் பண்டைய கிரேக்கர்களின் பழக்கமாகும். ஆண் பெண் என்ற இரு சாராரும் அடிமைகளாக இருந்தனர். ஆண் அடிமையைவிட பெண்ணடிமை மிகவும் துன்புறுத்தப்பட்டாள். அடிமைக்கு உரிமை எதுவும் வழங்கப்படவில்லை; ஆண்டைகளாகப் பார்த்து ஏதாவது அளித்தால்தான். அடிமைகளுக்குக் கொடுமைகள் இழைக்கப்பட்டால், அதற்குக் கேள்வி கேட்பாடு இல்லை.

கிரேக்கர்கள் இசை கேட்பதில் மிக்க விருப்பங்காட்டி வந்தனர். யாழ் போன்ற நரம்புக் கருவிகளும், இரட்டைக் குழல் போன்ற துளைக்கருவிகளும் சிறப்புப் பெற்றிருந்தன. வாய்ப்பாட்டு பாடியும் மகிழ்ந்தனர். திருமணம், விருந்து போன்ற விழாக்களின்போது பாட்டுப்பாட இசைவாணிகளை அமர்த்திக்கொள்வார்கள். வீடுகளில் இசை முழக்கியும் இன்புறுவர்.

திருமணங்கள் தாய்தந்தையரின் ஏற்பாட்டின்படிதான் நடந்தேறின. திருமணம் ஒரு ஆடம்பரமான விழாவாகவே

கொண்டாடப்பட்டது. பெண்களிடம் 'வரதட்சிணை' வாங்கும் பழக்கம் கிரேக்கர்களிடம் மிகவாக நிலவி வந்தது. சட்டப்படி ஒருவனும் ஒருத்தியுமாக வாழவேண்டும் என்பதுதான் முறை. இருதாரமணம் கிரேக்கச் சமூகத்தில் அனுமதிக்கப்படவில்லை. ஆண்கள் விலைமகளிரிடத்தும், அடிமைப் பெண்களிடத்தும் ஒழுக்கக் கேடாகவே நடந்துகொண்டனர்.

இறந்தபிறகு இறுதிச் சடங்குகள் நடத்துவதில் மிகக் கவலையோடு நடந்துகொண்டனர். இறந்தவரின் உடலம் புதைக்கப்படும் காலம் வரையிலும், அவரின் ஆன்மா வானுலகில் ஊசலாடிக் கொண்டிருக்கும் என்று மூடத்தனமாகக் கருதினர். மேலும், இறந்தவரின் உயிர் ஹதீஸ் என்ற மறுவுலகில் நான்கு ஆறுகளைக் கடக்கவேண்டி வரும்; முதல் ஆறு 'வருத்தம்' எனப்படுவது, இரண்டாவது 'அழுகை' எனப்படுவது, மூன்றாவது 'அடர்ந்த இருட்டு' எனப்படுவது, இவற்றிற்கு அப்பால் 'புனித ஆறு' இவை எல்லாவற்றையும் சுற்றி ஒன்பது பிரிவுகளாக ஓடுகின்றது; 'அடர்ந்த இருட்டு' என்ற ஆற்றைக் கடந்தவுடன் மறுகரையில், மீனஸ் என்ற நீதிபதி உட்கார்ந்திருப்பான்; அவன் இறந்தவரின் ஆன்மா உலகில் செய்த நடவடிக்கைகளைப்பற்றி விசாரித்தறிவான்; இறந்தவரின் ஆன்மா புண்ணியம் செய்திருந்தால் எல்லா வசதிகளும் நலன்களும் கிடைக்கக்கூடிய '**எலிசியம்**' என்ற இடத்திற்குச் செல்லும், பாபம் செய்திருந்தால் பயங்கர நரகத்திற்குப் போய்ச்சேரும் என்றும் குருட்டுத்தனமாக நம்பினர். இறந்தவுடன் பிணத்தின் வாயில் ஒரு சிறிய காசை வைப்பர்; அது எதற்கு என்றால், இறந்தவரின் ஆன்மா 'அடர்ந்த இருட்டு' ஆற்றைக் கடக்கும்போது, அதற்குத் துணையாக இருக்கவேண்டி படகோட்டிக்குக் கொடுப்பதற்காகும். பிணம் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லும்போது, உறவினரும் நண்பர்களும் துக்கங் கொண்டாடுபவர்களாக உடன் வருவர்; விலைக்குப் பேசிவைக்கப்பட்ட பெண்கள் ஒப்பாரி வைத்துக்கொண்டு வருவர்; சிலர் புல்லாங்குழல் வாசிப்பர். பிணங்களைப் புதைக்கவும் செய்வர். சில வேளைகளில் எரிக்கவும் செய்வர். புதைப்பதாயிருந்தால் குழிதோண்டியோ அல்லது

கல்லறை கட்டியோ அதில் பிணத்தை வைப்பர்; சுடுவதாயிருந் தால், விறகுகளை அடுக்கி அதில் பிணத்தைவைத்து எண்ணெய் யையும், நறுமணப் பொருள்களையும் வீசி எரியவிடுவர். பிணம் எரிந்து தணிந்தவுடன் அந்த மூட்டைத் திராட்சரசம் ஊற்றித் தணிப்பர்; பிறகு எலும்புகளை யெல்லாம் எடுத்துத் திராட்சை ரசத்திலும், எண்ணெய்யிலும் கழுவி ஒரு ஜாடியில் அடைப்பர். இந்த ஜாடி சில சமயங்களில் பொன்னால் செய்யப்பட்டிருக்கும். பிறகு அந்த ஜாடியைப் புதைத்து மேலே கல்லறை கட்டுவர். எரிக்கப்படாத—புதைக்கப்படும் பிணங்களைப் பெரிய மரப் பெட்டிகளிலோ அல்லது பெரிய மண்சால்களிலோ வைத்துப் புதைப்பர். கல்லறைகளுக்கு வழிபாடு செய்யும் பழக்கமும், கல்லறைகளின்மீது மலர் தூவிடும் பழக்கமும் பண்டைக் கிரேக் கர்களிடம் நிலவிவந்த பண்பாகும்.

பொதுவாகப் பண்டைக் கிரேக்கர்களின் பழக்கவழக்கங்கள் ஒழுக்கக் கேடுகள் நிரம்பியனவாகக் காணப்படினும், அவைகள் அவர்களுக்குக் கவர்ச்சிகரமானவை யாகவும், மகிழ்ச்சிகர மானவையாகவும் விளங்கியிருந்தன!

# பொது வாழ்க்கை

பண்டைக் கிரேக்கர்களின் பொது வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் பெருமையும் புகழும், சிறப்பும் செழுமையும் கொஞ்சி விளையாடியதைக் காணலாம். கிரேக்கர்களின் பொது வாழ்க்கை உலகோரின் சிந்தனையை எப்பொழுதும் கிளறிக்கொண்டிருக்கும் தன்மைவாய்ந்ததாகும். கிரேக்கம் போதுமான அளவுக்கு வெப்பம் வீசிய நாடாகையால், கிரேக்கர்கள் தங்களின் பெரும் பொழுதை வெட்ட வெளியிலே கழிக்க ஏதுவாக இருந்தது.

கிரேக்க அரசுகள் குடியரசுத் தன்மை கொண்டவைகளாக மிளிர்ந்த காரணத்தால், குடி மக்கள், பல்வேறு குழுக்களின் பேரால், மன்றங்களில் கூடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அரசியல் நடவடிக்கைகளெல்லாம், ஆளும் மன்றத்தினர் கூடி, செய்யும் முடிவுகளைப் பொறுத்தே, நிகழ்ந்தேறின. ஒருவன் நாட்டில் இருக்கலாமா, நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டுமா என்று தீர்மானிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால், அப்பொழுது மக்கள் கூடி, வாக்குகள் கொடுப்பார். முக்கியமான வழக்குகளை தீர்த்துவைக்க சுமார் அறுநூறு, எழுநூறு பேர்கள் நீதிபதிகளாக உட்காருவர்; பெரும்பான்மை வாக்கெடுப்புகளின் மூலம் தீர்ப்பு வழங்கப்படும். இப்படிப்பட்ட பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதைக், கிரேக்கர்கள் பெருமிதமாகக் கருதினர்.

திறந்த வெளி நாடக அரங்கில் காட்டாப்படும் நாடகங்களைக் காணவேண்டியது, ஒவ்வொரு குடி மகனின் நீங்காக் கடமையாகக் கருதப்பட்டதால், சுமார் 50,000, அல்லது 60,000 அளவில் மக்கள் கூடி மகிழ்வர். நாடகம் பார்ப்பது பொது வாழ்க்கையில் சிறந்த ஒரு நடவடிக்கையாகவே கருதப்பட்டது.

கோயில் திருவிழாக்களைக் கண்டுகளிக்கவேண்டிய பொது விழாக்களாகக் கருதி, ஆங்காங்கு பெருவாரியாகத் திரண்டு செல்வர். திருவிழாவின் அடிப்படை அறிவுக்கு ஒத்துவரா விடினும், பொதுமக்கள் மகிழ்ச்சி யடைவதற்கான சாதனமாக அது பெரிதும் பயன்பட்டு வந்தது.

நாள்தோறும் உடற்பயிற்சிக் கூடங்களுக்குச் செல்வதைப், பண்டைக் கிரேக்கர்கள் சிறந்த பழக்கமாகக் கொண்டிருந்தனர். உடற்பயிற்சிக் கூடங்கள் பொதுச்செலவில் ஊர்தோறும் நிறுவப்பட்டிருந்தன. இந்த உடற்பயிற்சிக் கூடங்களில் உடற் பயிற்சி மட்டுமல்லாமல், அறிவுப் பயிற்சியும் அளிக்கப்பட்டன. உடற்பயிற்சியில் ஓடுதல், தாண்டுதல், ஈட்டித்தூக்கி எறிதல், இரும்புத் தட்டுத்தூக்கி எறிதல், கல்தூக்கி எறிதல், வில்லில் அம்பு தொடுத்தல், குத்துச்சண்டை பழகுதல், மற்போர் செய்தல் போன்ற பல அடங்கியிருந்தன. உடற்பயிற்சியின் முக்கிய நோக்கம் உடலை வலிவாகவும், கட்டுக்கோப்பாகவும் ஆக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல், நகர மக்களைச் சிறந்த போர் வீரர்களாக ஆக்கவேண்டும் என்பதும் ஆகும். அந்தப் பயிற்சிக் கூடங்கள் நாளடைவில் பொழுதுபோக்கும் இடங்களாகவும், மகிழ்ச்சிபெறும் நிலயங்களாகவும் கருதப்பட்டன. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒலிம்பியாவில் நடைபெறும் ஒலிம்பிக் விழாவில் கலந்துகொள்ளவும், ஒலிம்பிக் விழாவைக் காணவும் மக்கள் திரள் திரளாகச் செல்வது வழக்கம். கிரேக்கநாடே விழாவின்போது ஒலிம்பியாவில் கூடியிருக்கும் என்று சொல்லலாம். ஒலிம்பிக் பந்தயத்தில் வெற்றியடைவோர்க்கு ஆலிவ்

இலைகளால் தொடுக்கப்பட்ட மாலையைத் தலையில் சுற்றுவர். அத்தகையோர்க்குப் பொது மண்டபங்களில் சிலைகள் நாட்டுவதோடு, ஊர்தோறும் அவர்களை ஊர்வலமாக அழைத்துச் செல்வர். மக்கள் ஒலிம்பிக் விழாவில் கலந்துகொள்வதற்காக ஊர்தோறும் இருக்கும் உடற்பயிற்சிக் கூடங்களில் பயிற்சிபெறுவர். உடற்பயிற்சியினைச் சிலவிடங்களில் ஆடைகளைந்த நிலையில் செய்வர்.

விளையாட்டுப் பந்தயங்களில் வெற்றி பெறுவோர்க்குக் கேடயம் முதலியவற்றைப் பரிசாகக் கொடுப்பது பண்டைக் கிரேக்கத்தின் வழக்கம். விளையாட்டுகளில் வைக்கப்பட்ட போட்டிப் பந்தயம், நாளடைவில் இசை, இலக்கியம், சிற்பம், ஓவியம் ஆகிய துறைகளிலும் புகுந்தன. அத்துறைகளில் வெற்றி பெறுவோர்க்கும் சிறந்த பரிசுகள் வழங்கப்பட்டன.

பெரிய பெரிய மாளிகைகளின் முன்னால் நீட்டிக் கொண்டிருக்கும் பந்தல்-மண்டபங்களைக், கிரேக்க தத்துவாசிரியர்கள், தங்கள் சொற்பொழிவாற்றும் மன்றங்களாகப் பயன்படுத்தினர். மண்டபத்தின் கீழ் ஒரு மேடை போட்டுக்கொண்டு அதில் ஏறி நின்று சொற்பொழிவாளர்கள் பேசுவார்கள்; பொதுமக்களும், மாணுக்கர்களும் சுற்றிலும் நின்று கேட்பார்கள். கடவுள், மதம், அரசியல், ஒழுக்கம், அறிவியல், வரலாறு போன்ற பல பொருள்கள் பற்றிய பிரச்சினைகளைக் குறித்துக் கற்றறிந்தோர் பேசுவார்கள்; பொது மக்கள் பேராவலோடு கூடியிருந்து கேட்பார்கள்.

சிறு பையன்கள் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து கல்விபயின்று வந்தனர். பணக்காரர்கள் தனி ஆசிரியர்களை அமர்த்திக் கொண்டு, வீடுகளில் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்து வந்தனர். ஆசிரியர் அப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு ஆசிரியராக மட்டுமல்லாமல், அவர்களின் கண்காணிப்பாளராகவும் இருந்து வந்தார்; ஆசிரியர்கள் பெரும்பாலும் அடிமைகளிலிருந்தே

தேர்ந்தெடுக்கப்பட்டனர். பள்ளிக்கூடங்களில் புலவர்களின் இலக்கியங்களைப் படித்தல், மொழியிலக்கணம் அறிதல், முக்கியமான பகுதிகளை மனப்பாடஞ் செய்தல், இசை இசைத்தல், யாழ் மீட்டல், செய்யுட்களை ஒப்புவித்தல் போன்றவை பாடதிட்டங்களாக வகுக்கப்பட்டிருந்தன. சுமார் பதினெட்டு அல்லது இருபது வயதுள்ளவர்கள். பேராசிரியர்களின் விரிவுரைகளைக் கேட்பர்; தத்துவக் கருத்துள்ளவர்கள் பற்றியும், சொற்பொழிவாற்றும் திறம் பற்றியும் அவர்கள் விரிவுரையாற்றுவார்கள். அரிஸ்டோபானீஸ் என்ற கிரேக்க நாடகாசிரியர், தம் நாடக நூல் ஒன்றில், ஏதென்ஸிலுள்ள மாணவர்கள் எவ்வளவு விடியற் காலையில் பள்ளிகள் சென்றனர் என்பதையும், கடும்பனிக்கட்டிகள் விழுவதையும் பொருட்படுத்தாது எவ்வாறு சென்றனர் என்பதையும், மிகத் தெளிவுபட விளக்கிக் காட்டியுள்ளார். கட்டுப்பாடும் மேற்பார்வையும் எவ்வளவு கடுமையாக மாணவர்கள் மீது கையாளப்பட்டு வந்தன என்பதுபற்றியும், ஒவ்வொரு மாணவனுடைய நடைஉடை பழக்க வழக்கங்கள் எவ்வாறு கவனிக்கப்பட்டுத் திருத்தப்பட்டு வந்தன என்பதுபற்றியும், நேர்த்தியான உடற்பயிற்சியின் மூலம் மாணவர்களின் உடல் எவ்வளவு கட்டுக்கோப்பாகக் கொண்டு வரப்பட்டது என்பது பற்றியும் அவர் அழகுற விளக்கிக் காட்டியுள்ளார்.

பொதுவாக எல்லா இடங்களிலும், குறிப்பாக ஏதென்ஸ் நகரில், பொதுமக்கள் அன்றாடம் கூடுவதற்கு ஏற்ற இடமாகக் காட்சியளித்தது, சந்தைக் கூடமேயாகும். ஏதென்ஸ் நகரில், அன்றாடம் சந்தைக்கூடம் சென்று வராதார் யாரும் இருந்திருக்க மாட்டார்கள். ஏதேனும் ஒரு வேலை குறித்துச் சந்தைக்கூடம் சென்று திரும்பவேண்டிய அவசியம் ஒவ்வொருவருக்கும் இருந்தது. மக்களுக்கு வேண்டிய அன்றாடத் தேவைகள் சந்தை கூடத்தில்தான் குவிக்கப் பட்டிருந்தன; பார்லி அரிசியிலிருந்து சுவையுள்ள மீன் வரையில், வெங்காயத்திலிருந்து கடவுளர்க்கு வேண்டிய நறுமணப் புகைப் பொருள் வரையில் எல்லாமும்

அங்கேதான் கிடைத்தன. நல்ல தூய்மையான எண்ணெய், மருந்து வகைகள், வெண்ணெய், புதிதாகச் செய்யப்பட்ட ரொட்டி, இனிமையான தேன், காய்கறிகள், பழவகைகள் எல்லாமும் அங்கே காணப்படும். வாடகைக்கு அமர்த்திக் கொள்வதற்கான சமையல்காரர்கள் அங்கே திரிவார்கள். விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட ஆண்-பெண் அடிமைகள் அங்கு ஒரு பக்கத்தில் நிறுத்தப்பட்டிருப்பர். பலர் கையிலே சாமான்களை ஏந்திக் கொண்டு விலை கூறித்திரிவர். புதிதாகவந்து சேர்ந்த சாமான்களைப் பற்றிக் கூவிக்கொண்டு பலர் குறுக்கும் நெடுக்குமாகச் சந்தைக் கூடத்தைச் சுற்றிவருவர். வீடு விலைக்கு வருகிறது வாங்குபவர்கள் உண்டா என்றும், அந்தத் திருடனைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் என்றும், ஓடிவிட்ட அடிமையைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பணம் கொடுக்கப்படும் என்றும், பல வாய்மொழி அறிக்கைகளை மக்கள் காதில் விழும்படி சொல்லிக்கொண்டே நிற்பர். ஊர்ப்பொது மக்களும், ஆண்-பெண் அடிமைகளும் மேலும் கீழும் நடந்து கொண்டும், கடைகளில் விலை பேசிக் கொண்டும், சாமான்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டும், கூடி நின்று பேசிக்கொண்டும் இருப்பார்கள். அங்கு இருக்கும் நிழல் தரும் மரங்களின் கீழே நின்று கொண்டு தத்துவாசிரியர் தம் கருத்துக்களைக் கூறிக் கொண்டிருப்பார்; சிலர் கூடி நின்று கேட்டுக்கொண்டும், சிலர் கேட்டுவிட்டுப் போய்க்கொண்டும் இருப்பார்கள். ஒரு பக்கத்தில் நாடோடிப் பாட்டின் இசை வந்துகொண்டிருக்கும்; மற்றொரு பக்கம் சிலைகள் செதுக்கும் சிற்பிகளின் கல்லுளியின் சத்தம் எழுந்துகொண்டேயிருக்கும். ஒரு பக்கம் வேடிக்கை விளையாட்டுக் காட்டுபவர்களைச் சூழ்ந்து கொண்டு, மக்கள் சிரிப்பொலியும், கையொலியும் எழுப்பிக் கொண்டிருப்பர். வேறோர்பக்கம் ஒருவன் கையில் ஒருயாழை வைத்துக் கொண்டு, அதன் நரம்புகளை மெல்ல மீட்டுவான்; மக்கள் பெருங் கூட்டமாகக் கூடுவர்; அவன் உடனே இல்லியட்டிலிருந்தும், ஒடிஸியிலிருந்தும் கதைகளைப் பாட்டாகப் பாட

ஆரம்பிப்பான்; ஒவ்வொருவரும் அந்தக் கதைகளை நன்கு அறிந்திருந்தார்களாதலால், பாடல்களை மிக இனிமையாகக் கேட்பர். ஒரு மூலையில் ஒருவன் எழுந்து நின்று, ஒரு காகிதச் சுருளை விரித்து, தான் பிறநாடுகளில் கண்ட பழக்க வழக்கங்களைக் கதைபோல் படிக்கத் தொடங்குவான்; பலர் கூடி நின்று, அதனைக் கேட்டு மகிழ்வர். ஒலிம்பிக் விழாவில் படித்துக்காட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்ட காவியம், உரைநடை, வரலாறு ஆகியவைகளை, முன் மாதிரியாக இருக்கட்டும் என்று கருதி, ஏதென்ஸ் சந்தைக் கூடத்தில் நின்று படிப்பர். இப்படிப்பட்ட பல நிகழ்ச்சிகளோடு கிரேக்க நாட்டுச் சந்தைக்கூடம், இல்லை, 'மக்கள் பொதுமன்றம்' திகழ்ந்தது. ஸூக்ஸிஸின் ஓவியத்தைப் பார்க்கும் போதும், பிராக்ஸிடிலீஸின் சிற்பத்தைக் காணும் போதும், பிண்டரின் பாட்டுக்களைக் கேட்கும் போதும், ஹெரோடாடஸ் சொற்பொழிவைச் செவி மடுக்கும் போதும் எத்துணை ஆயிரம் இளைஞர்கள் உணர்ச்சியால் உந்தப்பட்டு, ஊக்கத்தோடும் முயற்சியோடும் வீடு திரும்பியிருப்பார்கள்! அந்தக் காட்சியை எண்ணிடும் போதே உவகை உள்ளத்தைக் கிழித்தோடுவதைக் காணலாம்.

பண்டைக் கிரேக்கத்தைப்பற்றிக் குறிப்பிடும் இவையெல்லாம் இருந்தன, இப்பொழுது இல்லை என்று கூறிடும் நிலையைத் தான் வரலாறு உண்டாக்கிக் கொடுத்திருக்கிறது! என்ருலும் அரசியல், அறிவியல், கலையில், உடற்பயிற்சியில், கணிதவியல், வானியல் ஆகியவை பற்றிப் பண்டைக் கிரேக்கம் சொல்லிக் கொடுத்த கருத்துக்களில், அறிவுக்கும் காலத்துக்கும் ஒத்துவராதன போக, ஏனையவை, தூண்டாமணி விளக்குகளாக நின்று, உலகோரின் அறியாமையிருளைப் போக்கி, அவர்களை அறிவு நிலைக்கு அழைப்பதோடு, "கீர்த்திக்குக் கிரேக்கம்" என்ற பழமொழியை என்றென்றும் துலங்கச் செய்து கொண்டிருக்கின்றன!

★

109149

## மு. கருணாநிதி

★ இரத்தக் கண்ணீர்
★ ஆறுமாதக் கடுங்காவல்
★ விடுதலைக் கிளர்ச்சி
★ நாடும் நாடகமும்
★ பரம்பிரம்மம்
★ முத்தாரம்
★ பூந்தோட்டம்

## அரங்கண்ணல்

★ உடைந்த ஆசை
★ இதயகீதம்
★ ரஸ்புடீன்
★ ரோம்

## தில்லைவில்லாளன்

★ இருளும் — ஒளியும்
★ கிளிக் கூண்டு

## ப. வாணன்

★ ரஷ்ய இலக்கியம்

## சி. பி. சிற்றரசு

★ சாக்கியசிம்மன்
★ கொலம்பஸ்

## அண்ணாவின் அரிய நூல்கள்

- ★ கலிங்கராணி
- ★ ரோமாபுரி ராணிகள்
- ★ கம்பரசம்
- ★ கபோதிபுரக் காதல்
- ★ இலட்சிய வரலாறு
- ★ ஆரிய மாயை
- ★ குமரிக் கோட்டம்
- ★ கற்பனைச் சித்திரம்
- ★ ஆறு கதைகள்
- ★ உலகப் பெரியார் காந்தி
- ★ தீ பரவட்டும்
- ★ பணத் தோட்டம்
- ★ சிறு கதைகள்
- ★ வர்ணாஸ்ரமம்
- ★ நிலையும் நினைப்பும்
- ★ அவர்கள் சந்திப்பு
- ★ நாம்
- ★ 1858—1948

## மதியழகன்

- ★ அறிவின் தூதர்கள்
- ★ நன்றி யாருக்கு?

திராவிடப்பண்ணை

தெப்பக்குளம்
திருச்சி

Wrapper Printed at
The Trichinopoly United Printers Ltd., Tiruchi.